# Thamil Times Canada

a monthly magazine [redacted]

# தமிழ் டைம்ஸ்

[redacted]

ஏப்ரல் 15, 1998 இதழ்:2

இலவசம் FREE

## ஆபத்தான 24 மணிநேரம்!..



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Vijaya's Silk



- கல்யாண கூறைப் புடவைகள்
- பனாரஸ்
- காஞ்சிபுரம்
- தர்மாவரம்
- மைசூர் சில்க்
- காஷ்மீர் சில்க்
- நைலெக்ஸ்
- நூல் சாறிகள்
- சட்டைத் துணிகள்
- பட்டு வேட்டி
- சாரம்
- மணப்பெண் அலங்காரப் பொருட்கள்
- குர்தா
- பஞ்சாபி சூட்டுகள்
- லெங்கா சூட்டுகள்
- சில்வர் சாமான்கள்
- சிறுவர் சிறுமியர்களுக்குரிய அழகிய நவீன டிசைன்களில் ஆடைகள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- கோவில் பூசைப் பொருட்கள்
- சிற்றிசன் கைக்கடிகாரங்கள்

**யாவும் மிக மிக மலிவு விலையில்**

Children Garments, Sarees, Fabric and Gold Coverd Ornaments

*தமிழ் மக்களின் முதல்தர புடவை மாளிகை விஜயாஸ் சில்க்!*
*கல்யாணக் கூறைப் புடவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்!*
*சிற்றிசன் கைக்கடிகார அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள் (5 வருட உத்தரவாதத்துடன்)*
*அதி உயர் ரகம், ஸ்பெஷல் தெரிவுகள், சிறந்த சேவை நாணயமான விலை அனைத்திற்கும் நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்*

# விஜயாஸ் சில்க்

**Tel: (905) 273 7997 Fax: (905) 273 7323**

27 Dundas Street East, Mississauga, ON


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• PUBLISHING • GRAPHIC DESIGN • TYPESETTING & LAYOUT
• AUDIO & VIDEO PRODUCTION • VOICE MAIL RENTING
• TELEMARKETING • DELIVERY • ART WORKS • PRINTING

பத்திரிகைகள், சஞ்சிகைகள், விழா மலர்கள்,
நினைவு மலர்கள், வியாபார நிலைய விளம்பரங்கள்
மற்றும் சகல அச்சமைப்பு, அச்சடிப்புத் தேவைகளுக்கும்
'வொய்ஸ் மெயில்' வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும்,
சகல படம் வரைதல் சேவைக்கும்

**416 202 6362**

எமது கலைப் படைப்புக்களையும், கலைஞர்களையும்
உயர்த்திடுவோம்!

2365 Eglinton Ave. East,
Scarborough, ON. M1K 2M5
நியூ சங்கர் அன் கோவின் உள்ளே...

TCC THAMIL CREATORS OF CANADA




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'உதயன்' பத்திரிகையை இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

ஆரம்ப பள்ளிமுதல் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான அனைத்து தமிழ்ப் பாடப்புத்தகங்கள்

தமிழ் ஆங்கில அகராதிகள், சங்ககால இலக்கியங்கள்

பிரபல எழுத்தாளர்கள் கண்ணதாசன், கல்கி, அகிலன், லசஷ்மி, சாண்டில்யன், வைரமுத்து, ரமணிச்சந்திரன், கலைஞர் கருணாநிதி இவர்களின் நாவல்கள்

கிருபானந்தவாரியார், விவேகானந்தர் ஆகியோரின் சமய நூல்கள்

புலியூர் பாலு, புலியூர் கேசிகன் போன்றோரின் ஜோதிடப் புத்தகங்கள், மற்றும் யோகாசனப் புத்தகங்கள்

இலங்கை, இந்திய தினசரிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் இப்படி இன்னும் பற்பல தெரிவுகள்

உலக நாடுகள் அனைத்திற்கும் துரித பணமாற்றுச் சேவை
**World Wide Money Transfer**

இன்னும் பழைய, புதிய தேர்வுகளையும், வெளியீடுகளையும் உடனுக்குடன் பெற்றுக் கொள்ள விரையுங்கள்.

*Torontoவில்*
Parliament & Wellesley
595 Parliament St.
Five Star Trade உள்ளே...
**Tel.: (416) 944 1818**
**Fax: (416) 944 3424**

*Mississaugaவில்*
2580 Sheppard Ave. # 9
Newin Centre Mall
Mississauga, ON
**Tel.: (905) 306 0494**


*Scarboroughவில்*
3850 Finch Ave. E #Go1A
(Kennedy/Finch)
Scarborough, ON
**Tel.: (416) 292 9319**



# கலைமகள் புத்தக நிலையம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதயநாதம்

கறுப்புப் புறாவொன்று.........

அந்த அழகிய நீல நிற வான் பரப்பை மீண்டும் எல்லோரும் அண்ணாந்து பார்த்தார்கள். பார்த்தவர்கள் முகங்களில் பரவசமும் அதிசயமும் பரவத் தொடங்கியது. வெண்ணிற முகிற் கூட்டங்களுக்கிடையே அந்தக் கறுப்புப் புறா சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது.

ஆச்சரியம் என்னவென்றால் அந்தக் கறுப்புப் புறா குரலெழுப்பும் போது 'சமாதானம்' என்ற வார்த்தை அவ்வப்போது ஒலித்தது!

கறுப்பு நிறத்திற்கும் சமாதானத்திற்கும் எப்போது சம்பந்தம் உண்டாயிற்று! மேலும் ஆச்சரியம் மேலிட காதுகளைத் தீட்டிக்கொண்டு வானில் பறக்கும். புறாவின் குரலொலியைக் கவனமாகக் கேட்க கழுத்து வலிக்க அண்ணாந்து நோக்கினார்கள் அந்த ஊர் மக்கள்!

இப்போது புதிதாகப் புறாவின் கால்களுக்கிடையில் ஓர் நூதனமான பொருளைப் பார்த்தார்கள்!

புறா தன் கால்களை அழுத்தும் போது அந்த நூதனமான பொருளிலிருந்து வெளியேறும் ஏதோ ஒரு வகை நச்சுப் புகையின் வாடை பக்கத்தில் பறந்து செல்லும் வானம் பாடிகளை வசமிழந்து - துடிதுடித்து உயிர் துறக்க வைத்தது. வானம் பாடிகள் அலறித் துடித்து கூக்குரலெழுப்பிக் கொண்டு பூமியில் வந்து பொத்துப் பொத்தென விழுந்தன.....!

காதைத் தீட்டிக் கொண்டு வானைப் பார்த்தவர்களுக்கு காதில் கேட்டது புது வார்த்தை......

இப்போது மக்கள் உஷாராகிக் கொண்டிருந்தார்கள்....!

அடடா எவ்வளவு நேரம் ஏமாந்து போயிருந்தோம்.... கறுப்புப் புறாவாவது "சமாதானம்" பேசுவதாவது......? அது 'சாகடிப்போம்', 'சாகடிப்போம்' என்று சொல்லுவதை நாங்கள் "சமாதானம்" "சமாதானம்" என்று சொல்லுவதாக நினைத்து ஏமாந்து போய் விட்டோமே.......!

கறுப்பு நிறத்திற்கும் சமாதானத்திற்கும் எப்படிப் பொருத்தம் வரும்!

சந்திரிகா அம்மையாரே ஆயுதங்களைத் தூர எறிந்து விட்டு வெள்ளைக் கொடியை மட்டும் கையில் பிடித்துக் கொண்டு சமாதானம் பேசுங்கள்!

நிச்சயம் செவிசாய்ப்பார்கள் தமிழர்கள்! வெள்ளைப் போர்வையை போர்க்காமல்........, வெள்ளைப் புறாவாகவே வானில் பறந்து வாருங்கள் வழிமேல் விழி வைத்துக் காத்திருப்போம் எங்கள் விடியலுக்காக.....!

கவுரவ ஆசிரியர்

Thamil Times Canada (ISSN 1480-6142) is published monthly, FREE Issue. Address: F.P.P.O., P.O.Box 45593, 747 DonMills Road, ON., M3C 3S4. Advertising: 416 724 4254, Articles: 416 703 5689, Fax: 416 425 1202.
ஜேர்மனி: நிரைஞ்சன் - 7132 85137, நோர்வே: சிறி - 22 251191, சுவிஸ்: சீலன் - 41 7504165,
லண்டன்: மகேஸ்வரன் 81 520 5960, Fax: 81 923 7075

எழுத்தாளர்கள், செய்தியாளர்கள், தொகுப்பாளர்கள்: நிலவன், சண், கதிரவன், ஆனந்த், அனுஷியா, விஜய், றாவ்பி, மனோகரன், தேவா அக்கா, 'சங்கையூர்' ஜெகன், வாசு, சோதி, குயின்ரஸ் துரைசிங்கம், வீணைமைந்தன்.
மொழிபெயர்ப்பு: சண் முருகேசு. அட்டை அச்சடிப்பு: விவேகா அச்சகம். அச்சமைப்பு, வடிவமைப்பு: தமிழ் கிரியேட்டஸ் - கனடா.
நிர்வாக ஆசிரியர்கள்: சோதி, சக்தி. கவுரவ ஆசிரியர்: விஜய் ஆனந்த், உதவி ஆசிரியர்: அனுஷியா ஆனந்த்.

படங்களுக்காக நன்றிகள்: ரொறன்ரோ ஸ்டார், ரைம்ஸ், மக்கிலன்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 இதயநாதம்

8 ஆபத்தான 24 மணிநேரம்

அது 60 ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் பூமியுடன் மோதும் என்றும் இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது யப்பானிய நகரமான ஹிரோஸி மாவை தரைமட்டமாக்கிய அணு குண்டைவிட குறைந்தது இருபது மில் லியன் மடங்கு பேரழிவைக் கொண்டு வரும் என்றும் சொல்லப்பட்டது.

9 கிளின்டனுக்கு எதிரான வழக்கை நீதிபதி தள்ளுபடி செய்தார்

10 நைஜீரியர்களுக்கு நம்பிக்கை சின்னமாக திகழ்ந்த பாப்பரசர்

11 ஆபிரிக்காவுக்கு விஜயம் செய்த முதல் ஜனாதிபதி

13 ஈராக்கில் முதல்கட்ட பரிசோதனைகள் முடிவுற்றன

14 தொடரும் தொங்கு பாராளுமன்றம்

15 இந்திய அரசியல் யாப்பின் சிற்பிகள்!

18 21ம் நூற்றாண்டு பிறக்கப்போவதை முதன்முதலில் காணப்போவது யார்?


19 தெருவோரவாசிகள்

21 சிதறிய கனடிய செய்திகள்


23 ஜீன் சாரேயின் கியூபெக் பிரவேசம்

26 உலகவலம்


Thamil Times
Canada



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**30** வாழ்த்துகள்

**28** கனடாவில் குடும்ப உறவுகள்
(தொடர் கட்டுரை)

**37** மழலைகள் முற்றம்

**31** திருப்புமுனை (சிறுகதை)
"ஏன், தனது பிறந்த தினத்தைக் கொண்டாட மாஸ்ரர் ஆலமரத்தடியைத் தேர்ந்து எடுத்தார் என்று யாராலும் சொல்ல முடியுமா"?

**45** விளையாட்டு

**49** சினிமா

**52** குறுக்கெழுத்துப் போட்டி

**53** விமர்சனம்

**57** காகிதத்தில்
காதல் செய்து... (கவிதை)


அடுத்த இதழில்...

- கணனி தொழில்நுட்பம்

வீணைமைந்தன் எழுதும்
- சிறுகதை

# அனைவருக்கும் எமது சித்திரை புத்தாண்டு வாழ்த்துகள்!

தமிழ் ரைம்ஸ் கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பூமிக்கு வந்த ஆபத்து விலகியது!

கடந்த மாதத்தில் 24 மணித்தியாலம் இந்த பூமியில் இருந்த அநேகர் பயத்தின் விளிம்புக்கே சென்று விட்டனர். குறுங்கோள் ஒன்று பூமியை நோக்கி நேராக வந்து கொண்டிருப்பதாக தோன்றியதே அதற்குக் காரணம். ஆனால் 24 மணிநேரத்தில் வரவிருந்த ஆபத்து விலகிவிட்டதென அவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். காரணம், புதிதாக பெறப்பட்ட தரவுகள் தற்போதைக்கு அந்த ஆபத்து விலகிவிட்டது என்று தெரிவித்ததே.

செவ்வாய் கிரகத்திற்கும் சூரியனுக்குமிடையில் இதர கோள்களைப் போலவே சூரியனைச் சுற்றிச் செல்லும் நுண்கோள்களுள் ஒன்றுதான் பூமியை நோக்கி வந்துகொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட இந்த குறுங்கோள் 1.6 கிலோ மீற்றர் குறுக்களவு கொண்டது. இந்த குறுங்கோள் கடந்த வருடம் 6ம் திகதி அமெரிக்காவில் உள்ள அரிசோனா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விண்வெளி ஆராய்ச்சியாளர் ஜிம் ஸ்கொட்டி அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

அது 60 ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் பூமியுடன் மோதும் என்றும் இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது யப்பானிய நகரமான ஹிரோஸிமாவை தரைமட்டமாக்கிய அணு குண்டைவிட குறைந்தது இருபது மில்லியன் மடங்கு பேரழிவைக் கொண்டு வரும் என்றும் சொல்லப்பட்டது. சமுத்திரத்தில் அது விழுமாயின் நூற்றுக் கணக்கான மீற்றர் உயரத்துக்கு அலைகள் எழும்பி நாடுகளை அழிக்கும் என்று சொல்லப்பட்டது. தரைப் பகுதியில் விழுமாயின் ஐம்பது கிலோ மீற்றர் குறுக்களவு பாரிய கிடங்கொன்றை உருவாக்கி விடுமென்றும் சொல்லப்பட்டது.

இப்படி எல்லாம் அந்த 24 மணித்தியாலம் பூமி அமளிப்பட்டது. பூதாகரமாக உருவெடுத்த பிரச்சனை எவ்வளவு வேகத்தில் எழுந்ததோ அதே வேகத்தில் அடங்கி விட்டது. சுமார் ஒரு லட்சம் கிலோ மீற்றர் தூரத்தில் அது விலகிச் செல்லப் போவதாக விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்ததே அதற்குக் காரணம்.



## ஆபத்தான 24 மணிநேரம்!

**அந்த 24 மணித்தியாலம் பூமி அமளிப்பட்டது. பூதாகரமாக உருவெடுத்த பிரச்சனை எவ்வளவு வேகத்தில் எழுந்ததோ அதே வேகத்தில் அடங்கிவிட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளின்டனுக்கு எதிரான வழக்கை நீதிபதி தள்ளுபடி செய்தார்

அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் மீது தாக்கல் செய்யப்பட்டிருந்த பால் அவதூறு வழக்கு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது. பவுலா ஜோன்ஸின் வழக்கறிஞர்கள் பில் கிளின்டனைக் குற்றவாளியாகக் காண்பதற்குப் போதுமான அளவு சாட்சியங்களைத் தன் முன் வைக்கவில்லை என்று நீதிபதி தன் தீர்ப்பின்போது தெரிவித்தார். வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது எடுத்துக் கூறுவதற்கு உண்மையான பிரச்சனைகள் அதில் இல்லை என்றும் அவர் கூறினார். பில் கிளின்டன் ஆக்கன்சாஸ் மாநில கவர்னராக இருந்த 1991ம் ஆண்டு மே மாதம் 8ம் திகதி தன்னுடன் தவறாக நடந்து கொண்டார் என்றும் அதன் பின்னர் தனக்குப் பதவி உயர்வு மறுக்கப்பட்டதாகவும், பல தொல்லைகளைத் தான் எதிர்கொள்ள வேண்டியிருந்ததாகவும் கூறி ஆக்கன்சாஸ் நீதிமன்றத்தில் பில் கிளின்டனின் கீழ் பணிபுரிந்த பவுலா ஜான்ஸ் என்ற பெண் வழக்கொன்றைத் தாக்கல் செய்தார்.



அவரைத் தொடர்ந்து பல பெண்கள் தங்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்புகள் பற்றி கதை கதையாக எடுத்துக் கூற ஆரம்பித்தார்கள். முன்னாள் அமெரிக்க அழகு ராணியான எலிஸபெத் கீரேஷன் 1983ம் ஆண்டு இருவருக்கும் தொடர்பு இருந்ததாக கூறினார். அது மனம் ஒத்து இடம்பெற்ற ஒன்று என்றார் அவர். கத்லீன் வில்லி என்ற முன்னாள் வெள்ளை மாளிகை ஊழியர் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தோன்றி ஜனாதிபதி தன்னைத் தடவியதாகக் கூறினார். மொனிக்கா லெவின்ஸ்கி என்ற முன்னாள் வெள்ளை மாளிகை பயிலுனர் கிளின்டனுடன் தனக்கு இருந்த பாலியல் தொடர்பு பற்றி விபரித்தார். அது மட்டுமல்லாமல் ஒரு படி மேலே போய் இந்த தொடர்புகள் பற்றி பொய் கூறும்படி கிளின்டன் வற்புறுத்தியதாகவும் குற்றம் சுமத்தினார். லிண்டா டிரிப் என்ற முன்னாள் வெள்ளை மாளிகை செயலாளர் மொனிக்கா லெவின்ஸ்கி தனக்கும் ஜனாதிபதிக்கும் இருந்த தொடர்புகள் பற்றி தன்னிடம் விபரித்ததை வீடியோ படம் ஆக்கினார். உணவு விடுதிகளின் முன்னாள் பாடகரான ஜேனிபர் பிளவர்ஸ் என்பவர் கிளின்டனுக்கும் தனக்கும் மத்தியில் நீண்ட காலமாகத் தொடர்பு இருந்ததாகத் தெரிவித்தார். கிளின்டனுடன் தங்களுக்குத் தொடர்பு இருந்ததாக அல்லது இருப்பதாகச் சொல்லும் பெண்கள் இத்தனை பேர்தானா அல்லது தொடர்கதையாக இன்னும் தொடருமா என்பது போகப் போகத் தெரிந்து விடும்.

எனினும் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்களை மறுத்த பில் கிளின்டன் அவை அனைத்தும் வெறும் அபத்தம் என்றும், கீழ்த்தரமான முறையில் சுயவிளம்பரம் பெறுவதற்காக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். அவதூறுகளும், முரண்பாடுகளும் அமெரிக்க அதிபரைச் சூழ்ந்துள்ளன. இதனால் அவரது நடத்தை பற்றி சந்தேகம் கிளம்பி இருப்பினும் அதனால் எழுந்த அவப்பெயர் அவரை வெகுவாகப் பாதித்துள்ளதாகத் தெரியவில்லை என்பது மட்டும் உண்மை. ஆனால் அமெரிக்காவின் 200 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றில் பதவியில் இருக்கும் ஒரு ஜனாதிபதி எதிரியாக நீதிமன்றத்தில் தோன்றியது இதுதான் முதல் தடவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியர்களுக்கு நம்பிக்கைச் சின்னமாகத் திகழ்ந்த பாப்பரசர்

பாப்பரசரின் நைஜீரியா விஜயத்தை ஒட்டி அங்கிருந்து வெளியாகும் ஒரு பத்திரிகை "போப் எமது இறுதி நம்பிக்கை" என்ற மகுடம் இட்டு கட்டுரை ஒன்றை பிரசுரித்திருந்தது. நைஜீரியா நாட்டு மக்களின் அவல நிலையையும், தங்களின் அத்தகைய வாழ்வு போப்பாண்டவரின் வருகைக்குப் பின்னராவது மாறாத என்ற ஆதங்கத்துடன் அவர்கள் எதிர்பார்த்து இருந்ததையும் இந்தத் தலைப்பே படம் பிடித்துக் காட்டுகின்றது.

கியூபா நாடு 30 ஆண்டுகளுக்கு மேலாக பொதுவுடமைக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளைத் தாரக மந்திரமாகக் கொண்டியங்கும் ஒரு சர்வாதிகாரியின் கீழ் இயங்குகின்றது. பாப்பரசர் ஒரு சில மாதங்களுக்கு முன் அந்த நாடு சென்றார். அங்குள்ள மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்கக் கூடிய நிலை வராதா என்று ஏங்கினார்கள். அந்த நாட்டு அரசாங்கமோ தம் நாட்டின் மீது விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடை நீங்க வழி கிடைக்காதா என்று எதிர்பார்த்தது. அந்த நாட்டை பரம எதிரியாகக் கருதிய அமெரிக்கா அந்த நாட்டுடனான தனது நிலைப்பாட்டை சிறிது தளர்த்திக் கொள்ள முனைகின்றது.

நைஜீரியா கத்தோலிக்கர்களும் இஸ்லாமியர்களும் வாழும் ஒரு நாடு. 1982ம் ஆண்டு பாப்பரசர் அந்த நாட்டுக்கு விஜயம் செய்தபோது இஸ்லாமியர்கள் அவரைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் இஸ்லாமியர்கள் அவரைச் சந்திக்கவில்லை. ஆனால் பாப்பரசர் அவர்கள் இம்முறை அந்த நாட்டுக்கு விஜயம் செய்த போது அவரைப் பார்க்கத் திரண்ட லட்சோபலட்சம் கத்தோலிக்கர்களுடன் கணிசமான அளவு இஸ்லாமியர்களும் இருந்தனர். இரு சமயபேதம் கலந்த நாட்டுக்கு விமோசனம் பாப்பரசரின் வருகையின் பின்னராவது கிடைக்காதா என்ற நப்பாசையைக் காட்டுகின்றது.

நைஜீரியா எண்ணை வளம் மிக்க நாடு. வறுமையில் வாடிய நாடு எண்ணை வளத்தினால் செல்வம் கொழிக்கும் நாடாக மாறி பின்னர் ஆதாலபாதாளத்தில் விழுந்த நாடு. பாப்பரசர் அந்த நாட்டில் உரையாற்றிய போது அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும், மனித உரிமைகள் பேணப்படவேண்டும், வளம் மிக்க வாழ்வை மக்கள் அடைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அந்த நாட்டுத் தலைவர்களுடனும் இது பற்றி ஆராய்ந்தார்.



**பாப்பரசர் உரையாற்றிய போது அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும், மனித உரிமைகள் பேணப்படவேண்டும், வளம்மிக்க வாழ்வை மக்கள் அடையவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.**

பிலிப்பு 9 வயதுச் சிறுவன் பாப்பரசரின் வருகையின் பின்னர் உண்பதற்குப் போதிய உணவு, படிப்பதற்கு வசதி கிடைக்குமென்று எதிர்பார்க்கின்றான். கத்தோலிக்க மதகுருவான வணக்கத்துக்குரிய பிதா கோட்வீன் மனித உரிமைகள் மதிக்கப்படுமா என்று ஏங்குகின்றார். "போப் ஒரு பெரிய மனிதர். நாங்கள் எல்லோரும் அவரின் வருகையால் உருப்படியான ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியும்" என்றார் ஒரு இஸ்லாமியர். "தங்களின் பிரார்த்தனைகள், ஆசீர்வாதங்கள், ஆலோசனைகள் எம்மிடையே நிலவும் முரண்பாடுகளை நீக்கி இந்த நாட்டை நல்ல முறையில் கட்டியெழுப்ப எம்மை வழி நடத்தும் என்று நம்புவதாக" அந்த நாட்டின் தலைவரும் ஒரு இஸ்லாமியருமான ஜேனரல் சானி ஆபாசா கூறினார். இப்படிப் போப்பாண்டவரின் வருகையால் தங்களுக்கும் நாட்டுக்கும் விமோசனம் கிடைக்குமென்று நைஜீரியர்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். கியூபா நாட்டில் போப்பாண்டவரின் வருகையின் பின்னர் விமோசனம் ஏற்பட வழி உண்டு என்ற நம்பிக்கை ஒளி அங்கு தென்படுவது போன்று நைஜீரியாவிலும் மாற்றம் வருமா என்பது விரைவில் தெரிந்து விடும்.

• தொகுப்பு: கதிரவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கதவின் மூலம் சென்றவர்கள் இதன் மூலம் திரும்ப முடியாது. மீண்டும் திரும்ப முடியாத பிரயாணம் ஒன்றுக்கு இந்த வழி அவர்களை இட்டுச் செல்கிறது. இதன் மூலம் சென்றவர்கள் முடிவேயில்லாத தொல்லைகளைச் சந்திக்கப்போகும் பீதியுடனே சென்றார்கள்" இப்படிக் கூறுகிறது ஆபிரிக்க நாடான சென்கோலுக்கு அப்பால் உள்ள கோரி தீவிலுள்ள கதவொன்றின் மேல் எழுதப்பட்டுள்ள வாசகம். இந்த கதவின் ஊடாகத்தான் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட ஆபிரிக்கர்கள் அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு அடிமைகளாகக் கடத்தப்பட்டார்கள். 1680 முதல் 1786ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கால்களில் சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில் ஆண்கள் பெண்கள் என்ற வித்தியாசம் இன்றி இவர்கள் அடிமைகளை ஏற்றுவதற்கென்றே பிரத்தியேகமாகக் கட்டப்பட்ட கப்பல்களில் ஏற்றி அனுப்பப்பட்டனர். இப்படிச் சென்றவர்கள் எவருமே தமது சுய விருப்பத்தின் பேரில் சென்றவர்கள் அல்லர். அதனால்தான் இவர்களைச் சங்கிலிகளால் பிணைத்துக் கொண்டுசென்றார்கள். இந்த அடிமைகளின் அவலவாழ்வு ஆரம்பித்த இந்த கோரி தீவிற்கான பிரயாணத்துடன் அமெரிக்க ஜனாதிபதியான பில் கிளின்டன் தனது ஆபிரிக்கா விஜயத்தை முடிக்கிறார்.

# ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்த முதலாவது அமெரிக்க ஜனாதிபதி



அமெரிக்க நாடு அடிமைகள் வியாபாரத்தில் ஈடுபட்டது. லட்சக்கணக்கான ஆபிரிக்கர்கள் அடிமைகளாக எந்த ஊதியமும் இன்றி தனது நாட்டில் பலவந்தமாக வேலைவாங்கப்பட்டது, மிருகங்களிலும் கேவலமாக அவர்கள் நடத்தப்பட்டது தொடர்பான சிந்தனைகள் பில் கிளின்டனுக்கு ஆபிரிக்க மண்ணில் ஏற்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் அமெரிக்கா அடிமைகள் வியாபாரத்தில் ஈடுபட்டது தவறு என்பதை உகண்டாவில் உள்ள ஒரு கிராமத்தில் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டார்.

ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்த முதலாவது அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் ஆவார். அவர் கானா, உகண்டா, தென்னாபிரிக்கா, சென்கோல், ருவண்டா, போட்ஸ்வானா ஆகிய நாடுகளுக்கு 12 நாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். அந்த நாடுகளுடனான உறவுகளை வளர்த்துக் கொள்ளப் போவதாக அவர் அறிவித்தார். அவரது ஆபிரிக்க பிரயாணம் தனது நாட்டில் தன்மீது சுமத்தப்பட்ட பால் அவதூறு வழக்கின் அழுத்தத்திலிருந்து சிறிது தப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றா அல்லது அந்த நாடுகளுக்கு உண்மையில் அவர் பிரயாணத்தால் லாபம் ஏற்படுமா என்பது போகப் போகத்தான் தெரியும்.

# பாலியல் அவதூறுகளுக்கு மத்தியிலும் தனது செல்வாக்கை இழக்காத 'பில் கிளின்டன்'

அமெரிக்கா அல்லாத நாடுகளில் ஒரு நாட்டின் தலைவருக்கு இத்தனை பாலியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தால் அவரது அரசியல் சரித்திரம் எப்பவோ ஒரு முடிவுக்கு வந்திருக்கும். ஒரு விலைமாதுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்ற செய்தி வெளியானதைத் தொடர்ந்து இங்கிலாந்து நாட்டின் அமைச்சர் ஒருவர் பதவி விலகினார். ஆனால் அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் மீது பொதுமக்களின் ஆதரவு குறையாமலே இருக்கிறது. இத்தனைக்கும் அவர் மீது தொடர்கதையாக பாலியல் குற்றச் சாட்டுகளும் அந்தக் குற்றங்களை மறைக்கும்படி கோரி தவறான நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்ற குற்றச் சாட்டுகளும் எழுந்தன. எல்லாக் குற்றச்சாட்டுகளையும் வெறுமனே மறுத்துவிடுகிறார். எனினும் பெண்களை அவர் விளையாட்டுப் பொருட்களாகப் பாவித்தார். பின்னர் அவர்களது வாயை அடைப்பதற்கு மக்களது வரிப்பணத்தில் இயங்கும் நிறுவனங்களைப் பயன்படுத்தினார். என்ற குற்றச்சாட்டுகளும் தொடரத்தான் செய்கின்றன. இந்தக் குற்றச் சாட்டுகள் எல்லாம் நிரூபிக்கப்படுமா அல்லது புஸ்வானமாகப் போய்விடுமா என்ற கேள்விக்கு பதில் கிடைத்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருமுறை வாருங்கள் உண்மைதானா பாருங்கள்!

**Sunflowers**
**FURNITURE**




உங்கள் சகல தளபாடத் தேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்

நம்பமுடியாத மலிவு விலைகள்! ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

Bed Room sets

Living Room Sets

Dining Sets

all other Household Furniture




**3024 Kennedy Road**
(Kennedy/Finch)

**Tel: (416) 609 8556**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் முதல் கட்ட பரிசோதனைகள் முடிவுற்றன

ஈராக்கில் ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுத பரிசோதகர்கள் தமது பூர்வாங்க ஆய்வுகளை முடித்துக் கொண்டுள்ளனர். ஈராக் ஜனாதிபதி சதாம் ஹீஷேனின் பக்தாத்தில் உள்ள மாளிகையில் நடந்த பரிசோதனையுடன் அவர்களது முதல் கட்ட பணி முடிவடைந்தது.

சதாம் ஹீசேனின் எட்டு மாளிகைகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் பரிசோதனைகளை முன்னர் முடித்திருந்த ஐக்கிய நாடுகள் சபை ஆய்வாளர்கள் அந்த எட்டு இடங்களையும் பரிசோதிக்க எண்ணியபோது சதாம் ஹீசேன் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் பணிப்பினை உதாசீனம் செய்தார் என்று கூறி அமெரிக்கா உட்பட பல மேற்குலக நாடுகள் ஈராக் மீது தாக்குதல் நடத்த கங்கணம் கட்டினார்கள். இராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் ஒரு தீர்வினை எட்ட முடியாது போய்விடுமோ, ஆயுதம் தானா பிரச்சனையைத் தீர்க்கப் போகிறது. உலகம் கவலையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோது; ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் ஈராக் சென்றார். அந்த நாட்டுத் தலைவர்களுடன் கலந்து பேசி ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுத பரிசோதகர்கள் தடைசெய்யப்பட்ட எட்டு இடங்களிலும் பரிசோதனை செய்யப்படுவதற்கு அங்கீகாரத்தைப் பெற்றார். உலகம் நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

ஆயுத பரிசோதகர்களுடன் இராஜதந்திரிகளும் உடன் செல்ல வேண்டும் என்ற ஈராக்கின் நிபந்தனையும் ஏற்கப்பட்டது. சிறிலங்காவின் தூதுவரான ஜெயானந்த தனபால் தலைமையில் இராஜ தந்திரிகள் உடன் செல்ல முதல் கட்ட பரிசோதனைகள் முடிந்து விட்டன. அந்த எட்டு இடங்களிலும் இருந்து ஆய்விற்குத் தேவையான சில தடயங்களை பரிசோதகர்கள் சேகரித்துள்ளார்கள். ஆனால் பரிசோதகர்கள் தாங்கள் வெகுஜன பேரழிவு ஆயுதங்கள் எதையும் உற்பத்தி செய்வது தொடர்பான தடயம் எதனையும் காணவில்லை என்று ஈராக்கிய அரச தலைவர்கள் தெரிவித்துள்ளார்கள். இது உண்மைக்குக் கிடைத்த மாபெரும் பரிசு என்று அந்த நாட்டுத் தலைவர்களில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

• தொகுப்பு: சண்

# பொருளாதார அழிவின் எல்லையில் யப்பானா?

பொருளாதார சீரழிவின் விளிம்பில் யப்பான் நிற்பதாக எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. விலைகளில் ஏற்பட்ட சரிவுகள் அந்த நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதித்துள்ளன.

1930களில் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியுடன் ஒப்பிட்டு பேசும் அளவுக்கு யப்பான் நாட்டு பொருளாதாரம் சீர்குலைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வரவு செலவுத் திட்டத்தில் அதிகரித்துக் காணப்படும் பற்றாக்குறை, வங்கிகள் எதிர்நோக்கும் சிக்கல்கள், பொருளாதார வளர்ச்சியில் தென்படும் ஸ்தம்பித நிலை ஆகியவற்றால் யப்பானின் நாணயம் பெறுமதி குறையும் நிலையில் இருப்பதாக வெளிநாட்டவர்கள் தெரிவித்தாலும் அந்த நாடு இந்நிலையிலிருந்து விரைவில் மீண்டுவிடும் என்று அந்த நாட்டுத் தலைவர்கள் உறுதியாகக் கூறிவருகிறார்கள்.

# தவறாக தண்டிக்கப்பட்டாரா?

கிளேடன் ஜோன்ஸன் ஒரு தொழில் நுட்ப சித்திரக்காரர். 1989ம் ஆண்டு அவரது மனைவி வீட்டின் பேஸ்மன்டில் இரத்தம் தோய்ந்த நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். அது ஒரு விபத்து மரணம் என்று அப்போது தீர்மானிக்கப்பட்டது. மனைவி இறந்த சில நாட்களுள் ஜோன்ஸன் இளம் பெண் ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது, இறந்த அவரது மனைவியின் பேரில் பெருந்தொகை காப்புறுதி ஒன்று செய்யப்பட்டிருந்தது ஆகியவற்றால் அயலவர்கள் கண்டபடி கதைக்க ஆரம்பித்தனர். வதந்திகள் கால், கை வைத்து வளர்ந்ததினால் ஜோன்ஸன் மீது ஐயம் ஏற்பட்டு நீதிமன்றத்தில் அவர் நிறுத்தப்பட்டார். 1993ம் ஆண்டு குற்றவாளியாகக் காணப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அத்துடன் இந்த விடயம் மறக்கப்படவில்லை. சம்பவம் நடந்த அன்று ஜோன்ஸன் வேலைக்குச் சென்றதை பலர் பார்த்திருக்கிறார்கள். அவரது மனைவி இறந்த சமயத்திற்கு சிறிது முன்னதாக அயலவர் ஒருவரை ஜோன்ஸன் தனது வீட்டிற்கு தொலைபேசி மூலம் அழைத்திருந்தார். தனது மனைவியை மேலிருந்து கீழே தள்ளும் மனநிலையில் அவர் இருந்திருந்தால் இப்படி வேறு ஒருவரை வீட்டுக்கு அந்த நேரம் வரச்சொல்லியிருக்க முடியுமா என்பது போன்ற கேள்விகள் எழுந்துள்ளதால் உண்மையில் ஜோன்ஸன் தனது மனைவியைக் கொலை செய்தாரா அல்லது வீணாகத் தண்டிக்கப்பட்டாரா என்று கேள்வி எழுந்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக உண்மையைக் கண்டறிய பலரும் கிளம்பியுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் தொங்கு பாராளுமன்றம்




• தொகுப்பு: ஃறவி (Rafi)

தேர்தல் முடிவுகள் வெளியாகி, இன்னுமொரு முறை எந்தக் கட்சிக்கும் அறுதி பெரும்பான்மை வாக்குகள் கிடைக்காத நிலையில் - அரசியல்வாதிகளின் நர்த்தனங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கும்வேளை - மன்னிக்கவும், நரித்தனங்களும் நிறைவேறிக் கொண்டிருக்கும்வேளை நாடு என்னவாகுமோ என நினைத்து அப்பாவியான மக்கள் அழுது கொண்டிருக்கிறார்கள். அழவேண்டும். வினை விதைத்தவன் வினையறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்பதுதானே உண்மை. அரசியல் என்றாலே அரிசி - இயல் என நினைக்கும் மக்கள் - ஆமாம்! இன்று அரிசியின் விலை என்ன என்பதைப் பார்த்து - ஒருநாள் கூத்திற்கு மீசை வைக்கும் மக்கள் இருக்கும் வரை இந்திய அரசியலின் போக்கும், அரசியல்வாதிகளின் போக்கும் மாறப்போவதில்லை என்பது திண்ணம்.

சரி - நாட்டின் பெரிய பதவியிலிருக்கும் ஜனாதிபதிக்காவது பிரதமரை தேர்ந்தெடுப்பதில் சுலபமாக இருந்ததா என்றால் அதுவுமில்லை. அதிக இடங்களைப் பிடித்து தனிப்பெரும் கட்சியாக இருக்கும் பாரதீய ஜனதாவை ஆட்சியமைக்க அழைக்கலாம் என முடிவு செய்த வேளையில் ஜெயலலிதா தம்முடைய சுயரூபத்தை காட்டி ஒரு ஆட்டம் ஆடி நின்றார். அவ்வேளையில் ஜனாதிபதி மட்டுமல்ல, அரசியல்வாதிகளும் மக்களும் இந்தியாவை கண்கொத்திப் பாம்பாக கவனித்துக் கொண்டிருக்கும் பொருளாதார மேதைகளும் சற்றி ஆடித்தான் போய்விட்டனர். ஜெயலலிதாவின் கோரிக்கைகளுக்கு இணங்க மறுத்த பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் வாற்பாய் அரசமைப்பதை கைவிடுமளவிற்கு துணிந்து நின்ற செயலால் அவருடைய புகழ் ஒரு படி மேலே சென்றது. இத்தகைய நிலையை எதிர்பார்க்காத ஜெயலலிதா, இன்னும் தம் பிடியை இறுக்கினால் தாம் அகல பாதாளத்தில் தள்ளப்பட்டுவிடுவோம் என்பதைப் புரிந்து கொண்ட உடனேயே, பாரதீய ஜனதா அரசிற்கு நிபந்தனையற்ற ஆதரவை அளிப்பதாக ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதி தப்பித்துக் கொண்டார். ஆதரவு கொடுத்தே ஆகவேண்டும் என்ற கட்டாய சூழ்நிலையில் ஜெயலலிதாவுக்கு அரசியலில் கடைசி அத்தியாயம் எழுதப்பட்டிருக்கும்.

சரி எல்லாமே முடிந்து விட்டது. பாரதீய ஜனதா அரசும் பதவியேற்று விட்டது. இந்த அரசாவது ஐந்து ஆண்டுகள் ஆட்சி புரியுமா? சுதந்திரமாக கொள்கைகளை வகுத்துக் கொள்ள முடியுமா என்றால், நிச்சயமாக அது முடியாது என்பதை மட்டும் உறுதியாக கூறமுடியும்.

காரணம் என்னவென்று எல்லோருக்குமே தெரியும். தேவகௌடா அரசு, குஜிரால் அரசு கவிழ்ந்ததற்குப் பின்னும் இதனை விளக்கிக் கொண்டிருக்கத் தேவையில்லை. ஐக்கிய முன்னணிக்கு ஒரு காங்கிரஸ் என்றால் பாரதீய ஜனதாவிற்கு ஒரு ஜெயலலிதா, ராமகிருஷ்ண ஹெக்டே; மம்தா பானர்ஜி மற்றும் ஜார்ஜ் பெர்ணான்டஸ். இவர்கள் எந்நேரம் காலை வாரி விடுவார்களோ தெரியாது.

மொத்தத்தில் இந்தியாவின் கஷ்டகாலம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. எரிகிற வீட்டில் கிடைத்தது ஆதாயம் என அரசியல் வாதிகள் பிடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.


உங்களுக்குத் தேவையான
இலங்கை, இந்திய, கனடிய
அனைத்து உணவுப் பொருட்களுக்கும்

அருணா மார்க்கட்

Aruna Market
East & West Indian and Canadian Groceries
Indian Package Tours & Money Transfer
Video Convert System

3891B Keele Street, North York, ON. M3J 1N6
Tel: (416) 636 0638 Fax: (416) 636 3912




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொங்கு பாராளுமன்றம் தங்கள் நாட்டில் ஏற்படக்கூடும் என்பதை எதிர்பார்க்காத இந்திய அரசியல் யாப்பின் சிற்பிகள்!

இவ்வாண்டு மார்ச் மாதம் 28ம் திகதி புதிய இந்திய மத்திய அரசு பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றது. நம்பிக்கைத் தீர்மானத்தின்மீது இடம்பெற்ற விவாதத்தின்போது தெலுங்கு தேச கட்சி உறுப்பினர் பேசிய போது "இந்தியாவில் கூட்டணி சகாப்தம் தொடருகிறது. இனிமேல் எந்த ஒரு கட்சியும் மாநில கட்சிகளின் உதவியின்றி தனித்து ஆட்சியமைக்க முடியாது. இதை மனதில் கொண்டுதான் தெலுங்கு தேசக் கட்சி பாரதீய ஜனதா அரசை ஆதரிக்க முன்வந்துள்ளது" என்று கூறினார். இந்தியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளாக கூட்டணி அரசுகளே இருந்து வந்துள்ளன. தேர்தலின்போது தொங்கு பாராளுமன்றம் ஏற்படுவது அங்கு சகஜமாகிவிட்டது.

இந்திய அரசியல் யாப்பை உருவாக்கிய அரசியல் பண்டிதர்கள் தொங்கு பாராளுமன்றம் இந்தியாவில் ஏற்படலாம் என்பதை எதிர்பார்த்து அதற்கேற்ற விதத்தில் விதிகளை உருவாக்கவில்லை என்று அமெரிக்க அரசியல் வித்தகர் ஒருவர் கூறியுள்ளார். கலாநிதி கிரான்வில் ஆஸ்டின் இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் நன்கு ஆராய்ந்தவர். அவர் எழுதிய 'இந்திய அரசியல் யாப்பு: ஒரு தேசத்தின் அத்திவாரம்' என்ற நூல் இந்திய அரசியல் சட்டத்தினை நன்கு விளக்கிக் கூறும் ஆணித்தரமான நூல் என்று கருதப்படுகிறது. இந்திய நீதிபதிகள் தமது தீர்ப்புகளின்போது அந்த நூலில் இருந்து மேற்கோள்கள் காட்டுவது வழக்கம். அத்துணை சிறப்பு வாய்ந்தவர் ஆஸ்டின். இவர் 'இந்திய அரசியல் யாப்பை உருவாக்கியவர்கள் சிறந்த அரசியல் ஞானம் உள்ளவர்கள். எனினும் அவர்கள் பாராளுமன்றத் தேர்தலின்போது தனித்து ஒரு கட்சி அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெறாத நிலை ஏற்படலாம். என்பதை எதிர்பார்க்கவேயில்லை" என்று குறிப்பிட்டுள்ளார். இந்திய அரசியல் யாப்பு உருவாகியபோது எத்தனையோ வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டதை அப்பொழுது தொகுக்கப்பட்ட கலாநிதி ராஜேந்திர பிரசாத்திடம் இருந்த குறிப்புகள் எடுத்துக் காட்டுகின்றன என்றும் ஒரு இடத்திலாவது தொங்கு பாராளுமன்றம் ஏற்படக்கூடிய வாய்ப்பு பற்றி எடுத்துக் கூறப்படவில்லை என்றும் ஆஸ்டின் குறிப்பிடுகிறார். அரசியல் யாப்பு உருவாக்கப்பட்ட சமயம் காங்கிரஸ் கட்சி பெரும் செல்வாக்குடன் இருந்தது. எங்கும் எதிலும் அந்தக் கட்சியின் தாக்கம் இருந்தது. அதனால் ஒரு காலத்தில் அந்தக் கட்சியின் செல்வாக்குக் குறையலாம் என்று அரசியல் யாப்பு சிற்பிகள் சிந்தித்தே இருக்கமாட்டார்கள் என்றும் ஆஸ்டின் தெரிவித்துள்ளார். அந்தச் சமயம் "நேருவைப் பார்த்து ஒரு கட்சிக்கு பெரும்பாண்மை கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்று எவராவது கேட்டிருந்தால், அப்படியான நிலைமை ஏற்படும்போது பார்த்துக் கொள்ளலாம் என்றே கூறியிருப்பார்" என்கிறார் கலாநிதி ஆஸ்டின் 1945-1950 காலப் பகுதியில் இதுபற்றி எவரும் சிந்திக்காது விட்டதில் அதிசயம் இல்லை, ஏனெனில் சுதந்திரப் போராட்டத்தை முன்நின்று நடத்திய காலம் முதல் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு அதிகரித்தே சென்றது. அந்தக் காலத்தில் நாட்டின் நலன் தங்கள் சொந்த நலனை விடப் பெரிது என்று நினைத்த தியாகிகள் அரசியல் தலைவர்களாக இருந்த காலம். ஆனால் காலம் செல்லச் செல்ல ஊழல் மன்னர்கள் அந்தக் கட்சியில் நுழைந்ததும் ஜனநாயகத்தின் பரிணாம வளர்ச்சியும் காங்கிரஸ் அல்லாத மாற்றுக் கட்சிகளும் இந்தியாவில் சிறப்பிடத்தைப் பெற்று வந்தன.

தொங்கு பாராளுமன்றம் இந்தியாவில் ஜனநாயகம் வளர்ந்து வருவதைத்தான் குறிப்பிடுவதாக ஆஸ்டின் தெரிவித்துள்ளார். இந்தியா சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகளே ஆகியுள்ளன என்றும் 200 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஜனநாயகம் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கும் அமெரிக்காவின் அரசியல் யாப்பு அப்பொழுது இல்லாதது என்று கூற முடியாத ஒன்று என்றும் இந்தியாவில் சில சமயம் அரசியலில் ஸ்தரத்தன்மை இல்லாது போவதில் அதிசயம் ஒன்றும் இல்லை என்றும், இந்தியர்கள் தொங்கு பாராளுமன்றம் ஏற்படுவதைக் கவனத்தில் எடுத்து அதற்குத் தக்கவிதமாக செயல்பட ஆரம்பித்து விட்டதாகவும், கடந்த இரண்டு ஆண்டுகளில் இடம்பெற்ற நிகழ்வுகள் அதனைச் சுட்டிக் காட்டுவதாகவும் இது ஒரு ஆரோக்கியமான ஜனநாயக வளர்ச்சி என்றும் ஆஸ்டின் கூறுகின்றார்.

• தொகுப்பு: சண்



ELI TAX SERVICE

தனிநபர்/ வியாபார கணக்குகள்/ வருமானவரி பத்திரங்கள்/ வரி திட்டமிடல்/ RRSP மற்றும் அனைத்துத் தேவைகளுக்கும்

*Aruna Market*, 3891B Keele Street, North York, ON. M3J 1N6

Tel: (416) 650 1349 Fax: (416) 636 3912




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## AUTO MECHANIC SHOP

**உங்களின் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் எம்மை நாடுங்கள்.**


*Tune-up, Brakes*
*Transmission & Engines Rebuilt*
*Air-Condition*
*Body Work*

Domestic, European & Japanese Car & Vans
we are specialized in
**HONDA**


S. Ruban
**(416) 299-0452**



# *IRIE*
**CA SERVICES**



86 Melford Dr., Unit 14
Scarborough, ON



# THARSANAS SUPERMARKET

Sri Lankan, East Indian, Canadian Food Items, Fresh Fish, Fresh Meat, Vegetables, Video, Audio & Video Transfer

தமிழ், மலையாள, இந்தி வீடியோப் பிரதிகளுக்கு நாடுங்கள்.

எவர்சில்வர் பாத்திரங்கள் விற்பனைக்குண்டு



**Video, Audio**
**Gifts, Clothing**
**Ever Silver**

உங்கள் சகல தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

## தர்ஷனாஸ்
## சுப்பர் மார்க்கட்


3415 Fieldgate Drive
Dixie & Bloor
Mississauga ON
Tel: (905) 625 8152

2700 Kipling Ave
Kipling & Steeles
Rexdale ON
Tel: (416) 745 3317
Fax: (905) 270 7838
Video(416) 745 3955

29 Dundas St. East
HY-10 & Dundas
Mississauga ON
Tel: (905) 270 7576



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# MARK WOOD INC.

## General Contracting

**• RESIDENTIAL • COMMERCIAL • INDUSTRIAL**

**General Contractors Builder Renovators**

**FOR YOUR PROFESSIONAL HOME IMPROVEMENT NEEDS**

- CARPENTRY
- PLUMBING
- STORE FIXTURE
- CUSTOM HOME BUILDER
- FIRE PROTECTION
- DESIGN BUILD
- BULIDING PERMIT
- GENERAL REPAIRS
- BASE RENOVATIONS
- CARPET, CERAMIC TILE, HARD WOOD FLOORING

**DO IT ONCE AND DO IT RIGHT**


Provide Building Permits & Drawing
We do Insurance Claim Jobs.
Fully Insurance




தமிழ் மகனின்
தரமான சேவை

தொடர்புகளுக்கு
**பகவத் சிங்**
Mark. Pagavathsing

**ONE PHONE CALL AWAY**
**(416) 492 6888**





**Bus.: (416) 492 6888 Fax: (416) 321 8416**
**Pager: (416) 379 4864 Res: (416) 321 6888**
**2721 Markham Road, Unit. 15, Scarborough, ON**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21ம் நூற்றாண்டு பிறக்கப்போவதை முதன் முதலில் காணப்போவது யார்?

பசுபிக் சமுத்திரத்தில் இருக்கும் சின்னஞ் சிறிய தீவான 'டோங்கோ'வில் உள்ள மக்கள் தான் 21ம் நூற்றாண்டு பிறக்கப்போவதை முதன் முதலில் பார்க்கும் பாக்கியம் பெற்றவர்கள். தாங்களும் அந்தப் பெருமையை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் உலகில் உள்ள பலநாட்டு மக்களும் தற்போது ஆர்வம் கொண்டுள்ளார்கள். அதனால் தென்மேற்கு பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள டோங்கோவில் தங்குவதற்கு இப்பொழுதே இடம்பிடிக்கும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டு உள்ளனர்.

நாள் பிறப்பதை நிர்ணயிக்கும் உலகக் கோட்டுக்கு மிக அருகில் டோங்கோ தீவு அமைந்துள்ளது. எனவே 21ம் நூற்றாண்டின் முதல் நாளான கி.பி. 2000 ஜனவரி 1ம் திகதியின் சூரிய உதயத்தை டோங்கோவில் இருப்பவர்களே முதன் முதலில் பார்ப்பார்கள். அந்த நாட்டிலுள்ள ஹோட்டல்களில் இருக்கும் அறைகள் எல்லாம் கிறிஸ்மஸ் முதல் புத்தாண்டு வரை ஏற்கனவே முற்பதிவு செய்யப்பட்டு விட்டன என்பது மற்ற நாடுகளில் உள்ள மக்கள் அந்த நாடு சென்று 21ம் நூற்றாண்டு பிறப்பதை மற்றவர்களுக்கு முன்னதாக பார்த்துவிட வேண்டுமென்று ஆர்வம் கொண்டுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது.

டோங்கோவில் போலீனிஸிய மக்கள் வாழ்கின்றார்கள். அழகான அந்த நாடு எந்தக் காலத்திலும் குடியேற்ற நாடாக இருந்ததில்லை. மன்னர் ஆட்சிதான் அங்கு தொடர்ந்து நடக்கின்றது.



• தொகுப்பு: அனுஷியா

# கனடிய விண்வெளி வீரர் சென்றுள்ள விண்வெளி கலம்

*நரம்பு மண்டலத்தை மூளை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றது என்பதைக் கண்டறிய விண்வெளி கலம் ஒன்று ஏப்ரல் 17ம் திகதி புறப்பட்டுச் சென்றது. அமெரிக்காவின் விண்வெளி கலமான கொலம்பியா 16 நாட்கள் விண்வெளியில் தங்கியிருக்கும். இதில் ஏழு விண்வெளி வீரர்கள் இருக்கின்றனர். இவர்களின் ஒருவர் கனடியர். கனடிய விண்வெளி வீரரான வைத்திய கலாநிதி டேவ் வில்லியம்ஸ் ரொறன்ரோவில் உள்ள சனிபுரூக் வைத்தியசாலையில் பணியாற்றியவர். பாலர் பருவம் முதல் விண்வெளியில் பறக்க வேண்டுமென்ற அவரது கனவு இப்பொழுது நனவாகியுள்ளது. எலி, நத்தை என சுமார் 2000 உயிரினங்களையும் விண்வெளி வீரர்கள் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளனர். விண்வெளிப் பயணத்தின்போது நரம்பு மண்டலத்தில் ஏற்படும் பாதிப்பு குறித்து இவர்கள் 15 நாட்கள் 22 மணித்தியாலங்கள் ஆராய்ச்சி செய்வார்கள். அப்போது 26 விதமான ஆராய்ச்சிகளை இவர்கள் மேற்கொள்வார்கள். இதில் கனடியரின் ஆராய்ச்சிகள் இரண்டும் அடங்குகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருவோரவாசிகள்



நம்பிக்கை. எப்படியும் உயிர் வாழ்ந்து விடலாம் என்ற நம்பிக்கை. இந்த ஒன்றை மட்டும் மூலதனமாகக் கொண்டவர்கள்தான் தெருவோரவாசிகள். தமது உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றை அடைந்திட தமது அற்ப சொற்ப வளங்களையும் செலவிட்டு, நாளை உதயமாகப்போகும் நாள் ஏதாவது வழி காட்டாமலா போகப்போகிறது என்ற நம்பிக்கையில் வாழும் ஜீவன்கள். மதுபானம் போதைப் பொருள் போன்ற ஏதாவது ஒன்றுக்கு அடிமையாகி விட்டால் அவர்கள் பாடு நரகம்தான். நாளாந்தம் இவர்கள் பெறும் அனுபவங்கள், தொல்லைகள் இவர்களின் உடலை மட்டுமல்ல, உள்ளத்தையும்தான் பாதிக்கச் செய்து விடுகின்றன. நீங்காத தாகத்தையும் ஏற்படுத்தி விடுகின்றன.

இவர்கள் தாமாக விரும்பி இந்த வாழ்க்கைக்கு வந்தவர்கள் அல்லர். சமுதாயத்தின் அலுத்தல்களினால் வந்தவர்கள். இன்றைய தங்கள் நிலைக்குத் தாங்கள் வந்த விதத்திலும் பொறுப்பில்லாது பாதுகாப்பும் பாசமும் சொரிய வேண்டியவர்களின் அசிரத்தையால் வந்தவர்களும் இதில் அடங்கி இருக்கிறாகளே அந்தக் கொடுமையை என்ன என்று சொல்வது?

"இவர்கள் பெயர்......;" அது எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும். பேரில்தான் என்ன இருக்கிறது! குப்பைத் தொட்டியில் சாப்பிடக்கூடியதாக அல்ல, இந்த அகோரப் பசியைப் போக்கக் கூடியது எது அகப்படுகிறதோ, அதைப் பொறுக்கி உண்பாள் இவள். மூலை முடுக்கு ஏதாவது கிடைத்தால் அங்கு படுத்து விடுவாள். இவள் எங்கிருந்து வந்தள்? அவளுடைய பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள். இவர்களுக்குப் பிள்ளைகள் இவளும் இவளுடைய சகோதரியும் தான். படிப்பில் இவள் பெரிய சுட்டி. கலையார்வம் மிக்கவள். இசையும், நடனமும் இயல்பாகவே இவளுக்கு வந்தன. இவளது ஆசிரியர்கள் எல்லோரும் இவளுக்கு ஒரு சிறந்த எதிர்காலம் இருப்பதாகக் கூறினார்கள். இவளும் கனவு கண்டாள். ஆனால் இவளது வீடோ நரகம்தான். கோபக்காரத் தந்தை. அவருக்கு உள்ள ஒரே பொழுது போக்கு மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் அடித்து நொறுக்குவதுதான். தனது கணவரிடமிருந்து தனது பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய தாயாரோ இது எல்லாம் சகஜம்தான். எந்த வீட்டில்தான் இப்படியில்லை என்று கூறிவிடுவாள். பெற்றோர் இடையே ஏற்படும் சண்டைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இவளும் இவளது சகோதரியும் வெளியில் தங்க ஆரம்பித்தார்கள். அது உறவினர் வீடாக இருக்கலாம், அல்லது நண்பிகளின் வீடாக இருக்கலாம். படிப்பும் தடைப்படுகிறது. பெற்றோர்களுக்கு இடையில் ஏற்பட்ட விரிசல் காரணமாக இருவரும் பிரிந்து விடுகிறார்கள். தாயுடன் சென்ற இவள் மீண்டும் தனது பழைய பாடசாலைக்குச் செல்கிறாள். இவளைப் பார்த்த ஆசிரியர்களுக்கு அதிர்ச்சி. எப்படி இருந்தவள் இப்படிப் போய்விட்டாளே!

கணவனைப் பிரிந்த தாயார் தன்னை நம்பி வந்த மகளையும் விட்டு விட்டு ஒரு ஆசை நாயகனுடன் சென்று விடுகிறாள். எந்த ஆதரவும், தங்க இடமும் இல்லாத மகள் வீதிக்கு வருகிறாள். உயிர் வாழவேண்டும். தெருவோரவாசி ஆகிறாள். படிக்க வேண்டும், நல்ல நிலைக்கு வரவேண்டும் என்று அவள் கண்ட கனவு நிராசையாகிறது.

தெருவோரத்தில் வசிப்பவர்கள் வாழ்க்கையில் தோல்வி கண்டவர்கள் அல்லது படு சோம்பேறிகள் என்று பொதுவாக அவர்களைக் காண்பவர்கள் எண்ணுகிறார்கள். இவர்களில் பலர் சமூகத்தால் வஞ்சிக்கப்பட்டவர்கள் என்பது இவர்கள் கடந்து வந்த பாதையை சற்று நுழைந்து பார்த்தால் தெரியும்!

• தொகுப்பு: விஜய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயாஸ்


## சுப்பர் மார்க்கட்



உங்களுக்குத்
தேவையான
இலங்கை, இந்திய
உணவுப் பொருட்கள்,
வாசனைத் திரவியங்கள்,
மற்றும் இலங்கையில் தயாராகும்
பழஜாம், பழரசங்கள், பனம்பொருட்கள்,
அத்துடன் தென்னிந்திய, மேற்கிந்திய
கனடியப் பாவனைப் பொருட்களையும்
பெற்றுக் கொள்ளச் சிறந்த நிறுவனம்.



மலிவு விற்பனையிலும்
திறந்தவெளிச் சந்தையிலும்
பொருட்களை விற்கும் ஸ்தாபனம்



உடன் மரக்கறி வகைகள்,
பால், பழ வகைகள்,
ஆட்டிறைச்சி, கோழியிறைச்சி
என்பனவற்றையும்
பெற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் விரும்பும் அனைத்து பாடல் ஒலிப்பதிவு
நாடாக்கள், பழைய புதிய வீடியோப் படங்கள்
மற்றும் இலங்கை, இந்திய பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன் கிடைக்கும்.

# UTHAYA'S SUPER MARKET

5010 Steeles Ave. West, Unit.14, Etobicoke, ON
(Steeles & Kipling)

**Tel: (416) 740 7971 Fax: (416) 740 8568**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைமை தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு கியூபெக்கில் கைவிடப்படுமா?

பொதுமக்கள் விரும்பாத பட்சத்து இறைமை தொடர்பாக மீண்டும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறாது என்று கியூபெக்கின் முதல்வர் லூசியன் போச்சார்ட் அறிவித்துள்ளார். சர்வஜன வாக்கெடுப்பில் நாம் வெற்றி பெறுவோம் என்ற சூழ்நிலையும் இருந்து, மக்களும் அதனை விரும்பினால் மட்டுமே சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறும் என்று அவர் கூறியுள்ளார். இது அவரது முன்னைய நிலைப்பாட்டிற்கு மாறானதாகும்.

அடுத்து வரும் தேர்தலில் வெற்றி பெற்றால் இறைமை தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறும் என்று அவர் கூறியிருந்தார். இப்போழுதோ வெற்றி பெறக் கூடிய சூழ்நிலை இருந்தால் மட்டுமே சர்வஜன வாக்கெடுப்பு என்ற வரையறையை அவர் விதித்துள்ளார். அத்துடன் அந்தத் தேர்தல் கியூபெக் மாகாணத் தேர்தல் நடந்து முடிந்த ஒரு வருடத்திலா, இரண்டு வருடத்திலா அல்லது மூன்றாவது வருடத்திலா என்பது இப்போது சொல்லமுடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இறைமை தொடர்பாக மீண்டும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு கியூபெக்கில் இடம்பெறுவதை அந்த மாகாண மக்களில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமானோர் விரும்பவில்லை என்பதை சமீபத்தில் வெளியான புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இதுதான் பேர்சாட்டின் மனமாற்றத்துக்குக் காரணமா?

# விஸ்வரூபம் எடுத்துள்ள வீடில்லா பிரச்சனை

ரொறன்ரோ அவலநிலைப் பிரதேசம் என மத்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. போர்கால சூழ்நிலை போன்று விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற கோஷமும் எழுப்பப்பட்டுள்ளது. மிக வேகமாக வளர்ந்து வரும் வீடற்றோர் பிரச்சனைக்கு தேவையான நடவடிக்கைகளைத் தனித்து ரொறன்ரோ நகர சபையால் எடுக்க முடியாது என்றும், அதனால் ரொறன்ரோ ஒரு அவலநிலைப் பிரதேசம் என பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்றும் தங்குமிட வசதியற்றோர் தொடர்பாக ஆலோசனை கூறும் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த குளிர் காலத்தில் ஒன்ராறியோ கிழக்கு, கியூபெக் ஆகிய இடங்களில் பனிப் புயலினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் போன்ற நிலை இந்த வசந்த காலத்தில் ரொறன்ரோவில் ஏற்படப் போவதாக இந்தக் குழுவினர் எச்சரித்துள்ளனர்.

மத்திய அரசிடமிருந்து போதுமான நிதியைப் பெற்றுக்கொள்ள ரொறன்ரோ நகர சபை தீவிர முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்றும், அவசியம் ஏற்படின் கனடிய இராணுவத்தினரின் உதவியைப் பெற பின்நிற்கக் கூடாதென்றும் குழுவினர் கூறியுள்ளனர். வசந்த காலம் குளிர்காலத்தைப் போன்று மோசமானதல்ல. குளிர்காலம் முடிந்து விட்டதென்று கூறி சில காப்பகங்கள் தங்கள் கதவுகளை மூடிவிட ஏது உண்டென்றும், காலநிலை மாறிவிட்டதென்று பலர் தாங்களாகவே வெளியில் தங்கும் அபாயம் ஏற்படப் போவதாகவும் குழுவினர் மேலும் எச்சரித்துள்ளனர். அதனால் தங்குமிட வசதியற்றோர் தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அவர்களால் முன் வைக்கப்பட்டுள்ளது.

# சிவப்பு வெளிச்சம் விழுந்த பின்னரும் நிறுத்தாது வாகனம் ஓட்டும் சாரதிகள்

சிவப்பு வெளிச்சம் விழுந்த பின்னரும் வாகனங்கள் நிறுத்தப்படாது ஓட்டிச் செல்வது ரொறன்ரோ பகுதியில் அதிகரித்துள்ளது. அதனால் பாதசாரதிகள் கடக்கலாம் என்ற சமிஞ்ஞை விழுந்த பின்னர் செல்லும் பாதசாரதிகள் இந்த வாகனங்களால் மோதப்படுவதும் அதிகரித்துச் செல்கிறது. சில தினங்களுக்கு முன்னரும் கூட ஒரு விபத்து நடந்துள்ளது. இந்த சமயம் 13 வயதுள்ள மாணவி ஒருவரை சிவப்பு வெளிச்ச சமிஞ்ஞை விழுந்த பின்னரும் நிறுத்தாது ஓட்டப்பட்ட வாகனம் மோதியுள்ளது. இந்த விபத்தினால் கடுமையான காயங்களுக்கு உள்ளான இச்சிறுமி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இந்த விபத்தை ஏற்படுத்தியவரோ வாகனத்தை நிற்பாட்டி அடிபட்ட பிள்ளையின் நிலையைக் கவனியாமல்,

- மறுபக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிதறிய கனடியச் செய்திகள்

# தேவாலயத்தில் தஞ்சம் அடைந்துள்ள அகதிகள்

நாடுகடத்தப்படும் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட குடும்பம் ஒன்று தேவாலயம் ஒன்றில் தஞ்சம் அடைந்துள்ளது. 70 வயதான நாடிம் பாசஸ் என்பவரும் அவரது வயதுவந்த நான்கு பிள்ளைகளும் பாக்டேலில் உள்ள *Our Lady of Lebanon* தேவாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர். பாலஸ்தீனியர்களான இவர்கள் தங்களுக்கு என்று ஒரு நாடு இல்லாது ஐம்பது வருடங்களாக மத்திய கிழக்கில் உள்ள நாடுகளில் அலைந்து திரிந்தவர்கள். புதிதாக இஸ்ரேல் நாடு உதயமானதைத் தொடர்ந்து அகதிகளானவர்கள்.

1998ம் ஆண்டு கனடா வந்து அகதி அந்தஸ்து கோரிய அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. நாடுகடத்தப்படும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கும் அதேவேளை இவர்களை கைதுசெய்வதற்கான கட்டளையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த குடும்பம் கனடாவில் நன்கு வேர் ஊன்றி விட்டதாகவும், அவர்களுக்கு இங்கு நிறைய உறவினர்கள் இருப்பதாகவும், வங்கியில் பணம் இருப்பதாகவும், வேலைகள் வழங்குவதற்குப் பலர் முன் வந்திருப்பதாகவும் இவர்களின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார். இவர்களுக்கு யூத இனத்தவர்கள் மட்டுமல்லாது முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் கூட தங்களது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். இவர்கள் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்தாலும் கூட குடிவரவு அதிகாரிகளால் இவர்களைக் கைது செய்ய முடியும். ஆனால் அவர்களின் அந்த நடவடிக்கையை மக்கள் குறை கூறச் செய்வர் என்பதால் அவர்கள் தயங்குவதாக இருக்கலாம். அதனால் தேவாலயத்தின் நில அறையில் தங்கியிருக்கும் இவர்கள் அங்கு தொடர்ந்து தங்குவது சிரமம் என்பதால் விரைவில் வெளியே வருவார்கள் என்றும் அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்று அவர்கள் காத்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

# நுரையீரல் புற்றுநோயால் இறக்கும் பெண்களின் தொகை அதிகரிப்பு

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்தவர்களிலும் பார்க்கத் தற்போது கான்ஸர் நோயினால் இறப்போர் குறைந்துள்ளது. ஆனால் அதே நேரம் கான்ஸர் நோயினால் பீடிக்கப்படுவோர் தொகை அதிகரித்துள்ளது. நுரையீரலில் ஏற்படும் புற்றுநோய் பெண்களில் அதிகரித்துக் காணப்படுகிறது. இந்த வருடத்தில் மட்டும் 8.200 பெண்கள் இந்த நோயினால் பீடிக்கக் கூடும் என்றும், என்றுமே இல்லாத அளவுக்கு அவர்களில் 6,500 இந்த நோயினால் இறக்கக் கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. கடந்த முப்பது வருடங்களில் இந்த அதிகரிப்பு நான்கு மடங்காகும். புகை பிடிப்பதனால்தான் இந்த சாவுகள் நிகழ்கின்றன. இந்த வருடம் 10,000 ஆண்கள் இந்த நுரையீரல் புற்றுநோயினால் இறப்பார்கள் என்று கருதப் படுகிறது. ஆனால் அதே நேரத்தில் புகை பிடித்தலின் கேடு பற்றிய பிரசாரங்களை அதிகளவில் கேட்டு இந்த தீய பழக்கத்தை விடும் ஆண்கள் தொகை அதிகரித்தே செல்கின்றது. ஆனால் ஆண்களிடையே இந்த நோயினால் இறப்போர் தொகை குறைய வாய்ப்பு இருக்கிறது. பத்து வருடங்களுக்கு முன் ஒரு லட்சம் பேருக்கு 81 என்று இருந்த விகிதாசாரம் தற்போது 72 ஆகக் குறைந்துள்ளது.

இந்த வருடம் மட்டும் 129,200 பேர்கள் கான்ஸர் நோயினால் புதிதாகப் பீடிக்கப்படலாம் என்று கருதப் படுகின்றது. இந்நோயினால் 62,700 பேர்கள் இறக்கக் கூடும். வருமுன் காப்பது என்ற தாரக மந்திரம் இப்பொழுதும் செயல்படுகிறது. புகை, மது பாவித்தலைக் குறைத்தல், ஆரம்பத்திலேயே வைத்திய சோதனைகளைச் செய்து கொள்ளல் என்றும்போல் இப்பொழுதும் சிறந்த வழிகளாகக் கருதப்படுகின்றன.

முன் பக்கத் தொடர்ச்சி

உதவிகள் எதனையும் செய்யாமல் சென்று விட்டார். எனினும் அதிஷ்டவசமாக சம்பவம் நடந்த இடத்தில் நின்ற ஒருவர் வாகனத்தின் இலக்கத்தை குறித்து வைத்துக் கொண்டு இலக்கம் 911ஐ தொலைபேசியில் அழைத்து விபரத்தைத் தெரிவித்தார். பொலிசார் ரெஜினா டிசன்ஹவுல் என்பவரை இந்த விபத்து சம்பந்தமாக கைது செய்துள்ளனர். ஆபத்து விளைவிக்கக் கூடிய விதத்தில் வாகனத்தைச் செலுத்தி காயம் உண்டாக்கியது, விபத்து நடந்த பின்னர் அந்த வாகனத்தை நிறுத்தாது ஓட்டியது ஆகிய குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

சிவப்பு சமிஞ்ஞை விழுந்த பின்னரும் வாகனத்தை ஓட்டிச் செல்வோரை பதிவு செய்து வைக்கக் கூடிய புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தால் இத்தகைய விபத்துக்களைத் தவிர்த்திருக்கலாம் என்று இந்த விபத்தைக் கண்டவர்கள் கூறியிருக்கிறார்கள். புகைப்படக் கருவி தங்களை அவதானிக்கிறது என்ற பயம் இருந்தால் வாகன ஓட்டிகள் தாமாகவே பயத்தில் வாகனத்தை கவனமாக ஓட்டுவார்கள் என்று அவர்கள் கருதுகிறார்கள். இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஒரு பொலிஸ் அதிகாரி கூட வாகன ஓட்டிகள் தமது வாகனங்களை சற்று மெதுவாக ஓட்டக் கூடிய ஏதாவதொரு ஏற்பாடு இருந்தால் அது வரவேற்கத்தக்கதே என்று கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீன் சாரேயின் கியூபெக் பிரவேசம்

குளத்தில் ஒரு கல்லைப் போட்டால் அதனால் ஏற்படும் சிற்றலை குளத்தின் நாலா பக்கத்திற்கும் போகும். அதுமட்டுமல்ல மீண்டும் கல் விழுந்த இடத்திற்கு திரும்ப வரும் அதன் பலம் குறையும் மட்டும் இது தொடரும். இதுபோலவே கியூபெக் மாநிலத்தில் ஏற்படும் அரசியல் சளசளப்புகளால் கனடா முழுவதுமே பாதிப்படைகிறது. இதற்கு நல்ல உதாரணம், கியூபெக் மாநிலத்தின் லிபரல் கட்சித் தலைவர் ஜோன்ஸன் தனது பதவியிலிருந்து விலகத் தீர்மானித்ததும் அதனையடுத்து ஏற்பட்டுள்ள, ஏற்படப்போகும், அரசியல் வியூகங்களும்.

ஜீன் சாரே கனடிய கொன்ஸர்வேடிவ் கட்சியின் தலைவராக இருந்தார். நடந்து முடிந்த பொதுத் தேர்தலுக்கு முன்னைய பொதுத் தேர்தலில் செல்வாக்கில் ஆதாளபாதாளத்தை அடைந்துவிட்ட கொன்சர்வேடிவ் கட்சியை ஒருவாறு மேலே கொண்டு வந்தவர் இவர். அதற்குள் அவரது சொந்த மாநிலமான கியூபெக்கில் இருந்து எங்களைக் காப்பாற்று என்ற அபாயக்குரல் எழுந்தது. கியூபெக் மாநிலத்தின் லிபரல் கட்சியின் தலைவரான ஜோன்ஸனின் இடத்துக்குப் பொருத்தமானவர் ஜீன் சாரேயே. அதனால் அவர் அந்தப் பதவியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை பலமாக எழுந்தது. ஜீன் சாரேயும் அதனை ஏற்று அங்கு போகவேண்டியதாயிற்று. கியூபெக் மாநில லிபரல் கட்சியின் தலைவர் இவரே என்பது இப்பொழுது நிரூபணமாகிவிட்டது. தேர்தல் ஒன்று கியூபெக்கில் நடைபெறுமாயின் அவருக்கு வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு அதிகமென்ற சமிஞ்ஞைகள் இப்பொழுதே தோன்ற ஆரம்பித்து விட்டன.

கொன்சர்வேடிவ் கட்சியின் தலைமை ஜீன் சாரேயிடம் இருந்து போவது நிச்சயம் என்றதும் ரீபோம் கட்சியின் தலைவர் மானிங், லிபரல் கட்சிக்கு எதிரான கட்சிகள் எல்லாம் ஒரு கூரையின் கீழ் ஒன்றுசேர வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தார். அவரது நோக்கம் வலதுசாரிப் பக்கம் சாயக்கூடிய எல்லோரையும்



ஒன்றாகச் சேர்த்து லிபரல் கட்சிக்கு எதிரான பலமான மாற்றுக் கட்சியை அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதே.

ஜீன் சாரே கியூபெக் மக்களின் நாடியை நன்கு பிடித்துப் பார்த்துவிட்டுத்தான் கியூபெக் அரசியலில் தனது தலையை நுழைத்தார். கியூபெக் கனடாவின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமா அல்லது பிரிந்து விடவேண்டுமா என்ற சர்வஜன வாக்கெடுப்பு இடம்பெறுவதில் அக்கறை இல்லாதவர்களே இன்று கியூபெக்கில் அதிகமாக உள்ளனர். சமீபத்தில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் சர்வஜன வாக்கெடுப்பை விரும்பாதவர்கள் 60 வீதமானவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. லிபரல் கட்சி நாடு பிரியாமல் இருக்க வேண்டும் என்று விரும்பும் ஒன்று. அதனால் கியூபெக் மாநிலத்தில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலையைப் பார்த்தபின் இப்படியான சந்தர்ப்பம் போனால் கிடைக்காது என்ற எண்ணத்தில் அந்த வாய்ப்பை இறுகவே பற்றிக் கொண்டார் ஜீன் சாரே.

• தொகுப்பு: நிலவன்

# கியூபெக் நகர மண்டபத்தில் மீண்டும் கனடிய கொடி!


1990ம் ஆண்டுக்குப் பின்னர் கியூபெக் நகர மண்டபத்தில் இப்பொழுதுதான் மீண்டும் கனடியக் கொடி பறக்க விடப்பட்டுள்ளது. கியூபெக் மாகாணத்திற்கு விசேட அந்தஸ்து வழங்க வேண்டுமென்ற மீச் லேக் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து கியூபெக் நகர சபை மண்டபத்தில் கனடிய கொடி பறப்பது தடைசெய்யப்பட்டிருந்தது. இப்பொழுது மீண்டும் அங்கு இக்கொடி பறக்க விடப்பட்டிருப்பது கனடாவுக்கு நல்ல சகுணம் என்று அவதானிகள் கூறுகின்றார்கள்.

**உங்களிடமிருந்து சிறுகதைகள் வரவேற்கப்படுகின்றன.**

Fax: 416-425-1202



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# J.A.B
## TRAVELS & TOURS

**Your Guaranteed Travel Agent**

சுற்றுலாவுக்கான பஸ் ஒழுங்குகள் செய்து தரப்படும்.

ஐரோப்பிய நாடுகளுக்கான விசேட இரயில் பாஸ் பெற்றுக் கொள்ளலாம்.


ஆசியா, ஐரோப்பியா, அவுஸ்திரேலியா, வட, மத்திய, தென் அமெரிக்க நாடுகளுக்கு சிறந்த வகையில் உங்கள் பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

Office Hours: Mon - Fri 10.00 am - 7 pm, Sat 10.00 am - 4.30 pm
Call us for All your Travel Requirements-
We offer Best, fares to any destination around the World special fares to
South Asia, Europe, South Pacific & North America

1185 Dundas St. E, #203, Mississauga, ON. L4Y 2C6

**Tel: (905) 896 8320** **Fax: (905) 896 7965**

**The Only Choice is the Best Choice**




# சுதந்திரதாகம்

**வீடியோ ஒளிநாடா**

## இப்போது விற்பனையாகிறது!

# J.A.B
## TRAVELS & TOURS

**Tel: (905) 896 8320**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ விராட்விஸ்வகர்ம பரப்ரஹ்மம்

# Sri Sakthy

## Jewellery



சிவா ராமையா பத்தரின்
கைவண்ணத்தில்
உங்கள் மனதில்
இருப்பதை
நகை வடிவில் செய்து
பெற்றுக் கொள்ளுங்கள்.

திருத்த வேலைகள்
உடன் செய்து
கொடுக்கப்படும்.

உங்களுக்கு
விரும்பியவர்களின்
படங்களை
உங்களுக்கு
பென்ரன்களில்
பதித்து தருகிறோம்!

2525 Pharmacy Ave
Scarborough, ON
M1W 2K2


**Tel.: (416) 499 4070**
**Fax: (416) 499 6945**

## ஸ்ரீ சக்தி ஜுவலறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• தொகுப்பு: ஆனந்த்




## சீனா

சீனாவின் புதிய பிரதமராக சூ ரொன்ஜி நியமிக்கப்பட்டார். அவரது நியமனத்தை சீனாவின் தேசிய மக்கள் சபை அங்கீகரித்தது. அதனைத் தொடர்ந்து தொலைக்காட்சியில் தோன்றிய சூ தெற்காசிய நாடுகளில் பொருளாதார நெருக்கடி பூதாகாரமாய் வளர்ந்திருந்தாலும் கூட சீனாவின் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து 8 சதவீதத்திற்கும் குறையாது இருக்கும் என்று உறுதியளித்தார். பத்து ஆண்டுகளாக பிரதமராக இருந்த லீ பெங்கிடமிருந்து பதவி சூவின் கைக்கு மாறியிருக்கிறது. உலகத்திலேயே அதிக சனத்தொகையைக் கொண்டது சீனா. வளர்ந்துவரும் சனத்தொகையை சமாளிப்பதுடன் பொருளாதார சீர்திருத்தத்திலும் கவனம் செலுத்துவதே சூவிற்கு தற்போதுள்ள தலையாய கடமையாகும். தேசிய மக்கள் சபை புதிய அமைச்சரவையையும் அங்கீகரித்தது.

## பிலிப்பைன்ஸ்

இன்னும் இரண்டு மாதங்களில் ஜனாதிபதி தேர்தலை பிலிப்பைன்ஸ் சந்திக்கவுள்ளது. இந்த நிலையில் தேர்தலில் போட்டியிடும் உதவி ஜனாதிபதி ஜோசப் எஸ்டிடரட்டாவுக்கு எதிராக விசாரணை ஒன்றுக்கு ஜனாதிபதி பிடல் ராமோஸ் உத்தரவிட்டுள்ளார். ஜனாதிபதி ராமோஸை படுகொலை செய்ய யோசேப் சதி புரிந்தார் என்று யோசேப்-பின் உதவியாளர் ஒருவர் தெரிவித்த குற்றச்சாட்டு தொடர்பாகவே இந்த விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது. தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை யோசேப் மறுத்துள்ளார். இதற்கிடையில் யோசேப்-பின் ஆதரவாளர் ஒருவரின் மனைவி பல மில்லியன் தொடர்பான மோசடி புரிந்தார் என்பது தொடர்பாகவும் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் பெறப்பட்ட பணமே யோசேப்பின் தேர்தல் செலவாகப் பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

## ரஷ்யா

ரஷ்யாவின் ஜனாதிபதி போரஸ் யெல்ட்சின் இதுவரை இரகசியமாகப் பாதுகாத்து வரப்பட்ட சோவியத் ரஷ்யாவின் முன்னாள் சர்வாதிகாரியான யோசேப் ஸ்டாலின் தொடர்பான பத்திரங்களை வெளியிடும்படி பணித்துள்ளார். 1953ம் ஆண்டு இறக்கும்வரை ஸ்டாலின் சோவியத் ரஷ்யாவை தனது இரும்புப் பிடியில் வைத்திருந்தார். அவரது சுமார் 30 வருட பொதுவுடமைக் கட்சியின் கெடுபிடி ஆட்சியில் 20 மில்லியனுக்கும் மேற்பட்ட சோவியத் மக்கள் கொல்லப்பட்டார்கள். சோவியத் நாட்டின் அடக்குமுறைக்குப் பலியானவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் ஸ்டாலின் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. ஸ்டாலினின் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டவர்களின் பட்டியல், அடக்குமுறைக்குப் பலியானவர்கள், குறுக்கு விசாரணைகளின் பதிவுகள், விசாரணைகள் மற்றும் ஸ்டாலினால் தயாரிக்கப்பட்ட குறிப்புகள் ஆகியவற்றையும் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கும்படி ஜெலட்சின் உத்தரவிட்டுள்ளார்.

## வியட்நாம்

1968ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் திகதி 504 நிராயுதபாணிகளான அப்பாவிப் பொதுமக்களை அமெரிக்க இராணுவத்தினர் கொன்றார்கள். லெப்டினட் காலி தலைமையில் இருந்த துருப்புக்களே இந்த பயங்கரவாதத்தைப் புரிந்தார்கள். வியட்நாமிய கரந்தடிப் படைகளுக்கும் அமெரிக்க இராணுவத்தினருக்கும் இடையில் சண்டை நடைபெற்ற காலம். ஆனால் தூண்டு காரணம் எதுவுமின்றி இந்த அப்பாவி மக்களை - இவர்களில் அநேகமானோர் பெண்கள், குழந்தைகள், வயோதிப ஆண்கள். கொலைகள் தொடர்வதற்கு முன்பாக தற்செயலாக அப்பக்கம் வந்த வானூர்தி ஒன்றில் வந்த அமெரிக்கர் மூவரால் அவை தடுக்கப்பட்டன. நடந்த படுகொலைகளின் விபரமும் வெளியாகின. மைலாய் படுகொலைகள் என்று அழைக்கப்படும் இந்த படுகொலைகள் அமெரிக்காவின் இராணுவ வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயமாகும். வியட்நாமில் உள்ள மைலாய் என்ற இடத்தில் இடம்பெற்ற இந்த படுகொலைகளை மூடி மறைத்திட முதலில் பிராயத்தனம் செய்யப்பட்டது. எனினும் சுமார் ஒரு வருடத்தின் பின்னர் விடயம் அம்பலமானது. விசாரணையின் பின்னர் காலி தண்டிக்கப்பட்டார். இந்தப் படுகொலைகள் தொடராமல் தடுத்த மூன்று அமெரிக்கர்களில் உயிருடன் இருக்கும் இருவர் கடந்த மாதம் வியட்நாம் சென்றார்கள். படுகொலைகள் இடம்பெற்ற இடத்தில் நடைபெற்ற நினைவாஞ்சலியிலும் கலந்து கொண்டார்கள். இவர்களது சேவையை கவுரவிப்பதற்கு அமெரிக்க அரசுக்கு 30 ஆண்டுகள் எடுத்துள்ளன. சமீபத்தில்தான் அவர்களுக்கு வீரவிருதுகள் வழங்கப்பட்டன. “நிராயுதபாணிகளான அப்பாவிகளைக் காப்பாற்றுவதே இராணுவத்தின் தலையாய பணியாக இருத்தல் வேண்டும்” என்பது அமெரிக்க இராணுவத்தின் மரபு. அதற்கு மாறாக செயல்பட்டுள்ளனர் அந்த இராணுவத்தின் ஒரு பிரிவினர்.

## வங்காளதேசம்

மத்திய கிழக்கு நாடுகளில் பிரசித்திவாய்ந்த போட்டிகளில் ஒன்று ஒட்டக ஓட்டப் போட்டி. போட்டிகள் நடக்கும்போது அதனில் சவாரி செய்பவர்கள் சிறுவர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்காளதேசம் போன்ற நாடுகளிலிருந்து கடத்தப்படும் சிறுவர்களே இதில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். வங்காளதேசத்திலிருந்து இந்தியா ஊடாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு கடத்தப்படவிருந்த சிறுவர்கள் பலரை இந்திய பொலிசார் தடுத்து காத்த சம்பவம் கடந்த ஆகஸ்ட் மாதம் இடம்பெற்றது. நாலு வயது முதல் ஏழு வயது வரையுள்ள இந்தச் சிறுவர்களை மத்திய கிழக்கு நாடுகளில் விற்பதற்கு ஒருவர் முயற்சித்த போதே பொலிசார் கடத்தல் பற்றி அறிந்து கொண்டார்கள். அதன் விளைவு அடிமைகளாக இந்தச் சிறுவர்கள் விற்கப்படுவது தடுக்கப்பட்டதுடன் இந்தக் கடத்தல் வேலையில் சம்பந்தப்பட்ட முகவரும் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து போலி பிரயாண ஆவணங்கள் பல கைப்பற்றப்பட்டன. விசாரணையின் பின்னர் சிறுவர்களை மீண்டும் அவர்களது நாட்டிற்கு அனுப்ப ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## பாகிஸ்தான்

நீதிமன்றத்தை அவமதித்ததாக பிரதமர் நவாஸ் ஷாரிவ் உட்பட பல அரசியல் தலைவர்களும் அரசாங்க அதிகாரிகளும் பாகிஸ்தானில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தனர். அந்த குற்றச்சாட்டுக்களை பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் இப்பொழுது தள்ளுபடி செய்யாது வேறு விதமாக தீர்ப்பளித்திருந்தால் பாகிஸ்தானில் இரத்தக்களரி நடைபெற்றிருக்கும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றார்கள்.

## உலகவலம்



## தென் ஆபிரிக்கா

கடந்த மாதம் தென் ஆபிரிக்க அரசு தமது வெளியுறவு சிரேஷ்ட அதிகாரி ஒருவரை அவரது சேவையினின்றும் இடைநிறுத்தியது. ரோபேர்ட் மக்பிரைட் என்று அழைக்கப்படும் இந்த அதிகாரி ஆயுதங்களைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மோசாம்பிக் நாட்டில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார். குண்டுத் தாக்குதல் நடத்தி மூவரைக் கொன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 1980களில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு இவர் சிறைவைக்கப்பட்டார். பொது மன்னிப்பின் கீழ் 1992ம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட ரோபேர்ட் தென் ஆபிரிக்கா அரசின் வெளியுறவு அமைச்சில் ஒரு பணிப்பாளராக பதவி வகித்தார். நெல்சன் மண்டேலாவின் அரசைக் கவிழ்க்க சதி செய்தார் என்ற குற்றச் சாட்டும் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளதாக மோசாம்பிக் செய்திகள் தெரிவிக்கின்றன.

## உகண்டா

ஜனாதிபதி முசவேனி வட உகண்டா மக்களிடம் மன்னிப்புக் கோரினார். கொள்ளைகள், கொலைகள் போன்றவற்றை நடத்தும் சிறுவர்களைக் கொண்ட படையினரிடமிருந்து அவர்களைக் காப்பாற்றத் தவறியதற்கே அவர் மன்னிப்புக் கோரினார். ஆண்டவரின் ஒத்துழையாமைப் படை என்று அழைக்கப்படும் இயக்கத்தின் தலைவரான யோசேப் கோனி என்பவர் சூடான் நாட்டின் அரசின் ஒத்துழைப்புடன் ஆக்கோலி ஆதிவாசிகளின் சிறுவர்களைக் கடத்தி, அவர்களை யுத்தம் செய்யப் பழக்குகின்றார். ஆயிரக்கணக்கான சிறுவர்கள் இவ்வாறு கடத்தப்படுகிறார்கள். இவர்கள் உகண்டா நாட்டின் வட பகுதியில் கொள்ளை, கொலைகள் ஆகியவற்றில் ஈடுபட்டிருப்பதாக அரசு கூறுகின்றது. தற்போது உகண்டா ஜனாதிபதி முசவேனி வட உகண்டாவின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்ததுடன் தஞ்சம் அடையும் ஆக்கோலி இனத்தவர்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்குவதாகவும் உறுதி அளித்துள்ளார்.

## வட அயர்லாந்து

வட அயர்லாந்தில் அமைதியைக் கொண்டுவரக் கூடிய திட்டம் ஒன்றினைத் தாங்கள் எட்டியுள்ளதாக பிரித்தானிய, அயர்லாந்து பிரதமர்கள் தெரிவித்துள் ளார்கள். புரட்டஸ்டான்டு சமயத்தவர்களைப் பெரும்பான்மையாகவும், கத்தோலிக்க சமயத்தவர்களை சிறுபான்மையாகவும் கொண்டது வட அயர்லாந்து. இந்த இரு பிரிவினருக்கும் இடையில் ஏற்பட்ட அரசியல் மோதல்களினால் கடந்த 30 ஆண்டுகளில் பல்லாயிரிக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த கரந்தடி மோதல்களைத் தடுப்பதற்கான அரசியல் திட்டம் ஒன்றினைத் தாங்கள் எட்டியுள்ளதாக பிரித்தானிய, அயர்லாந்து பிரதமர்கள் தெரிவித்துள்ளார்கள். வட அயர்லாந்திலுள்ள எட்டு பிரதான கட்சிகள் தம்மிடையே அரசியல் இணக்கம் ஒன்றை ஏற்படுத்த பல வருடங்களாக முயற்சிக்கின்றன. வட அயர்லாந்திலுள்ள பெரும்பான்மையானவர்கள் ஏதோ விதத்தில் பிரித்தானியாவுடன் உறவை வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள். அயர்லாந்தோ வட அயர்லாந்து நியாயப்படி தன்னுடன் இணைக்கப்பட வேண்டுமென்று கருதுகிறது. வட அயர்லாந்து தற்பொழுது ஐக்கிய பிரித்தானியாவில் உள்ளடங்கியிருக்கின்றது. இங்கிலாந்தில் உள்ளவர்களில் அநேகமானோர் கத்தோலிக்க மதத்தைச் சாராதவர்கள். அயர்லாந்து நாட்டிலுள்ள பெரும்பான்மையானவர்கள் கத்தோலிக்கர்கள். இந்த முரண்பாடுகளிடையே அமைதி ஏற்படுவதற்கான ஒரு இணக்கத்தைத் தாங்கள் எட்டியுள்ளதாக இரு பிரதமர்களும் தெரிவித்துள்ளார்கள். இது போன்று ஏற்கனவே பல தடவைகள் அறிவிக்கப்பட்டிருந்தன. பின்னர் தோல்வியில் முடிந்தன. இம்முறை நிரந்தர அமைதி ஏற்பட வாய்ப்பு உண்டா என்பது விரைவில் தெரிந்து விடும்.

## அமெரிக்கா

கறுப்பர்களும், வெள்ளையர்களும், யூதர்களும், யூதர் அல்லாதவர்களும், கத்தோலிக்கர்களும், கத்தோலிக்கர் அல்லதவர்களும் (மறுபக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் குழந்தைகளின் எதிர்கால உயர்ச்சிக்கு ஒரு வழிகாட்டி

# THE CHILDREN'S EDUCATION TRUST OF CANADA

(Non Profit Foundation)

கனடா குழந்தைகள் நம்பிக்கை நிதியம்
(இலாப நோக்கமற்ற அமைப்பு)

அரச அங்கீகாரம் பெற்ற புலமைப்பரிசில்
சேமிப்புத் திட்டம் (R.E.S.P).
வரிச்சலுகையுடன் கூடியது.
உலகின் எங்கும் அங்கீகரிக்கப்பட்ட
கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கலாம்.
21 வயதிற்குள் விரும்பிய எவருக்கும் திட்டத்திற்குரிய
பலன்களை இலகுவில் மாற்றக் கூடியது.
நிதி வைப்புகள் அனைத்தும் அரச உத்தரவாதமுள்ள
நிதி வைப்புகளில சேமித்து வைக்கப்படுகின்றது.

Start Your Plan Today for Less Than The Cost of One Cup of Coffee Per Day

வேலை வாய்ப்பு!
பறிச்சி முகாமயாளர்
பதிவு உத்தியோகத்தர்
தொலைபேசி மூலம் சந்தைப்படுத்தல்
(தமிழ் அல்லது ஆங்கிலம்)

வேலை வாய்ப்புகள் உண்டு
**Job Opportunities Available**

குழந்தைகள் உயர் கல்விபெற முடியாத சந்தர்ப்பங்களிலும் கட்டிய பணமும் நடைமுறை வட்டி விகிதத்துடன் திருப்பிப் பெறக்கூடியதான திட்டமும் உண்டு
(Self - Initiated Potion)

எவரும் சிறுதொகை மூலம் இலகுவில் இணைந்து பயன் பெறக் கூடியது

எவ் வயதிலும் சுய ஆரம்பித்தல் செய்ய வழிகள் உண்டு

உங்கள் குழந்தைகளின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் தேவையான சகல விபரங்களையும் ஆலோசனைகளையும் இலவசமாகப் பெறக் கூடியதான ஒழுங்குபடுத்தப்பட்ட சிறப்பான சேவை.
இன்றே தொடர்பு கொள்ளப்பட வேண்டியவர்

Ask for Details:
**இ. ராஜ்குமார் - R. R. Rajkumar** B Com (Hons) Manager
**Tel: (416) 332 8457/ (416) 757 7723/ (416) 704 2697**
**Pager: (416) 608 2432**

2500 Lawrence Ave. E. Suite #202,
Scarborough ON M1P 2R8




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஒருவருடன் ஒருவர்கைகோர்த்தபடி பழைய நீக்ரோ பாடலான "கடைசியில் நாம் விடுதலை அடைந்தோம். கடைசியில் நாம் விடுதலை அடைந்தோம். ஆண்டவரே உமக்கு நன்றி. கடைசியில் நாம் விடுதலை அடைந்தோம்" என்று பாடும் நிலை இந்த உலகில் வரவேண்டுமென்று கனவு கண்டவர் மார்டின் லூதர் கிங். அமெரிக்காவின் காந்தி என்று அழைக்கப்பட்டவர். காந்தி போன்றே அகிம்சை மூலம் சமுதாய விழிப்புணர்ச்சியை ஊட்ட வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கையைக் கொண்டிருந்தவர். இவரது இந்தக் கொள்கைகளுக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டு இவர் கவுரவிக்கப்பட்டார். அமெரிக்காவிலுள்ள விடுமுறை நாட்களுள் ஆட்களின் பெயரால் விடப்படும் ஒரோயொரு விடுமுறை இவருடையதாகும். கொண்ட கொள்கைகளுக்காக காந்தி போன்று கொல்லப்பட்டவர் கிங். 1968ம் ஆண்டு மார்ச் மாதம் 4ம் திகதி ஒரு கொலையாளியின் துப்பாக்கியிலிருந்து கிளம்பிய தோட்டா ஒன்று அவர் உயிரைக் குடித்தது.

இவர் கொல்லப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர் சிறையிலிருந்து தப்பிய குற்றவாளி ரே என்பவர் தானே கிங்கைச் சுட்டுக் கொன்றதாக ஒப்புக் கொண்டார். அவர் மீது வழக்கு நடத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் விடயம் அத்துடன் நின்றுவிடவில்லை. சிறிது காலத்தின் பின்னர் தான் அந்தக் கொலையைச் செய்யவில்லை என்று ரே கூறினார். பொலிஸ் உத்தியோகத்தர் சிலர் இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற தகவல் வெளியாகத் தொடங்கின 30 வருடங்களின் பின்னரும் கிங்கைக் கொன்றவர்கள் அக்கப்படவில்லை. அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படவில்லை என்று கிங்கின் மனைவியும் இன்னும் பலரும் கூறுகின்றார்கள். "தென்னாபிரிக்காவில் இருப்பது போன்று உண்மை நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று அமெரிக்காவிலும் உருவாக்கப்பட்டு தண்டனைக்கு உள்ளாகவேண்டி வரலாம் என்ற அச்சம் இல்லாது எவரும் சாட்சியம் அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். மார்டின் லூதர் கிங்கைக் கொன்றவர்கள் யார் என்ற உண்மை வெளியாக வேண்டும்" என்று மார்டின் லூதர் கிங்கின் மனைவி கூறியுள்ளார்.

# கனடாவின் இரண்டாவது பெரிய வங்கி

கனடாவின் இரண்டாவது பெரிய வங்கி உதயமாகவுள்ளது. CIBC யும் ரொறன்ரோ டொமினியன் (TD) வங்கியும் இணையப் போவதாக அறிவித்துள்ளதைத் தொடர்ந்தே கனடாவில் இரண்டாவது பெரிய வங்கி உதயமாக இருக்கும் செய்தி வெளியாகியது. தற்போது கனடாவில் இருக்கும் வங்கிகளில் மிகப் பெரியது CIBC ஆகும். ஐந்தாவது இடத்தை வகிப்பது ரெறன்ரோ டொமினியன் வங்கியாகும். இவை இரண்டும் இணையும் பட்சத்தில் இவற்றின் மூலதனம் 47 பில்லியன் டாலர்களாக இருக்கும். அமைய இருக்கும் வங்கி வடஅமெரிக்காவின் பத்தாவது பெரிய வங்கியாக அமையும்.

இந்த வருடம் 23ம் திகதி றோயல் வங்கியும், மொன்றியால் வங்கியும் இணையப் போவதாக அறிவித்ததைத் தொடர்ந்தே தாங்கள் இந்த முடிவை எடுத்ததாக ரொறன்ரோ டொமியன் வங்கித் தலைவர் சார்ள்ஸ் பெய்லி கூறினார்.

கனடிய வங்கிகள் தமக்குள் முயற்சித்தாலும் அவற்றின் இணைப்பை கனடிய பிரதமர் விரும்பாவிடத்து தடைசெய்யலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. "கனடியர்கள் தங்களுக்கென தேர்ந்தெடுப்பதற்குப் போதிய வங்கிகள் இருப்பது அவசியம். இல்லையென்றால் அவர்கள் ஒன்று, இரண்டு அல்லது மூன்று வங்கிகளுக்குள் அகப்பட்டுக் கிடக்க வேண்டி வந்துவிடும்" என்று அவர் எச்சரித்துள்ளார்.


**Lucky fashion**

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சகல விதமான றெடிமேட் ஆடைகளும் மற்றும் புடவை வகைகளும் மிக மலிவாகவும் தரமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

Quality Children's Ladie's & Men's Wear at Cheeper Prices

2580 Shepard Ave. Suite 24, Mississauga ON L5A 4K3

**Tel: (905) 566 8780**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தால் வாழ்த்துகிறேன்!

ஆனந்த ஜோதியாய் அனைத்து இதயங்களிலும்
இப் புதிய சஞ்சிகை பிரகாசிக்க
வாழ்த்துகின்றேன்!

கனடா தமிழ்ப் பத்திரிகை உலகின்
எதிர்காலத்தை எதிர்பார்க்கும் காலமாக
இச்சஞ்சிகையை ஆக்கிட மனதார
வாழ்த்துகிறேன்!
தீக்குளித்தாலும் தோல் கருகாதவர்கள் நாம்
என்பதை வெளிஉலகிற்குக் காட்டிட

எதிர்காலம் பற்றிய முன்நோக்கிய உணர்வும் -
வரலாறு பற்றிய பின்நோக்கிய அறிவும்
எமக்கிருப்பதை என்றும் உணர்த்திட

உலகத்தை உற்று நோக்கி உணர மறுக்கும்
எந்த இனமும் உலகிற்குத் தம்மை
இனங்காட்டத் தவறிவிடும் என்பதை உரமாக
உரைத்திட

நன்மை என்றாலும் அது தீயதிலிருந்து
கிடைக்கும் எனின் அதனை முற்றாகத்
தவிர்த்திட

பிடித்து விட்டால் சந்தேகம் வருகிறது.
பிடிக்காது விட்டால் சண்டை வருகிறது என்ற
கணிப்பைக் கனடா தமிழ்ப் பத்திரிகை உலகில்
இருந்து மாற்றிட

இதயத்தால் வாழ்த்துகிறேன்! மனதார
போற்றுகின்றேன்!

நேற்றைய நினைவுகளை - நாளைய
கனவுகளை களிப்புடன் சுமந்து வா!

குறைகளை குறைத்து - நிறைகளை நிறைத்து
உவப்புடன் என்றும் வா!

பூமியே உன்னால் புதுப்பித்துக் கொள்ள
தமிழ் இதயங்கள் உன்னால் பூக்களாய் சிரிக்க
சிறப்பாக வாழ்த்துகிறேன்!

வாழ்க! வளர்க!

இளவாலை
**எஸ். ஜெகதீசன்**
முன்னாள் 'பொதிகை'
*இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர்*

# 'தமிழ் ரைம்ஸ்' வெளியீட்டாளர்களுக்கு எனது மனம் நிறைந்த பாராட்டுகள்!

ஒரு சமுதாயத்தில் தரமான நிறைவான
சமுதாயத்தை முன்னோக்கி அழைத்துச்
செல்லக்கூடிய எத்தனை பத்திரிகைகள்,
சஞ்சிகைகள், வானொலிகள்,
தொலைக்காட்சிகள் என்று வந்தாலும்
அத்தனையும் ஆரோக்கியமானதே. இந்த
வகையில் மற்றுமொரு சாதனை 'தமிழ் ரைம்ஸ்'
என்று நம்புகிறேன்.

அன்பர்களே! ஆரம்பத்தில் தங்கள் சஞ்சிகையின்
பெயரில் எனக்கு ஒரு குழப்பம் இருந்தது
உண்மையே! அதாவது தமிழ் ரைம்ஸ்;
தமிழோடு ஆங்கிலச் சொல்லையும் இணைத்து
தமிழைக் கலப்படம் ஆக்கிவிட்டீர்களோ என்று
ஆதங்கப்பட்டேன். பின்னர் சற்று நிதானித்து
சிந்தித்தபோது; ஓ.....கனடாவில் எமது இளைய
சமுதாயத்தையும் எம்மோடு, இன்றைய,
தலைமுறையோடு அழைத்துச் செல்ல
இந்தக் கலப்பு சில வேளைகளில் ஒரு தேவை
என்றும் புரிந்தது. அதனால் தங்கள் முயற்சி
வாழ்க. வளர்க.

அட்டைப் படங்களைப் போலவே....
உள்ளடக்கமும் அருமையாக உள்ளது.
எழுத்தமைப்பு மிக மிக அற்புதம். எமது....
இன்றைய சந்ததிக்கும், எதிர்கால சந்ததிக்கும்
இந்த மாதமலர் ஒரு இணைப்புப் பாலமாக
இருக்கட்டும்

வாழ்த்துகளுடன்.......

**நடா. R. ராஜ்குமார்.**
கீதவாணி வானொலி

We bring the world to your home



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறோம்!

'தமிழ் ரைம்ஸ்' ஆரம்ப இதழ் பார்த்தேன். நீண்டு செல்லும் ஒரு இடைவெளியை நிரப்புவதற்கு பாலமாக அமைய விஜய் ஆனந்தும் அவரது நண்பர்களும் முயற்சிப்பதாக தென்படுகிறது. அது வெற்றி பெறும் என நம்புகிறேன்.

ஆம். இடைவெளி என்பது இளம்தலைமுறையினரை அவர்களின் உணர்வுகள் அபிலாஷைகள் பிரச்சனைகள் கனடிய தமிழ் சமுதாயம் புரிந்து கொண்டு அவர்களை அரவணைத்து இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கி அழைத்துச் செல்வதில்தான்; தமிழர்களின் கல்வி, கலை, பண்பாடுகளுடன் பல துறைகளிலும் நாம் சிறந்தவர்கள் என்பதை கனடிய நாட்டுக்கும் மக்களுக்கும் எமது திறமைகள் அறிவதற்கு வாய்ப்புகள் ஏற்படும். அவ்வகையில் 'தமிழ் ரைம்ஸ்' இப்பணியை துணிந்து நிதானத்துடன் எடுத்துச் செல்லும் என எண்ணுகிறேன்.

தொடர்ந்து தமிழ் ரைம்ஸ் கனடிய தமிழ் மக்களிடையே பெரும் மதிப்புப் பெற்று வெளிவர எனது வாழ்த்துகள்!

**பரமு. சிவசுப்பிரமணியம்**
நிர்வாக ஆசிரியர் - நம்நாடு

தமிழீழ மண்ணில் ஒவ்வொரு நிமிடமும் ஏதோ ஒரு நிகழ்வு பதிவு செய்யப்படுகிறது. சமாதானம் என்பது அரச நிதானத்தைக் கடந்து மக்கள் வதைக்கு இட்டுச் செல்லப்படுகிறது. மொத்தத்தில் தீர்வுக்கான திட்டங்கள் என்பது போலியாகி, தமிழ் மக்கள் தங்கள் இருப்புக்கான போராக மாற்றப்பட்டாயிற்று. மண்ணின் நிலைப்பாடுகள் அலைபாய உலகமுற்றும் வாழ்கின்ற தமிழனுக்கு உண்மையான செய்திகள் அவசியமாகின்றன. அந்த நோக்கத்தில் எழுந்ததுதான் தமிழ் ரைம்ஸ். காலத்தின் நிகழ்வுகள் தமிழ் ரைம்ஸில் கண்ணாடி ஆக்கப்பட்டதை உணர்கிறேன். மக்களுக்கு எது தேவையோ அதை எடுத்துச் சொல்வதில் பணி சிறப்படைகிறது. தமிழ் ரைம்ஸ் மக்கள் மனதில் சிறப்பான இடத்தில் நிலைக்கும் என்பது ஐயமில்லை. வாழ்க தமிழ் ரைம்ஸ். வளர்க அதன் பணி.

**தீவகம். வே. இராஜலிங்கம்**
பிரதம ஆசிரியர் - நம்நாடு

# "தமிழன் தரமான வாசகன்; எனவே தகுதி கண்டு பிரசுரியுங்கள்!"

கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வைப்பவர்கள் தமிழர்கள் என்று பலரும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். எவராவது ஒருவர் ஏதாவது செய்தால், அதனை அப்படியே பின்பற்றிச் செய்பவர்கள் என்பது இதன் அர்த்தம்.

எதனைச் செய்தாலும் 'பத்தொடு பதினொன்றாகச் செய்யாமல்', புதிதாகச் செய்ய வேண்டும்; புதுமையாகச் செய்ய வேண்டும் என்பதில் அதிக நாட்டம் கொண்டவர்களில் நானும் ஒருவன்.

இந்த வகையில் 'தமிழ் ரைம்ஸ்' என்னைச் சற்றே நிமிர வைத்து, நெஞ்சை உயர்த்தியுள்ளது என்று சொன்னால் இது வெறும் புகழ்ச்சியில்லை.

கனடாவில் எல்லா வசதியுமுண்டு; சகல வளங்களுமுண்டு; போதுமான வாய்ப்புகளுமுண்டு. இவைகளைச் சரியாகப் பயன்படுத்தி, இங்கு எம்மால் எதையாவது செய்ய முடியாமல் போகுமானால் உலகில் எங்குமே எம்மால் எதையுமே செய்ய முடியாது.

முடிப்பதற்கு முன் சில வார்த்தைகள்

- விடயதானம் மேலும் வேண்டும்.
- மாதாமாதம் தவறாது, குறித்த திகதியில் வெளியிட வேண்டும்.
- 'எழுத்தில்' நிதானமும் அவதானமும் என்றும் வேண்டும்.

"தமிழன் தரமான வாசகன்;
எனவே தகுதி கண்டு பிரசுரியுங்கள்!"

**எஸ். திருச்செல்வம்**
பிரதம ஆசிரியர் - தமிழர் தகவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் குடும்ப உறவுகள்

~ மனோகரன் ~

வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் கவலையான சம்பவங்கள் சில நடைபெற்று வருவதை பத்திரிகைகளுக்கூடாகவும், நண்பர்களுக்கூடாகவும் கேள்விப்படக் கூடியதாக இருக்கின்றது. தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெறும் குடும்ப உறவுகளின் நெருக்கடிகளைக் குறித்து இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. எல்லாக் குடும்பங்கள் மத்தியிலும் நெருக்கடிகள் இருக்கிறது என்று கூறமுடியாது. ஆனால் குடும்ப உறவுகளில் பல நெருக்கடிகள் ஏற்படக் கூடிய சூழ்நிலையில் வெளிநாட்டுத் தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதை எதிர்கொள்வது எப்படி என்பதை ஆராய்வதே இத் தொடர் கட்டுரையின் நோக்கமாகும்.



வட அமெரிக்காவில் இரண்டு திருமணங்களில் ஒன்று விவாகரத்து அல்லது பிரிவில் முடிகிறது. ஒரு குடும்பத்தில் இரண்டு அல்லது ஒரு பிள்ளையின் திருமணம் முறிவடைகிறது. மொத்தத்தில் 90 வீதமானோர் திருமணத்திற்கு முன்பு உடலுறவு கொள்கிறார்கள். பாலுறவில் ஈடுபடும் நண்பர்களை மாற்றிக் கொள்கிறார்கள். இந்த வீதத்தினருக்குள் அநேகர் திருமணமாகாமல் பிள்ளைகளை பெற்றுக் கொள்கிறார்கள். குறிப்பாக, ஒரு (தாயின்) பிள்ளைகளின் தகப்பனார் ஒன்றுக்கு மேற்பட்ட நபராக இருப்பர். 1970ம் ஆண்டிற்கு பின்பு தகப்பனில்லாத பெற்றோர் (Single Parents) 79 வீதமாக அதிகரித்தது. 1/3 வீதத்திற்கு மேற்பட்ட பிள்ளைகள் விவாகரத்துக் குடும்பத்தில் வாழ்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் தனிமை (Lonliness) ஆழ்ந்த கவலை (Depress) விரக்தியினால் ஏற்படும் வன்முறை, ஆண்புணர்ச்சி, பெண்புணர்ச்சி, கீழ்ப்படியாத பிள்ளைகள் என்றெல்லாம் வளர்ந்து விட்டன. இது இப்போது வட அமெரிக்காவின் கலாசாரமாக இடம்பெறுகிறது.



ஒரு வெள்ளைக்கார பெண்மணி, ஒரு தமிழ் பெண்ணிடம் பின்வருமாறு சொன்னாள். "(I always see you with one man, Why do not you change your partner and enjoy your life) எப்போதும் நான் ஒரு ஆணுடன் உன்னைப் பார்க்கிறேன். ஏன் அவரை நீ மாற்றி உன்னுடைய வாழ்க்கையை சந்தோஷமாக அனுபவிக்கக் கூடாது" என்று.

நண்பர்களே!

இந்நாட்டு சூழ்நிலை மட்டுமல்ல, இந்நாட்டு மக்கள் நேரடியாகச் சொல்லுவது உங்கள் வாழ்க்கை முறையை தங்கள் முறைமைக்குக் கொண்டு வரும்படி.

## (1) தம்பதிகள் நாளாந்த வாழ்வில் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் தீர்வுகளும்

பங்குபற்றியோரை நான்கு குழுவினராக பிரிக்கப்பட்டு
I. மகிழ்ச்சிகரமான திருமண வாழ்க்கைக்கும்
II. மகிழ்ச்சியற்ற திருமண வாழ்க்கைக்கும் சாதகமானது, பாதகமானது என்ன என்பதை ஆராயும் பொறுப்பு கொடுக்கப்பட்டது. அதன் பின்பு குழுவினர்கள் வெளிக்கொண்டு வந்த கருத்துக்களின் சுருக்கங்கள் பின்வருமாறு:-

### I. மகிழ்ச்சிகரமான திருமண வாழ்க்கைக்கு சாதகமானவர்கள்:

1. தியாக அன்பு (Affectional & Sacrifical).
2. கணவன் மனைவிக்கிடையில் நம்பிக்கை
3. கலந்து பேசுதல் தீர்மானித்தல்
4. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுதல் (Understanding each other).
5. தீர்மானம் எடுப்பதில் ஒன்றுபடுதல் (Flexible).
6. ஒருவர் ஒருவருடன் அதிக நேரம் செலவு செய்தல்
7. கொள்கையில் ஒருமைப்பாடு (Common goal).
8. ஒருவர் ஒருவரின் விருப்பு வெறுப்புக்களை அறிவதில் ஆர்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "கானப்பிரவாகம் 98"

## இசைப் போட்டி நிகழ்ச்சி

**இவ்வாண்டின் சிறந்த பாடகர் - பாடகியைத் தெரிவு செய்யும் இனியதோர் நிகழ்ச்சி**

கனடாவில் முதன் முதலாக 1997 ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி ஆசியாவின் தலைசிறந்த வானொலி - தொலைக்காட்சி அறிவிப்பாளர் B.H. அப்துல் ஹமீத் நவராகங்கள் S. பாலச்சந்திரன் இணைந்து வழங்கிய இசைப் போட்டி நிகழ்ச்சி மீண்டும் ரசிகப் பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க மே மாதம் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேடையேறுகின்றது.

**வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்**

இடம்: **SIR JOHN A MACDONALD C/I** (Pharmacy/Finch)
காலம்: **மே 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணி**


மேலதிக விபரங்களை **CIAO 530 AM** அலைவரிசையில் **பிரதி ஞாயிறு தோறும் இரவு 10.00 - 11.00 மணிவரை** ஒலிபரப்பாகும் **தமிழ்ஒலி** வானொலி நிகழ்ச்சி மூலம் கேட்கலாம்.

தொடர்புகளுக்கு: **எஸ். பாலச்சந்திரன் (416) 696 0500**

**'மெகா ரியுனர்ஸ்'** பின்னணி இசையில்... சிறந்த பாடகர் - பாடகியைத் தெரிவு செய்யும் பொறுப்பை ரசிகர்களிடம் ஒப்படைக்கிறோம்.



# V K T International



*வருமானவரி தாரிப்பு.*
*முதலீடு தொடர்பான ஆலோசனை.*
*நிதிசம்பந்தமான ஆலோசனை.*
*சந்தைவாய்ப்புகள் பற்றிய ஆலோசனை.*
*சிறு வர்த்தகம் பற்றிய ஆலோசனை.*

# வி கே ரி இன்டனஷனல்

திரு அல்லது சுதா

**Tel.: 416 698 2175**
**Cell: 416 726 7748**
**Fax: 416 698 2175**
e.mail: tanes @ i direct.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஒருவர் ஒருவரை மதித்தல், பாராட்டுதல் (Apperciation & Respection).
10. நல்ல எதிர்காலத் திட்டங்களை அமைத்தல்
11. புனிதமான பாலுறவு (Healthy sexual relationship).
12. பொறுமை, தாழ்மை
13. வருமானத்துக்கேற்ற வரவு, செலவுத்திட்டம்
14. சமமான பங்கு (Equal responsibility)
15. ஒருவர் ஒருவரின் கருத்தைக் கேட்பதில் ஆர்வம்.
16. கடவுளுக்கும், சத்தியங்களுக்கும் முதலிடம்.

## II. மகிழ்ச்சியான குடும்பத்துக்குப் பாதகமானவை:

1. பூரணமற்ற அன்பு
2. நம்பிக்கையற்ற நிலை
3. ஒருவருக்கு ஒருவர் மீது சந்தேகம்
4. பாலியல் அடிமை (Sexual adict)
5. உறவினர்களின் தலையீடு
6. வருமானப்பிரச்சனை, திட்டமிடாத வரவு - செலவு
7. மனைவியை அடிமைப்படுத்துவது
8. விபச்சாரம் மற்றும் கெட்ட நடத்தைகள்
9. சீதனப்பிரச்சனை (திருமணத்தின் பின்பும்)
10. பழிவாங்கும் தன்மை (பழைய சம்பவங்களை ஞாபகப்படுத்தி)
11. தன்னலம் (Selfish ambition)
12. பேராசை (Self-Greed)
13. பொறாமை
14. மன்னிக்காத தன்மை (Non forgiveing spirit)
15. தனி அதிகாரம் (Individualism)
16. நிந்தனை (Abusement), தீய வார்த்தைகள்
17. கணவன் மனைவி ஒருவர் ஒருவருடன் நேரம் செலவு செய்து கதைக்காதது
18. மனைவியை தனியாக பாலியலுக்கு மட்டும் பாவிப்பது
19. புதிய கலாசாரத்தின் ஊடுருவல்
20. கடவுளுக்கும் சத்தியங்களுக்கும் முதலிடம் இல்லாத நிலை

நல்லதொரு குடும்பம் திடீரென்று ஏற்படுவதில்லை. மேலே குறிப்பிட்ட கருத்துக்களை அவதானிக்கின்ற போது, நல்லதொரு திருமண வாழ்க்கையை கட்டி யெழுப்புவதற்கு கடின உழைப்பு அவசியமாகின்றது. ஒன்றாக வாழ்கின்ற கணவனும் மனைவியும் வேறுபட்ட சூழ்நிலையிலிருந்து வந்தவர்களும், வெறுபட்ட விருப் பங்களும், சிந்தனையுடையவர்களாகவும் இருப்பார்கள். இவ்விருவரும் ஒன்றாக வாழ்ந்து நல்ல உறவை ஏற்படுத்துவது மிகவும் கடினமானது.

இது ஒரு கடினமான காரியம் என்பதினாலும், தங்களை, தங்கள் விருப்பங்களை சிந்தனைகளை இன் னும் தங்களிடத்தில் உள்ளவற்றை மற்றவரோடு (கண வனோ, மனைவியோ) பகிர்ந்து கொள்ள விருப்ப மில்லாததினாலும் சிலர் திருமணம் செய்யாமல், பாலி யல் நோக்கத்திற்காக மட்டும் ஒன்றாக வாழ்கின்றார்கள் (Living together). இது ஒரு கடினமானது என்று எண்ணி திருமணமானவர்கள் பிரிந்து போகலாமா? அல்லது மற்ற வர்களைப்போல் கொஞ்சக் காலம் வாழ்ந்து விட்டு திரு மண வாழ்க்கை நம்பிக்கையற்றது, மகிழ்ச்சியற்றது பிரச் சனைக்குரியது என்ற முடிவுக்கு வருகிறோமா?

திருமணத்தைக் குறித்து, எங்களுடைய சிந்தனை மிகவும் முக்கியமானது. அதாவது நாங்கள் பிரிந்து போவதா? அல்லது கடின உழைப்புக்கூடாக, அவசியம் ஏற்படின் எங்களின் இயல்புகளை, பிடிவாதங்களை மாற்றியமைத்து நல்ல திருமண வாழ்க்கையை கட்டியெழுப்புவதா?

எங்களால் (ஒருவர்) ஒருவரை மாற்ற முடியாது. ஆனால், எங்களை (என்னை) மாற்ற முடியும் என்பது உண்மை. ஆகவே, நல்ல திருமண வாழ்க்கைக்கு சாதக மற்ற காரியங்கள் எங்களிடத்தில் இருந்தால் நாங்கள் மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

பலர் தங்களை மாற்றிக் கொள்ளத் தயாரில்லை. துணைவரைக் குற்றம் சாட்டி பிரிந்துபோய் இன்னொரு சந்தோஷமற்ற திருமணத்திற்குள் (Into bad marriage) பிரவேசிக்கிறார்கள்.

நண்பர்களே! நல்ல ஒரு திருமணத்திற்கு நல்ல முயற்சிகள் தேவைப்படுகிறது. அது மனைவிக்காகவும் பிள்ளைகளுக்காகவும், கணவருக்காகவும் அவசியமாக இருக்கின்றது.

ஒரு திருமணத்தில் பல தோற்றங்கள், வேறுபட்ட கருத்துக்கள் (aspects) ஒன்றாக பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன (Different aspects of marriage are bound up together). திருமண வாழ்க்கையில் காணப் படுகின்ற ஒரு பிரச்சனை இன்னொரு புதிய பிரச்சனைக் குள் கொண்டு செல்கிறது. அவைகள் பெரிய பிரச்சனை களாக மாற்றமடைகிறது.

உதாரணமாக கணவன் மனைவிக்கிடையில் நல்ல ஆழமான - நட்பு, தொடர்பு உரையாடல்கள் அன்பை வெளிக்காட்டும் விதத்தில் இடம்பெறவில்லையென்றால் ஒரு ஆரோக்கியமான பாலுறவில் பாதிப்பு ஏற்படும். அல்லது, பாலுறவில் ஏற்படும் அதிருப்தி வெறுப்புக்களை ஏற்படுத்தி மனநிலையை பாதிப்படையச் செய்வதினால் ஒருவர் ஒருவருடன் மனந்திறந்து பேசிக்கொள்வதை, கருத்துக்களை அறிவதை பாதிப்படையச் செய்கிறது.

குறிப்பாக உணர்வு சம்பந்தமான நட்பும் (Emotional Relationship) குறைந்த தொடர்பும் (Lack of Communication) திருமண வாழ்க்கையில் பிரச்சனைகளைக் கொண்டு வருகிறது.

ஒருவர் எனது கணவனை அல்லது மனைவியை நேசிக்கவில்லை என்று சொல்லும்போது அவர் குறிப்படு வது அல்லது கருதுவது என்ன?

அன்பு. அடிக்கடி ஏற்படுகின்ற உணர்வு. அன்பு செய்ய வில்லை என்று சொல்வதின் கருத்து அந்த உணர்வு எனக்கு இப்போது இல்லை என்பதேயாகும்.

ஒரு ஆலோசகர் சொல்கிறார் "எங்களின் உணர்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களின் செய்கைககளினால் உறுதி செய்யப்படுகின்றது. நான் ஒருவரை அன்பு செய்கிற போது, உணர்வுகளும் அவரோடு அல்லது என்னோடு சேர்ந்து செயல்படுகிறது. நான் எனது துணைவரை அன்பு செய்கிறேன் என்ற காரியத்தில் உணர்வும், செயலும் இடம்பெறுகின்றது.

நான் என்னை நேசிப்பது போல் என துணைவரையும் நேசித்து செயல்படுகிற போது என்னை விட்டுத் தூரமாக இருந்த, அல்லது கேள்விக் குறியாக இருந்த துணைவரின் அன்பும் அவரின் செயல்பாடும் என்னை நோக்கி வரும்.

சில வேளைகளில் நான் கணவனையோ / மனைவியையோ அன்பு செய்யவேண்டிய அளவுக்கு அன்பு செய்யாமல் இருப்பேனாக இருந்தால் அதற்குக் காரணம் நான் என்னை அன்பு செய்கிறவரை/செய்கிறவளை செய்யாததாக இருக்கலாம்.

நான் என்னை ஏற்றுக் கொள்ள முடியாதவராக இருப்பேனாக இருந்தால், பின்பு என் துணைவரை ஏற்றுக் கொள்ள முடியாதவராக இருப்பேன்.

முதலாவது, நான் என்னை மாற்ற வேண்டும். என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும். நேசிக்க வேண்டும். ஒரு மாற்றத்துக்கு வரத்தயாராக இருக்க வேண்டும். அப்போதுதான் நான் என்னை நானாக ஏற்றுக்கொள்ள முடியும்.

நான் யார்? எப்படிப்பட்டவர்? எப்படிப்பட்ட குறைகளையும் பழக்க வழக்கங்களையுடையவர்? எப்படித் துணைவருடன் கதைக்கிறேன்? என்று ஆராய்து நீ எப்படிப்பட்டவர் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். பின்பு நான் எனது துணைவரை ஏற்றுக் கொள்வது இலகுவாக இருக்கும்.

ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொண்டு, சிறப்பாக அறிந்து கொண்டு போகும் போது, திருமண வாழ்க்கையில் அன்பு நாளுக்கு நாள் வளர்ச்சியை நோக்கிச் செல்கிறது.

கணவன் மனைவியின் அன்பு ஒருவரை ஒருவர் நன்றாக அறிவதற்கூடாக (Love grows through Knowledge) கிடைக்கும் அறிவுக்கூடாக வளர்ச்சியடைகிறது. துணைவரைக் குறித்து அறிவு ஒருவர் ஒருவருடன் வைத்திருக்கும் நல்ல தொடர்புக்கூடாக வளர்ச்சியடைகிறது (Knowledge grows through good communication).

ஆகவே, என்னை நான் கேட்டுக் கொள்ள வேண்டும். என் துணைவரைக் குறித்து எவ்வளவு எனக்கு நன்றாகத் தெரியும்? அவரைக் குறித்த அறிவு எனக்கு எப்படி இருக்கிறது? எப்படி நான் அவருடன் தொடர்பு கொள்கிறேன்? தனிப்பட்ட கருத்துக்களை சொல்லவதில் கஷ்டம், தயக்கம் ஏற்படுகிறதா? ஒருவர், ஒருவரின் உணர்வுகளை, அதிருப்திகளை, விருப்பு, வெறுப்புக்களை வேறுபாடுகளை, சந்தோஷங்களைக் கூட வெளிப்படுத்துவதில் கஷ்டங்கள் ஏற்படுகின்றனவா?

நண்பர்களே!

முதலில் நாங்கள் எங்களது துணைவருடன் நேர்மையாக, கண்ணியமாக, உண்மையுள்ளவராகவும் இருக்க வேண்டும். இது அவசியமாகின்றது. அந்நேரம் எங்களை முழுமையாக அர்ப்பணிக்கவும், பகிர்ந்து கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும்.

சில வேளைகளில் முன்பு நாங்கள் உண்மையற்றவர்களாகவும், நேர்மையில்லாதவர்களாகவும், கடினப்பட்டவர்களாகவும் இருந்திருக்கலாம்.

ஏனென்றால், முழுமையாக எங்களைப் பகிர்ந்து கொண்ட போது அல்லது விட்டுக்கொடுத்த போது அதிக வேதனைகளையும், நோவுகளையும் சந்திக்க நேரிட்டதினால்

இது ஒரு நோவான அனுபவம் என்பதினால், கஷ்டமான காரியம் என்பதினால், என்னுடைய துணைவருடன் நேர்மையாக இருப்பதை கைவிடுவதா? இது ஒரு வேதனையான அல்லது சந்தோஷமான அனுபவமாக இருந்தாலும் நேர்மையும் உண்மையும் நல்ல ஒரு திருமண வாழ்க்கையில் அத்தியாவசியமானதாக இருக்கிறது என்பதை மறந்து போகக் கூடாது.

தொடரும்

VOICE MAIL
RENTING

One min. out going Massage
One min. in coming Massage
Save 50 Massage for 7 days

NOW ONLY
$4.50/month

call
TCC THAMIL CREATORS OF CANADA
416 202 6362

We bring the world to your home

கீதவாணி 1430AM
கனடிய தமிழ் ஒலிபரப்புச் சேவை
(416) 751-9077
திங்கள் - வெள்ளி
இரவு 10 மணிமுதல் - காலை 6 மணிவரை
சனி, ஞாயிறு
நள்ளிரவு 12 மணிமுதல் - காலை 6 மணிவரை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ★ ★

THREE STAR **AUTO ELECTRICSERVICE**

Electrical Specialist
Rebuilders of Domestic and Import



* Altenator & Starters
* General Electric
* Complete Rewiring
* Fuel Injection Service
* Power Window
* Remote Starter

**Tel: (416) 742 2338**

1137 Barmac Drive, North York, Ont. M9L 1X4

# வேதிகா



மீன், இறைச்சி மரக்கறி வகைகள், பலசரக்கு வகைகள்
மற்றும் தமிழர் உணவுப் பொடுட்கள் அனைத்தும்
கிடைக்கும்

உலகத்தின் எந்தப் பகுதிக்கும் துரிதபணமாற்றுச் சேவை

வீடியோ விற்பனைக்கும் வாடகைக்கும் எம்மிடம் கிடைக்கும்

CD, Audio Cassettes, Video for Sale and Rent

2176 Eglinton Ave. W
Toronto, Ontario
(Eglinton & Caledonia)

**Tel: (416) 787 1995**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டேன் கடவுளை

எங்கள் பெத்தப்பா ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் கடவுளை வணங்குவார். ஒவ்வொரு நாளும் சாப்பிடும்போதும் ஆண்டவரே இந்த ஆகாரத்தை உண்டு உமக்குப் பிரியமாக நடக்க அருள்புரியும் சுவாமி என்று வணங்கியபின்னரே சாப்பிடுவார்.

நான் பெத்தப்பாவிடம் கடவுள் எங்கே இருக்கிறார்? கடவுளைக் காட்டுங்கள் பார்ப்போம் என்று அடம்பிடிப்பேன்.

ஒருநாள் பெத்தப்பா கடவுளைத் தவிர மற்றைய எல்லாம் உங்கள் கண்களுக்குத் தெரிகிறதா? என்று கேட்டார். நான் அதற்கு ஆம் அந்தா வானம் இதோ பூமி மரம் வீடு ஆட்கள் எல்லாம் தெரிகிறது தானே என்றேன்.


உன்னை உனக்குத் தெரிகிறதா என்றார் பெத்தப்பா. நான் கண்ணாடியை எடுத்து வந்து காட்டி இதோ என்னைத் தெரிகிறது என்று பெத்தப்பாவை மடக்கப்பார்த்தேன்.

நீ ஏன் சாப்பிடுகிறாய் என்றார்? பசிக்கும் அதற்காகச் சாப்பிடுகிறேன் என்றேன். பசியா அது என்ன? அது எங்கே இருக்கு? அது என்ன நிறம்? அதை ஒருக்கா காட்டு பார்ப்போம் என்றார்.

நான் திகைத்துப் போனேன். பசியைப் பெத்தப்பாவுக்கு காட்டமுடியவில்லை. பெத்தப்பா தொடர்ந்து தாகத்தைக் காட்ட முடியுமா? காற்றைக் காட்ட முடியுமா? இவற்றின் செயல்களைக் காண முடியுமல்லவா.

இது போலவே உலகில் உள்ள எல்லாவற்றையும் இயங்க வைக்கும் கடவுளின் செயல்களையும் எம்மால் காணமுடிகிறதல்லவா என்று என்னை ஒரே மடக்காக மடக்கி விட்டார்.

இப்போ நானும் பெத்தப்பாவைப்போல் எப்போதும் கடவுளை வணங்குவேன்.



**லஜீதரன் செல்வராஜா**
நோர்த்யோக்



# மழலைகள் முற்றம்

எனதருமை மழலைச் செல்வங்களே!

இம் "மழலைகள் முற்றம்" பகுதி இங்கு வாழும் மழலைகள் எமது தாய் மொழியாகிய தமிழினை மென்மேலும் கற்றிட வேண்டும் என்ற நோக்கத்தோடே ஆரம்பிக்கின்றோம். இம் மழலைகள் முற்றத்தில் உங்கள் ஆக்கங்களும் இடம்பெற வேண்டுமானால் உங்களது ஆக்கங்களை உங்களது கைப்பட எழுதி, உங்கள் புகைப்படம், பெயர், வயது போன்ற விடயங்களையும் எழுதி எமக்கு அனுப்பி, மழலைகள் முற்றத்தில் அங்கத்தவர்களாக சேருங்கள்.

என்றும் பிரியமுடன்
**தேவா அக்கா**

# பாப்பாப் பாட்டு

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா
காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா



**த. பிரதீப்**
வயது - 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் கரங்கள்

ஒரு சிறிய கிராமத்தில் ஒரு இளம் தாயாகிய காஞ்சனா தன் குழந்தை கஜியோடு வாழ்ந்து வந்தாள். ஒருமுறை அந்தத் தாய் தன் குழந்தையை தொட்டிலில் தூங்கவைத்துவிட்டு அருகிலுள்ள தன் உறவினர் வீட்டிற்குச் சென்றாள். தன் உறவினர் வீட்டிற்கு வந்தவுடன் பல்வேறு விஷயங்களைப் பற்றி அவர்கள் இவரும் கதைத்துக் கொண்டிருந்த வேளை திடீரென்று தீயணைக்கும் வண்டியின் மணியோசை தெருவில் கேட்டது. இந்த இளம்தாய் காஞ்சனாவுக்கு அந்த சத்தத்தைக் கேட்டாலே உடலெல்லாம் நடுங்கிவிடும். ஏனென்றால் இந்த இளம்தாயின் கணவனாகிய கஜன் தீ விபத்தொன்றிலேயே காலமானார். அன்றிலிருந்து தீயணைக்கும் வண்டியின் மணியோசை கேட்டாலே பயம்.

அவருடைய உறவினரோ "நீ ஒன்றுக்கும் பயப்படாதே அது சும்மா அடிக்கிறது" என்று தேற்றினார். ஆனாலும் டிங் டிங் என்ற மணியோசை அவர்கள் தெருவின் பக்கமாக மிக அருகிலேயே கேட்பதை உணர்ந்த அந்தத் தாய் மிகவும் கலங்கி "நான் போய்ப் பார்க்கிறேன் எனக்கு பயமாக இருக்கிறது" என்று சொன்னாள்.

மீண்டும் அவர்களுடைய உறவினர் "அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. நீ வீணாக பதறாதே" என்றார்கள். இந்த இளம் தாய்க்கோ அங்கு இருக்கவே முடியவில்லை. "நான் என்னவென்று போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று அவர்கள் தடுத்தும் கேளாமல் மிக வேகமாக தன் வீட்டை நோக்கி ஓடினாள்.

அங்கே போய்ப் பார்த்தால் அவர்கள் வீட்டுக் கூரையில் தான் தீ பற்றிக் கொண்டிருந்தது. தீ அணைக்கும் படையினர் தீயை அணைக்க மிகுந்த சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் காற்றின் மிகுதியால் தீ சுழன்று சுழன்று வந்து கொண்டிருந்ததால் அவர்களால் உள்ளே சென்று குழந்தையைக் காப்பாற்ற முடியவில்லை. அந்தத் தாய் தன் வீடு பற்றி எரிவதைக் கண்டவுடன், "ஐயோ என் குழந்தை! என் சிறு குழந்தை கஜி" என்று கதறி வீட்டிற்குள் நுழைய முற்பட்டாள். தீ அணைக்கும் படையினர் வந்து தடுத்த போதும், அவர்களை தள்ளிவிட்டு, அந்தத் தாய் வீட்டினுள் ஓடிச் சென்று தன் குழந்தை கஜி தூங்கும் அறையின் கதவைத் திறந்து தொட்டிலில் கிடந்த குழந்தையை அள்ளி அணைத்துக் கொண்டு வெளியே வர முயற்சித்தபோது கூரையிலிருந்து ஒரு பெரிய உத்திரம் அவர்கள் அருகில் விழுந்தது. தாய் நிலைதடுமாறி கீழே விழுந்து, புகை மூச்சை அடைக்க, கண்கள் புகையினால் கலங்க எப்படியோ தன் குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினாள். வெளியே வந்தவுடன் தாய் மயக்கமடைந்து கீழே விழுந்து விட்டாள். அண்டை அயலகத்தார் அந்தத் தாயை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். மருத்துவர்கள் கஷ்டப்பட்டு தாயினுடைய உயிரைக் காப்பாற்றினார்கள். பல மாதங்கள் அந்தத் தாய் மருத்துவமனையில் இருக்க வேண்டிதாய் இருந்தது. உயிர் காப்பாற்றப்பட்ட போதும் அந்தத் தாயினுடைய அழகான இரு கரங்களும் நெருப்பினால் கருகி அதன் அழகை இழந்திருந்தன. ஆனால் அவள் சிறிதளவேனும் கவலைப்படவில்லை. ஏனென்றால் தன் குழந்தை காப்பாற்றப்பட்டதே!

நாட்கள் பல கடந்தன! வருடங்கள் உருண்டோடின! குட்டி கஜி சிறு பெண்ணாக வளர்ந்தாள். இப்போது அவளுக்கு எட்டு வயது. பல காரியங்களை உற்றுநோக்கும் பருவத்தை அவள் அடைந்திருந்தாள். தாயின் கையையும் உற்று நோக்கி கவனித்துக் கொண்டுவந்தாள்.

ஓர்நாள் அம்மா இது என்ன? இவ்வளவு அசிங்கமான கைகளா உங்களுக்கு என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

மிகுந்த வேதனையோடு அவளுடைய தாய் காஞ்சனா "ஆமா கண்ணு, அருவருப்பகவா இருக்கிறது" என்றாள்.

எல்லோருக்கும் அழகான கைகள் இருக்கும்போது உங்களுக்கு மாத்திரம் ஏன் இவ்வளவு அசிங்கமான கைகள்? என்று கஜி தன் ஒவ்வொரு வார்த்தையும் ஈட்டியைப் போல் தாயின் நெஞ்சில் குத்துவதை சிறிதும் அறியாமல் கேட்டாள் தாயின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது.

நான் ஏதாவது தவறாக சொல்லி விட்டேனா அம்மா? நான் ஏதாவது தவறு செய்துவிட்டேனா அம்மா? என்று கஜி கபடமில்லாமல் கேட்டாள்.

அப்பொழுது அவளுடைய அம்மா கஜியின் கைகளைப் பிடித்துக் கொண்டு உள் அறைக்குச் சென்று நடந்ததையெல்லாம் கூறி தன் கைகள் ஏன் அந்த நிலையை அடைந்தன என்ற விளக்கத்தைக் கூறினாள்.

கஜி தன் தாயின் கரங்களைப் பிடித்துக் கொண்டு கண்களில் கண்ணீர் வடித்தவாறு "என் அன்பு அம்மா! நிச்சயமாக இந்த கரங்கள் தான் உலகிலேயே மிக அழகிய கரங்களும் அன்பின் கரங்களும்" என்று சொல்லிச் சொல்லி அந்தக் கரங்களை முத்தமிட்டுக் கொண்டேயிருந்தாள்.

~ தேவா அக்கா ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புமுனை

சிறுகதை

சங்கையூர் ஜெகன்

தடிமாதக் கொடும் வெய்யில் அடித்துக் கொண்டு இருக்கின்றது. மரம், செடி, கொடி ஒன்றும் அசையாத நிலை. ஓவியன் ஒருவனால் வரைந்து விடப்பட்ட ஓவியம் போலத் தோற்றமளித்தது. வெப்பத்தின் கொடுமையினால் வீதிகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. விவசாயிகள் கூடத் தமது வேலைகளை நிறுத்திக் கொண்டு வீடுகளுக்குள் சென்று முடங்கி விட்டனர்.

அது, மூன்று கிராமங்களைத் தொடுத்து நிற்கும் விசாலமான ஓர் விளைநிலம். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்திப் பாடுபட்ட விவசாயிகளின் துயர் துடைக்கவென, அவ் உப உணவுத் தாவரங்கள் அடர்ந்து, சளைத்துப், பூத்துக் குலுங்கி நிற்கின்றன. கொட்டும் வெய்யிலிலும் சோர்வற்று நிமிர்ந்து நிற்கும் அத் தாவரங்களை உயரத்தில் நின்று பார்த்தால் பச்சைக் கம்பளம் ஒன்று விரித்து விட்டதுபோல் காட்சி தரும்.

இத் தோட்டங்கள் வரப்புகளால் எல்லை போட்டிருக்கும். நெற்றியில் வியர்வை முத்துக்களாகி நிற்பதையும் பொருட்படுத்தாமல் அவ் வரப்பின் மீது நடந்து வந்து கொண்டிருக்கிறார் அவ்வூர் பாடசாலைத் தலைமை ஆசிரியர். இவ் இயற்கைக் காட்சிகள் அவர் கவனத்தை ஈர்த்ததாகத் தெரியவில்லை. அந்த ஆலமர வளவுதான் அவர் கவனத்தில் இருந்தது. "இன்னமும் மூன்று தோட்டங்கள்தான்" என்று தனக்குள் கூறியபடி கையில் வைத்திருந்த உரப்பையை மறுகைக்கு மாற்றிக் கொண்டார்.

மாஸ்ரர் வருவதைக் கண்ட அனைவரது முகத்திலும் மலர்ச்சி பிறந்தது. "பிறந்ததின வாழ்த்துகள், மாஸ்ரர்" என்றபடி பட்டினசபைத் தலைவர் அவர் முன் கையை நீட்டினார். மாஸ்ரர் சிரித்தபடி அவரின் கையைக் குலுக்கிய பின், ஒவ்வொருவர் கையையும் குலுக்கி வந்தார். அக் கிராமத்தின் பெரிய மனிதர்கள் சிலரும், சக ஆசிரியர்கள் சிலரும் மாஸ்ரரின் அழைப்பை ஏற்று அங்கு கூடியிருந்தனர்.

"மன்னிக்கவேண்டும், கொஞ்சம் சுணங்கிவிட்டது" இது மாஸ்ரர். "இதென்ன மாஸ்ரர், பாடசாலைக்கே நீங்கள் நேரத்துக்குப் போனது கிடையாது, இது தெரியாதா என்ன..?" பட்டினசபைத் தலைவர் சொல்லி முடிக்கவில்லை அனைவரும் கொல்லென்று சிரித்து அதனை ஆமோதித்தனர். மாஸ்ரரும் அசட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தார். ஆனால் பட்டினசபைத் தலைவரின் இச் செயல் அவருக்குப் பிடிக்கவில்லை. "ஊரை முறிச்சு உலையிலை வைக்கிற மடையன். எனக்கு உபதேசம் செய்ய வந்திட்டான்" என்று மனதில் கறுவிக் கொண்டார்.

தான் கொண்டுவந்த உரப்பையிலிருந்து ஓர் விஸ்கி போத்தலை எடுத்து, உடைத்து அனைவரது கிளாசிலும் ஊற்றினார் மாஸ்ரர். "இந்தாங்கோ எல்லாவற்றையும் இதில் வைக்கிறேன். விரும்புவதை எடுத்துக் குடியுங்கோ" என்றபடி வெளிநாட்டுக் குடிபானங்களையும், வடை, இறைச்சிக்கறி, அவித்த முட்டை போன்ற சில பொருட்களையும் எடுத்து விரிக்கப்பட்டிருந்த துணியின் மேல் வைத்தார்.

"மாஸ்ரர், நீங்கள் தான் இன்றைய கதாநாயகன். ஆகவே முதலில் குடியுங்கோ" என்றபடி ஒரு கிளாஸ் விஸ்கியை அவரிடம் நீட்டினார் ஆசிரியர் சேகரம். அதை வாங்கிய மாஸ்ரர் அனைவரது கிளாசிலும் தட்டியபின் குடிக்க ஆரம்பித்தார்.

அகோர வெய்யிலின் வரட்சியாலும், நடந்து வந்த களைப்பினாலும் அனைவரும் அங்கிருந்த பொருட்களைக் காலி செய்வதில் கவனமாக இருந்தனர். விழுது ஒன்றில் சாய்ந்தபடி இறைச்சிக் கறியைச் சுவைத்துக் கொண்டிருந்த கிராம சேவகர் சிரித்தபடி நிமிர்ந்து அமர்ந்தார். தொடர்ந்து அனைவரையும் நோக்கி ஓர் கேள்வியைத் தொடுத்தார்.

"ஏன், தனது பிறந்த தினத்தைக் கொண்டாட மாஸ்ரர் ஆலமரத்தடியைத் தேர்ந்து எடுத்தார் என்று யாராலும் சொல்ல முடியுமா"?

"இதில் என்ன புதுமை கிடக்கிறது? விழுதுகள் உள்ள ஒரே மரம் இதுதான். அதனால், சாய்ந்து இருக்கவும், ஆளை ஆள் பார்த்துக் கதைக்கவும் வசதியாக இருக்கும் என்று நினைத்திருக்கலாம் அல்லவா?" என்றார் அவர் வட்டார உறுப்பினர் ராஜ்குமார்.

"இல்லையப்பா! புத்தர் அரசமரத்தைத் தேர்ந்தெடுத்து விட்டார். நாங்கள் ஆலமரத்தையாவது தேர்ந்தெடுக்கக் கூடாதா? என்று எண்ணியிருக்கலாம் அல்லவா" என்று கிராமசேவகர் சொல்லவும் அனைவரும் சிரிக்கவும் சரியாக இருந்தது.

ஆனால், மாஸ்ரரின் மனம் மட்டும் அங்கு இல்லை. முதல் நாள் மனைவி கனகத்துடன் நடைபெற்ற சம்பாசனையை நினைத்துக் கொண்டிருந்தது. வீட்டில் இந்த பிறந்ததின கொண்டாட்டத்தை நடத்த அவள் சம்மதிக்கவேயில்லை.

"மதுவும், இறைச்சியும் தான் பிறந்ததினம் என்றால் அதை மதுக்கடையிலே கொண்டாடுங்கோ" என்று விட்டாள். அவளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்யும்போது குனிந்த தலை நிமிராது, கேள்விகளுக்குப் பதில் சொல்லத் துணிவற்றுத் தயங்கி நின்ற கனகமா இவள்? இக்காலத்து அரசாங்கங்கள்போல், படிப்படியாக அதிகாரத்தைக் கைப்பற்றி இன்று அவரை வீட்டிலே ஆட்டிப்படைக்கிறாள். இது வெளியிலே தெரிந்தால் அவர் தலை நிமிர்ந்து வாழத்தான் முடியுமா?

அவர் பாடசாலைக்குள் நுழைந்து விட்டால் போதும், ஊசி விழுந்தால் கேட்குமளவு அமைதியாகிவிடும். ஆசிரியர்கள் முதல் மாணவர்கள் வரை அந்தத் தலைமை ஆசிரியருக்குப் பயம். மிகக் கண்டிப்பானவர். ஆனால்...? வீட்டில் ஏன் இப்படியானார்? இது அவரால் விடைகாணமுடியாத ஒரு கேள்வியாக இன்னும் அவர் மனதை உறுத்திக் கொண்டிருக்கின்றது.

அனைவரினதும் சிரிப்பொலியினால் சிந்தனையிலிருந்து விடுபட்ட மாஸ்ரர் ஒன்றும் புரியாமல் விளித்தார்.

"அதுக்கிடையிலே எங்கே போட்டீர்கள் மாஸ்ரர்"........கிராமசேவகர் கேட்கின்றார், "புத்தர் அரசமரத்தின் கீழ் செய்த விளையாட்டை (ஞானம் பெற்றது) மாஸ்ரர் ஆலமரத்தின் கீழ் தொடங்கி விட்டாராம்!" என்று ஆசிரியர் சேகரம் சொல்லி முடிய மீண்டும் சிரிப்பு.

"மாஸ்ரர் எங்களுடைய கேள்விக்கு உங்களுடைய பதில் என்ன? உங்கள் பிறந்த தினத்தைக் கொண்டாட ஏன் ஆலமரத்தைத் தேர்ந்து எடுத்தீர்கள்?" இது ஆசிரியர் மோகனின் கேள்வி.

"ஓ..... அதுவா....அது தெரியாதா? இதுதான் இயற்கை எமக்குத் தந்த கொடை! இதோ இந்த ஆலமரத்தைப் பாருங்கள் இந்தப் பெரிய மரத்துக்கு எவ்வளவு சிறிய பழம். அதோ அந்தப் பூசணிச் செடியைப் பாருங்கள் அந்தச் சிறிய மரத்துக்கு எவ்வளவு பெரிய காய்கள். அப்படிப் பெரிய காய்கள் இந்த மரத்தில் காய்த்தால் நாம் இதன் கீழ் இருக்க முடியுமா? விரலுக்கு ஏற்றதுதான் வீக்கம் என்பதனையும் பொய்ப்பித்து இயற்கை எங்களுக்குத் தந்திருக்கும் ஓர் அற்புதம் இருப்பிடம்! ஓர் ஆறுதல் மடம் அல்லவா இது!!

மறுகணம்...! சபாஸ், சபாஸ்!! அனைவரினதும் கைதட்டலுக்கும் மத்தியில் பட்டினசபைத் தலைவர் எழுந்து நின்று "இது தான் உங்களை மாஸ்ரர் என்கிறோம். அறிவுக் கடலப்பா நீர்!!" என்றடி அவரைக் கட்டியணைத்தார்.

சிறிது நேரம் அங்கு அமைதி நிலவியது.

"மாஸ்ரர், அந்த இறைச்சிக் கறியை இஞ்சாலை தாருங்கோ. உந்தச் சனியன் இல்லாமல் என்னால் இருக்க முடியாது" என்றபடி கிராமசேவகர் கையை நீட்டினார்.

அவரின் கையைத் தட்டிவிட்ட அத் தொகுதி உறுப்பினர் ராஜ்குமார் "ஏன் வீட்டிலே சொல்லித் தாராளமாக காய்ச்சி சாப்பிடுகிறதுதானே?"

வீட்டிலையோ.....!? அவள் பாவி கிழமையில் நான்கு நாட்கள் அந்த விரதம், இந்த விரதம் என்று என்னை வத்தல் போடுகிறாள். என் ராக்! என்னை வாட்டி, அவள் விரதமிருந்து என்ன எடுக்கப் போகிறாள்? தன் கவலைகளை வார்த்தைகளில் வடித்தார் கிராமசேவகர்.

சிரித்தபடி எல்லோரும் மாஸ்ரர் பரிமாறிக் கொண்டிருந்த பண்டங்களைச் சுவைத்துக் கொண்டிருந்தனர். அதன்பின் மாஸ்ரரும் ஒரு இடத்தில் அமர்ந்து இறைச்சியை சுவைத்துக் கொண்டிருந்தார்.

எங்கேயோ இருந்து பறந்து வந்த காகம் ஒன்று பட்டினசபைத் தலைவரின் தட்டிலிருந்த இறைச்சியைத் தூக்கிக் கொண்டு பறந்தது. "இது ஒரு சனியன்" என்று, வேறும் சில சொற்களைப் பாவித்து காகத்தை ஏசிக் கொண்டிருந்தார் அவர். அதன் பின் அங்கே முழு அமைதி நிலவியது.

கதவடியில் ஏதோ அரவம் கேட்டது. திரும்பிப் பார்த்த சேகரம் வியப்புடன், "உவன் கந்தையற்ரை மகன் சங்கர் தானே? இங்கே ஆரிட்டை வாறான்?" என்றார்.

இச்சொல் கேட்ட மாஸ்ரர் இடி கேட்ட நாகம் போல் சிலிர்த்து நிமிர்ந்தார். அவர் கண்களில் வியப்பும், பயமும் தோன்றி மறைந்தன. "இவன் ஏன் இப்ப இங்கே வருகிறான்? பழிவாங்கவா?..... அவர் மனதில் இக்கேள்வி உயர்ந்து நின்றது. இனம் தெரியாத பயம் அவரை உலுப்பத் தொடங்கியது.

பாடசாலையில் நடந்த அச் சம்பவம் அவர் மனத்திரையில் ஓட ஆரம்பித்தது. நான்கு மாணவர்கள் பாடசாலை நேரத்தில் வகுப்புக்குப் போகாமல் விளையாட்டு மைதானத்தில் அமர்ந்து மது அருந்தியதாக அவர்களது வகுப்பு ஆசிரியரினால் அவர்முன் விசாரணைக்கு கொண்டுவரப்பட்டது. அவர்களில் ஒருவன் அவர் மகன் ரகு. அவனை விசாரித்த பொழுது சங்கர் தன் நண்பர்களுடன் மது அருந்திக் கொண்டிருந்ததாகவும் தான் கேள்வியுற்று அதைத் தடுக்கப் போனதாகவும் கூறினான். சங்கரை விசாரித்த பொழுது ஒன்றுமே பேசாமல் மௌனம் சாதித்தான்.

இது மாஸ்ரரின் பொறுமையைச் சோதித்து விட்டது. மது அருந்தியதும் போதாமல் மௌனமும் சாதிக்கிறீரோ? என்று தன் கோபம் தீரும் வரையும் அவனை அடித்து விட்டார். அது மட்டுமன்றி பாடசாலைக்கு இரண்டு வாரம் வரக்கூடாது என்று தடை உத்தரவும் போட்டுவிட்டார். இது நடந்து ஒரு வாரமாகிவிட்டது. அவனின் நிழலைக் கூட அவர் காணவில்லை. ஆனால் இன்று...!

"மாஸ்ரர்!"; அவனின் கூரல் கேட்டு சிந்தனையிலிருந்து மீண்டார் அவர். அருகில் நின்றபடி அவரையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன். அவனின் முகம் வியர்வையால் நனைந்தது.

பார்க்கத் துணிவற்ற மாஸ்ரர் பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டானர்.

இவ்வளவு நாளும் கட்டிக் காத்து வந்த கௌரவத்தை இந்தப் பெரிய மனிதர்கள் முன் இன்று இழந்துவிட வேண்டியது தானா? எனது குடும்ப வாழ்க்கையைப் பற்றி முழுமையாக அறிந்த இவனைத் தண்டித்தது என் முழுத் தவறு. கண்ணாடி வீட்டிலிருந்து கல் எறிந்தவன் கதை போலாகிவிட்டது என் நிலை என்று அவரின் மனம் சஞ்சலப்பட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரின் மத்தியில் நல்லதொரு உணவகம்
கிராமத்து விருந்து
Tel: (416) 266-4240 / (416) 424-2164
603 Kennedy Road, Scarborough, Ont.

ஸ்காபுரோவில் தலை சிறந்த தளபாட விற்பனை நிலையம்
N.T. K. FURNITURE
Tel: (416) 289-6596
3255 Lawrence Ave. East, Unit #4
Scarborough, Ont. MIH 3A3

தரமான பொருட்களை இறக்குமதி செய்பவர்களும், தயாரிப்பவர்களும்
Niru Brand
Tel: (416) 299-4202
NIRU ENTERPRISE INC
22 Melham Road
Unit #1
Scarborough

LOURDES
EAST & WEST INDIAN STORE
நகரின் மத்தியில் நீங்கள் நாடவேண்டிய பலசரக்கு மாளிகை
Tel: (416) 266-5025
199 Markham Road
Scarborough, Ont


உதயன் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவை ஒட்டி

# UTHAYAN உதயன் 98

## பல்சுவைக் கலைவிழா

எதிர்வரும் மே மாதம், 2ம் திகதி, சனிக்கிழமை
மாலை 6:00 மணிக்கு, ஸ்காபரோ
Lawrence / Kennedy சந்திப்பில் அமைந்துள்ள
Winston Churchill Collegiate மண்டபத்தில்

**நிகழ்ச்சிகள்**
**சலங்கோதையம்**
நிர்மலா சுரேஸின் மாணவிகள்
**"கலைமன்றம்"**
நிரா சந்துரு அவர்களின் மாணவிகள்
**R.G. Education**
ரஜனி குலேந்திரன் அவர்களின் மாணவிகள்
**நகைச்சுவை நிகழ்ச்சி**
பரிசளிப்பு வைபவம்
சிறப்பு நிகழ்ச்சி 'Mega Tuners"

மங்கள இசை
பி. சித்திரவேல் குழுவினர்

**ரொரொன்ரோவில் புகழ் பெற்ற Mega Tuners**

வாத்தியக்கலைஞர்கள்
அரவிந்தன்
ஷேலர்
றோய்
சேரன்
செந்தூரன்
கபிலன்
அஜந்தன்
போல்

பாடகர், பாடகிகள்
வி. எஸ் தெய்வேந்திரம்
கே. பி. சத்தீஸ்
எஸ். பாலச்சந்திரன்
ஈஸ்வரன்
ரி. எஸ். நாதன்
கௌரி பாஸ்கரன்
குமாரி பாஸ்கரன்
சுகல்யா ரகுநாதன்
எலிசபேத் மாலினி

தொகுப்பாளர்:
எஸ். பாலச்சந்திரன்


RE/MAX
தமிழ் மக்களுக்கு நன்கு அறிமுகமானவர்

Harinder Singh Lamba
Tel: (416) 299-8199
Res: (905) 477-4102
3390 Midland Ave. Unit #8
Scarborough, Ont

உங்கள் காப்புறுதித் தேவைகளுக்கு
London Life
நம்பிக்கையுடன் நாடவேண்டியவர்கள்
பாலன் கணபதி
(416) 296-1040
லோகன் கணபதி
(416) 288-1416




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே இடத்தில் அதே நிர்வாகத்தில்

# சங்கர் அன் கம்பனி

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்




அத்தியாவசிய உணவுப் பொருட்கள்,
மரக்கறி, பழவகைகள், பூசைத் திரவியங்கள்,
சுவாமிப் படங்கள், சுவாமிச் சிலைகள்,
சுவாமி விக்கிரகங்கள், பட்டுத் துணிகள், வேட்டி,
சால்வை, அறுகம்புல், மாவிலை, வாழையிலை,
வேப்பிலை, வில்வம் இலை, முருங்கையிலை,
கப்பல் வாழைப்பழம் அனைத்தையும்
பெற நாடுங்கள்

2425 Eglinton Ave. East, Unit #6, Scarborough, ON M1K 5G8

**Tel: (416) 759 5100/ 759 4916**

**சங்கர் இன்ரர்நஷனல்**

# MADRAS MAHAL



Authentic South Indian Family Coisine

@ 286 Markham Road
Scarborough, ON. M1J 3C5
**Tel: (416) 269 3666**

@ 1770 St. Clair Ave. West
Scarborough, ON. M6N 1J3
**Tel: (416) 656 3466**

**Fax: (416) 658 5882**

e.mail: mmahal@connection.com

# APPLEMORE AUTOMOTIVE

**சகல விதமான உட்புற,
வெளிப்புற பராமரிப்பு வேலைகளுக்கும்
உங்களின் வாகனத்
திருத்த வேலைகளுக்கும்
நீண்டகால அனுபவமிக்க
எங்களை நாடுங்கள்**

2500 Lawrence Ave.East, Unit. 11
Scarborough, ON
(midland/Lawrence)

**416 285 4998**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. அவரின் உடல் வியர்வையால் நனைந்தது.

"மாஸ்ரர்" மீண்டும் அவன் அழைப்பு. என்ன என்பதுபோல புருவத்தை உயர்த்தி அவனைப் பார்த்தார் மாஸ்ரர்.

"உங்களோடு கொஞ்சம் கதைக்க வேண்டும். அப்படித் தனியாக வருவீர்களா?" பதிலுக்கும் காத்திருக்காமல் அவன் நடக்க ஆரம்பித்தான். மகுடியில் மயங்கிய நாகம் போல அவனைப் பின்தொடர்ந்தார் மாஸ்ரர். அவ் வளவின் ஓர் எல்லைக்கு அவரை அழைத்துச் சென்ற சங்கர் திரும்பி நின்று அவரைப் பார்த்தான்.

"மாஸ்ரர், ஆசிரியர்கள், மாணவர்களின் வழிகாட்டிகள் அல்லவா? எனிமேல் மது அருந்த மாட்டேன் என்று நீங்கள் ஆலயத்தில் செய்த சத்தியத்தை மறந்து விட்டீர்களா?"

இரண்டாம் தடவையாக அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சம்பவம் நினைவுக்கு வந்தது. உடல் நன்றாகப் பாதிக்கப்பட்டு விட்டதாகவும் எனிமேல் மதுவைப் பாவித்தால் உயிருக்கே ஆபத்தாகிவிடும் என்று டாக்டர்கள் அறிவுரை கூறியது நினைவுக்கு வந்தது. ஆஸ்பத்திரியால் வீடு திரும்பியவுடன் கனகம் அவரைக் கோவிலுக்கு அழைத்துச் சென்று "எனிமேல் குடிக்க மாட்டேன்" என்று சத்தியம் வாங்கிக் கொண்டாள். இருந்தும்.....! நான் விட்டுவிட்டேன். இப்போ முதலை தான் என்னை விடுகுதில்லை என்ற கதைதான் நடந்து கொண்டிருக்கிறது.

"மாஸ்ரர், பூசாரிகள் தவறு செய்வதனால் நாஸ்திகம் பரவிக் கொண்டிருக்கின்றது. ஆசிரியர்கள் தவறு விடுவதனால் மாணவர் சமூகத்தில் அயோக்கியத் தனம் தலைவிரித்தாடுகின்றது. ஒருவனுக்கு மாதா, பிதா, குரு மூவரும் தான் கண்கண்ட தெய்வம் என்கிறார்கள். மாதாவும் பிதாவும் இரத்தத்தால், உறவால் எம்முடன் தொடர்புடையவர்கள். ஆனால் சேவைக்கு ஊதியம் பெறும் குருவுக்கு ஏன் இந்த உரிமை வந்தது. தாயைப்போல, ஆசிரியரும் மாணவர்களுக்காகப் பத்தியம் இருந்து வாழ வேண்டும். மாணவர்களின் எதிர்கால நல் வாழ்வுக்காக நீங்கள் சில கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்து வரவேண்டியவர்கள். கெட்டவைகளை விலக்கிவிட்டு நல்லவைகளை உங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்ந்து காட்ட வேண்டிய வழிகாட்டிகள் அல்லவா நீங்கள்? அதற்காகத்தான் எமது முன்னோர்கள் ஆசிரியர்களுக்கு இத்தகைய ஓர் உயர்ந்த ஸ்தானத்தைக் கொடுத்தார்கள்.....நீங்கள் மதுவை அருந்திக் கொண்டு மற்றவர்கள் அருந்துவதை எப்படிக் கண்டிக்க முடியும்? அதனால்தான் உங்களின் மகன் ரகு தன் நண்பர்களுடன் பாட-சாலை மைதானத்தில் மதுவை அருந்தத் துணிந்தான். அவனைக் காட்டிக் கொடுத்து நான் தப்பியிருக்கலாம். ஆனால் அது உங்களுக்கு ஓர் களங்கம் அல்லவா. உங்கள் தலை என்றும் சாயக்கூடாது! அந்தப் பாடசாலையில் நீங்கள் ஒரு தனிக்காட்டு ராஜாவாகவே இருக்க வேண்டும்!! அதற்காகத்தான் அத்தனை அடிகளையும் அன்று சுமந்தேன் மாஸ்ரர்" அவன் குரல் ஆவேசத்தில் உயர்ந்தது. கண்கள் அருவியென நீரைச் சுமந்தன.

மாஸ்ரரின் மனம் துணுக்குற்றது. நீதியிலும், நான் இந்த அப்பாவிக்குத் தவறிழைத்து விட்டேனா? இரக்கத்துடனும், குற்ற உணர்வுடனும் அவனை நிமிர்ந்து பார்த்தார்.

மாஸ்ரர், வெளிச்சத்தைக் கொடுக்கும் விளக்கின் கீழ் இருட்டு இருப்பதைப்போல, கல்வி ஒளியைத் தரும் உங்கள் வாழ்வில் இருக்கும் இருட்டை அகற்றுவீர்களா? உங்களைப்போன்ற அறிவாற்றல் உள்ள ஆசிரியர்களின் சேவை, திசைமாறிக் கொண்டிருக்கும் எம் மாணவ சமுதாயத்துக்குத் தேவை. நல்லதொரு எதிர்கால சமூகத்தை உருவாக்க உங்கள் பங்களிப்பை எமக்குத் தருவீர்களா? எமக்கோர் நல்ல வழியைக் காட்டுவீர்களா?" கண்களில் நீர் பெருக அவர் காலடியில் வீழ்ந்தான் சங்கர்.

அவரின் மனம் கூனிக் குறுகியது. அடேயப்பா! இவன் எவ்வளவு அறிவாற்றல் உடையவன். புத்தரைப்போல, இயேசுவைப்போல இன்னும் ஓர் அவதாரமா? செய்யாத குற்றத்துக்காகத் தான் தண்டனையை ஏற்றுக் கொண்டு மற்றவர்களின் மதிப்பை காப்பாற்றியிருக்கிறான். விரோதியை அடித்து விரட்டுவது போல பாடசாலையை விட்டுத் துரத்தியும் அவன் என்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளான். இன்றைய மாணவர் உலகில் இப்படியும் ஓர் பொறுமைசாலியா.....!

என் தவறுகளை எவ்வளவு கண்ணியமாக எனது கண்களின் முன் கொண்டுவந்து காட்டினான். தருணமறிந்து தன் கருத்துக்களை என் மீது புகுத்தியுள்ளான். இப்படியான உத்தமர்கள் லட்சத்தில் ஒர்வர் தான் பிறக்கிறார்கள். எனது சேவையில் அவன் வைத்திருக்கும் நம்பிக்கை வீண்போகக்கூடாது. இப்படியான நல்லவர்கள் அழிந்துபோகக் கூடாது. இவர்களுக்கு நான் நல்ல வழியைக் காட்டியே தீரவேண்டும். இனி இதுதான் என் இலட்சியம்!" அவர் மனம் உறுதிபூண்டது.

"சங்கர், மகனே எழுந்திரு" குனிந்து அவனைத் தூக்கி நிறுத்தினார். பின் அவன் தோளில் தன் கையைப் போட்டு அவனை அணைத்தபடி "மகனே, நீ எனக்கு மாணவன் மட்டுமல்ல என் குருவும் நீதானப்பா!! டாக்டர்களால், மனைவியால், உறவினர்களால், ஏன்..... ஆலயத்தில் நான் செய்த சத்தியத்தால் கூட சாதிக்க முடியாததை நீ ஒரு வினாடியில் சாதித்து விட்டாய். உனது பொறுமை அதைச் சாதித்து விட்டது. சங்கர்! உன்மீது சத்தியம்; இனி நான் வாழ்வில் மதுவை தொடமாட்டேன்! ஏன் தெரியுமா? நான் வாழவேண்டும் உனக்காக, உன் இலட்சியங்களுக்காக. நீ காண விரும்பும் எதிர்காலச் சந்ததியை உருவாக்க வேண்டும்" என்றபடி சங்கரை கட்டி அணைத்தார் மாஸ்ரர்.

இருவரின் கண்களும் குளமாகின. அதனூடே ஓர் பிரகாசமான எதிர்காலம் இருவருக்கும் தோற்றமளித்தது.

*(யாவும் கற்பனை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Ratnes

*Basement Renovation*
*Electrical Works*
*Plumbing*
*all Maintenance Works*

**Tell: 416 283 9658**
**Cell: 416 726 4231**

4A Parsonage Dr., Scarborough, ON M1B 4J7




# சுவர்ணாஸ்

TEX & GIFT

ஆண்பெண் நவநாகரீக உடைகள், வேட்டிகள்,
பனாரஸ் சாறிகள், கல்யாணப் பட்டுப் புடவைகள்,
சிறுவர் சிறுமியருக்கான உடைகள்
எவர்சில்வர் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள்,
கோல்ட் கவரிங் நகைகள், பெண்கள் சிறுமிகளுக்கான
நக்மா சூட், பஞ்சாபி சூட்
தங்கநகைகள், வெள்ளிக் கொலுசுகள், தலைநகை செற்,
தலைப்பாகை வாடகைக்கும் விற்பனைக்கும் கிடைக்கும்.

Fax Srevice
துரித பணமாற்றுச் சேவை
Video பிரதிமாற்றம்

Audio - பழைய புதிய பாடல்கள், பட்டிமன்றம்,
பக்திப் பாடல்கள்

# Swarnas

2879 Jane Str. #5, North York, ON
York Wood Shopping Plaza (Jane & Finch)
**Tel: (416) 638 2488 Fax: (416) 638 2488**



# அம்மன் உணவகம்

# AMMAN FOOD

Take - Out & Catering

திருமண விழாக்கள், பிறந்தநாள் விழாக்கள் மற்றும் அனைத்து விசேட வைபவங்களுக்கும் தரமான சுவையான உணவு வகைகளை நீங்கள் குறைந்த விலையில் குறித்த நேரத்தில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்.

250 பேருக்கு மேல் உணவு ஓடர் செய்பவர்களுக்கு CTBC வானொலி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும்.

2861 Jane St. North York (Jane & Finch)
**Tel: (416) 638 9676**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணம் - 1998

## ஜமேக்கா
(JAMAICA)



ஜமேக்கா என்ற நாடு மேற்கிந்திய தீவுகளில் ஒன்று. 50 ஆண்டுகளுக்கு மேலாக இங்கு பிரபல்யமான விளையாட்டாக இருந்து வருவது 'கிரிக்கட்' ஆகும். எனினும் ஜமேக்கா சர்வதேச கிரிக்கட் போட்டிகளில் கலந்துகொள்வது கிடையாது. ஆனால் மேற்கிந்திய தீவுகள் கிரிக்கட் கோஷ்டியில் இரண்டு அல்லது மூவர் ஜமேக்காவைச் சேர்ந்தவர்களாக இருப்பர். சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்வரை பொழுதுபோக்காக ஜமேக்காவில் விளையாடிவந்த உதைபந்தாட்டம், இன்று அந்த நாட்டை உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் பங்குபெறும் 32 நாடுகளில் ஒன்றாக பிரான்சிற்கு அழைத்துச் சென்றுள்ளது.

நல்லபடியான விளையாட்டு மைதானமோ அல்லது பயிற்சிக்கான வசதியோ இல்லாத ஜமேக்காவில், திசையறிகருவியாக செயல்பட்டவர் ஜமேக்கா உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் Burell ஆவார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தலைவராக தெரிவு செய்யப்பட்ட அவர், பிரேசில் நாட்டவரிடையே இயல்பாக உள்ள திறமை தமது நாட்டு இளைஞர்களிடையே இருப்பதை உணர்ந்து, பிரேசிலைப் பிறப்பிடமாகக் கொண்ட Simoes ஐ பயிற்சியாளராகத் தேர்ந்தெடுத்தார். குறுகிய காலத்தில் விளையாட்டு வீரர்களுக்கு நல்ல பயிற்சியைக் கொடுத்து ஒரு புதிய அணியை உருவாக்கினார். இங்கிலாந்தில் பிறந்த ஜமேக்கர்களின் வழித்தோன்றல்களின் பிள்ளைகளையும் Burell ஜமேக்கா அணிக்கு ஆடவருமாறு வேண்டுகோள் விடுத்து, வெற்றியும் கண்டார். இங்கிலாந்தின் பிரபல்யமான உள்ளூர் அணிக்கு ஆடும் Pal Hall, Fitzroy Simpson, Robe Earle, Dean Burtan, Marcas Gayle ஆகிய ஐவரும் இங்கிலாந்தில் பிறந்த ஜமேக்கர்களாவர். இவர்களில் ஏர்ள் உம், 21 வயதுடைய பெட்டனும் இங்கிலாந்து தேசிய அணிக்கு ஆடும் சந்தர்ப்பம் இருந்தபோதும், குடும்பத்தலைவர்களின் ஆலோசனைக்கு இணங்கி ஜமேக்காவுக்காக விளையாடுகின்றனர்.



ஜமேக்கா பயிற்றுனருக்கும், விளையாட்டு வீரர்களுக்குமிடையே புரிந்துணர்வுண்டு. Simpson இன் பணிக்கு ஜமேக்கா உதைபந்தாட்டச் சம்மேளனம் கொடுக்கும் ஊதியம் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவு. ஜப்பான் பெருந்தொகையான ஊதியத்தைக் கொடுத்து Simpson ஐ தமதணிக்கு பயிற்றுனராக அழைத்தபோதும், Burell இற்குக் கொடுத்த வாக்குறுதியை மீற அவரால் முடியவில்லை. இப்படிப்பட்ட மனவுறுதியுள்ளவரின் வழிகாட்டலில் மன உறுதியுடன் விளையாடுகின்றனர் ஜமேக்க வீரர்கள். 32 நாடுகளில் ஒன்றாகத் தெரிவுசெய்யப்பட்டவுடன் ஜமேக்கா பிரதம மந்திரி ஒரு நாள் லீவு நாளாகப் பிரகடனம் செய்தது மட்டுமல்லாது விளையாட்டு வீரர்கள் அனைவருக்கும் நிலங்களைப் பரிசளித்தார். பிரான்சில் ஈட்டும் ஒவ்வொரு வெற்றிக்கும் மேலும் லீவு நாட்கள் கூடும் என ஜமேக்கா மக்கள் எதிர்பார்க்கின்றனர். எண்ணம் ஈடேறுமா?

பிரான்சில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபெறத் தகுதியுள்ள 32 நாடுகளும், அவை வெற்றி பெறுவதற்குரிய நிகழ்தகவும் பின்வருமாறு அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.


தற்போதுள்ள அணிகளின் விளையாட்டு வீரர்களின் தரத்தையும் அவர்களின் கூட்டு முயற்சியையும் அடிப்படையாக வைத்து இங்கிலாந்திலுள்ள Ladbrokes ஸ்தாபனத்தால் கணிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. பிரேசில் | 11-1 |
| 2. பிரான்ஸ் | 5-1 |
| 3. இங்கிலாந்து | 6-1 |
| 4. ஜேர்மனி | 7-1 |
| 5. இத்தாலி | 8-1 |
| 6. நெதர்லாந்து | 9-1 |
| 7. ஆர்ஜன்டீனா | 12-1 |
| 8. ஸ்பெயின் | 14-1 |
| 9. யூகோசிலாவியா | 25-1 |
| 10. நைஜீரியா | 28-1 |
| 11. நோர்வே | 28-1 |
| 12. கொலம்பியா | 33-1 |
| 13. குறோசியா | 40-1 |
| 14. றோமானியா | 40-1 |
| 15. டென்மார்க் | 40-1 |
| 16. பல்கேரியா | 50-1 |
| 17. பெல்ஜியம் | 66-1 |
| 18. சிலி | 66-1 |
| 19. பரகியே | 66-1 |
| 20. ஆஸ்ரியா | 80-1 |
| 21. கமறூன் | 100-1 |
| 22. மெக்சிகோ | 100-1 |
| 23. ஸ்கொட்லாந்து | 125-1 |
| 24. தென்னாபிரிக்கா | 150-1 |
| 25. ஐக்கிய அமெரிக்கா | 200-1 |
| 26. தென் கொந்தியா | 200-1 |
| 27. ஈரான் | 250-1 |
| 28. மொறாக்கோ | 250-1 |
| 29. சவுதிஅரேபியா | 200-1 |
| 30. ஜமேக்கா | 250-1 |
| 31. ருனிசியா | 250-1 |
| 32 ஜப்பான் | 250-1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலி (CHILE)



தென்அமெரிக்க நாடான சிலியில் தேசிய விளை யாட்டு உதைபந்தாட்டமாகும். 7ஆவது தடவையாக உலகக் கிண்ணப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப் பட்டிருக்கும் சிலி அணியில் உலகப் புகழ் ஆட்டக்காரர் *Ivan Zamorono* அங்கம் வகிக்கின்றார். 29 வயது நிரம்பிய இவருடன் ஜோடியாக முன்னணி ஆட்டக்கார-ராக 22 வயதுடைய *Salas* விளையாடுகின்றார். இந்த இரு வருக்கும் கோல் போடுவதென்றால் தண்ணீர்பட்டபாடு. *Za- Sa* என செல்லமாக அழைக்கப்படும் இவ்வி ருவரையும் பிரேசில் நாட்டு *Romario, Ronaldo (Ro - Ro)* ஜோடிக்கு ஒப்பிடுகின்றனர். எதிர்தரப்பு தண்டப்பரப்பில் இவ்விருவரையும் அடிக்கடி காணலாம். கடந்த மாதம் இங்கிலாந்துக்கு எதிராக வெம்பிலி அரங்கில் நடைபெற்ற காட்சிப் போட்டியின் போது பலம்பொருந்திய இங்கிலாந்து அணியை 2-0 என்ற கணக்கில் வென்று உதைபந்தாட்ட உலகத்தை திகைக்க வைத்துள்ளன. இந்த 'சிலி' அணியினர். இவர்களின் பயிற்றுனர் *Nelson Acostra*, தமது அணி நிச்சயம் இலகுவாக இரண்டாம் சுற்றுப் போட்டிக்கு தகுதி பெறும் எனக் கூறுகின்றார்!

உலகக் கோப்பைக்கான இறுதிப் போட்டிகள் 1962ம் ஆண்டு சிலி நாட்டில் நடைபெற்றபோது சிலி மூன்றாம் இடத்தைப் பெற்றது. *Za* வும் *Sa* வும் 1996இன் பின் நடைபெற்ற 16 தகுதிகாண் போட்டிகளில் காயங்கள் காரணமாக 5 போட்டிகளில் மட்டுமே ஒன்றாக ஆடியுள்ள னர். *Za* பத்து போட்டிகளில் 12 கோல்களையும், *Sa* 13 போட்டிகளில் 10 கோல்களையும் போட்டு தமது அணிக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தனர்.


தென்னமெரிக்காவிற்கே சொந்தமான விரைவாக பந்தைத் தள்ளிச் செல்லக்கூடிய தன்மை இவர்களிடம் உள்ளதால் *B* குழுவில் இடம்பெறும் போட்டிகளில் இத்தாலி, கமறூன், ஆஸ்திரியா ஆகியன கடும் போட்டி யைச் சந்திக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யூன் மாதம் 11ம் திகதி இத்தாலிக்கெதிராகவும், யூன் 17ம் திகதி ஆஸ்திரியாவுக்கு எதிராகவும், யூன் 23ம் திகதி கமலூனுக்கு எதிராகவும் சிலி விளையாடவுள்ளது.

## சிதறிய செய்திகள்

★ பாக்கிஸ்தான் அணிக்கும் தென்னாபிரிக்கா அணிக்கும் இடையே நடைபெற்ற 3 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட இரு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டிகளில் வெற்றி பெற்றது. மற்றைய போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. தொடரின் சிறந்த ஆட்டக்காரராக பாக்கிஸ்தான் அணியைச் சேர்ந்த அசார் மாமுட் தெரிவு செய்யப்பட்டார். இவர் இத் தொடரில் இரண்டு 'சதங்களை' விளாசித் தள்ளினார்.

★ ஒலிம்பிக் போட்டியில் *Figure Skating* இல் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்ட 15 வயதான ராறா லிப்பின்ஸ்கி *(Tara Lipinski)* மினியா பொலிசில் நடைபெற இருக்கும் உலக சம்பியம் போட்டிகளில் சுகவீனம் காரணமாக கலந்து கொள்ள மாட்டாரென அறிவிக்கப்பட்டுள்ளது.



★ சர்ச்சைக்குரிய முன்னாள் அதி அபார குத்துச் சண்டை வீரர் மைக்ரைசனுக்கு எதிராக இரு பெண்கள் 22.5 மில்லியன் டாலர் நஷ்டஈடு கோரி வழக்குத் தொடுத்துள்ளனர். ரைசனின் கோரிக்கைகளுக்குத் தாம் இணங்காததால் தம்மை மானபங்கப்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே வேறு ஒரு பெண்ணுடன் பலாத்காரம் பிரயோகித்து சிறைத்தண்டனை பெற்று விடுதலையான வீரர் இந்த ரைசன் என்பது குறிப்பிடத்தக்கது.

★ 2008ம் ஆண்டு நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கு ரொறன்ரோ நகரம் தன்னைத் தயார் படுத்தியிருக்கின்றது. பாரிஸ் (பிரான்ஸ்), புஸறெஸ் எயர்ஸ் (ஆர்ஜன்டீனா) ஆகிய நகரங்களும் போட்டியில் குதிக் கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. 1996ம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கு ரொறன்ரோ ஆசைப் பட்டது. ஆனால் அதிஷ்டம் அட்லாண்டாவிற்குக் கிடைத்தது.

★ மேற்கிந்திய தீவுகள் அணிக்கும், இங்கிலாந்து அணிக் கும் இடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டித் தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி 3-1 என்ற கணக்கில் வெற்றி யீட்டியுள்ளது. தொடரின் இறுதியில் இங்கிலாந்து அணிக்கு ஐம்பத்திரண்டு முறை தலைமை தாங்கிய மைக்கல் அதற்றன் தனது தலைமைப் பதவியை ராஜினாமா செய்துள்ளார். இவ்விரு அணிகளுக்குமிடையே நடைபெற்ற ஒருநாள் போட்டித் தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி 4-1 என்ற கணக்கில் வெற்றியீட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



★ இந்திய அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையே இந்தியாவில் நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட கிரிக்கட் தொடரில் இந்திய அணி 2-0 என்ற கணக்கில் பெருவெற்றியீட்டியது. தலைமைப் பதவியைப் பறிகொடுத்த சச்சின் தெண்டுல்கார் அபாரமாக ஆடி தரம்பிரிக்கும் கணனியின் கணிப்பின்படி முதலாம் நிலை ஆட்டக்காரராக வந்துள்ளார். பதவி போனதும் பழு குறைந்துள்ளது போலும்.

★ பாபடோஸ் கிரிக்கட் மைதானத்தில், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட *Greendige - Haynes* அரங்கு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. 80களில் உலக கிரிக்கட் அரங்கில் மிகச் சிறந்த ஆரம்ப ஜோடியாகக் கணிக்கப்பட்ட இவர்கள் இருவரும் *Barbados* அணியைச் சேர்ந்தவர்களாவர். திறப்பு விழாவின் போது இங்கிலாந்திற்கு எதிராக மேற்கிந்திய தீவுகள் உபவேந்தர் அணிக்கு இவ்விருவரும் காட்சிப் போட்டியில் ஆரம்ப ஜோடியாக 117 ஓட்டங்களை எடுத்து *Old Is Gold* என்பதை நிருபித்தனர்.

★ உதைபந்தாட்டத்தின் ஜம்பவான்களான பிரேசிலும், ஜேர்மனியும் மார்ச் மாதம் 23ம் திகதி 'ஸ்ரும்காட்' டில் மோதிக் கொண்டன. பிரான்சில் நடைபெற இருக்கும் உலகக் கோப்பைக்கான இறுதிப் போட்டியில் இவ்விரண்டு அணியும் கலந்து கொள்ளுமென எதிர்பார்க்கப்படுவதால், இரண்டு அணிகளும் முழுப் பலத்துடன் மோதிக் கொண்டன. 'சுப்பர் ஸ்ரார்' என வர்ணிக்கப்படும் *Ronaldes* இன் சிறந்த ஆட்டத்தால் பிரேசில் 2-1 என்ற கணக்கில் வெற்றியீட்டியது.

★ சர்ச்சைக்குரிய *Ice Dancing* எனும் நிகழ்ச்சியை அடுத்த ஒலிம்பிக் போட்டியிலிருந்து நீக்கிவிட சர்வதேச ஒலிம்பிக் குழு முடிவெடுக்க இருப்பதாக அறியப்படுகின்றது. இதற்கான பூர்வாங்க கூட்டம் அடுத்த மாதம் நடைபெறும். இப்போட்டி 1976ம் ஆண்டே முதன் முதலாக ஒலிம்பிக் போட்டியில் அறிமுகப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.



தோல்வியுடன் சம்பஸ்



NO:1 Marcelo Rios of Chile





# மனோரஞ்சிதம்

வீடியோ கசட்

இப்பொழுது
அனைத்து
தமிழ் வர்த்தக
நிலையங்களிலும்
விற்பனையாகிறது.

**$5** மட்டுமே!

(416) 287 9119




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# S.K. BALES
## DRIVING SCHOOL

எம்மால் தமிழ் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கைநூலைப் படிப்பதால் G1 பயிலுனர் பத்திரத்தை விரைவில் பெற்றுக் கொள்ளலாம். சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் உண்டு.

S. K. பாலேஸ் (O.S.L.)
ஒன்ராறியோ பாதுகாப்புச் சபையில்
அங்கீகாரம் பெற்ற மிகச் சிறந்த சாரதிப் பயிற்சியாளர்

**Bus.: (416) 265 1297**
**Res.: (416) 265 3920**
2500 Eglinton Ave. East, Suite 201,
(at Midland) Scarborough, ON. M1K 2R5

- குறுகிய காலத்தில் பல நூற்றுக் கணக்கான மாணவர்கள் சித்தியடைந்த ஒரே ஸ்தாபனம், ஆதாரம் எம்மிடம் உண்டு.
- 95% வீதிப் பரீட்சையில் சித்தியடையச் செய்யும் கடினமான வேலைக்கு எமது பாடசாலை பொறுப்பு. சாதாரண 5% மட்டுமே உங்களின் உழைப்பு
- G1, G2 வீதிப் பரீட்சைக்கான திகதி அதிவிரைவில் எடுத்துக் கொடுக்கப்படும்
- வாகனக் காப்புறுதிக் கழிவுச் சான்றிதழ் விரைவில் தரப்படும்.
- 41% வாகனக் காப்புறுதிச் சான்றிதழ் விரைவில் தரப்படும். குறைந்த செலவில் வாகனக் காற்புறுதி ஒழுங்கு செய்து தரப்படும்
- 40 நிமிட இரண்டாம் கட்ட வீதிப் பரீட்சைக்கு வாகனப் பயிற்சி வழங்குவது நமக்குக் கைவந்த கலை.
- ஸ்ரான்டட் (Standard) வாகனங்களிலும் பயிற்சி அளிக்கப்படும்.

# K.M. ENTERPRISE

Tel: (416) 289 1730 Fax: (416) 289 6425

**DRY CLEANING SERVICE**

குறைந்த செலவில் ஒரு நாளில்
பெற்றுக் கொள்ளலாம்
(416) 289 1730



**Service**
Fax, Photocopy
Video Transfer
PAL - SECAM - NTSC
Greeting Cards
Stamps& Gift Items



**42 Tuxedo Crt, Scarborough, ON. M1G 3S3**
**Markham/ Ellesmere**

புதிய நிர்வாகத்தின் கீழ்

## TUXEDO GROCERIES

**Tel: (416) 438 1299**

Sri Lankan, East - West Indian Groceries
Fresh and Frozen

**இலங்கை, இந்திய, மேற்கிந்திய, கிழக்காசிய, கனடிய உணவுப் பொருட்கள், மளிகைச் சாமான்கள் மரக்கறிகள் யாவும் மிகக் குறைந்த விலையில்**

**இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள்**

**வீடியோ, ஓடியோ, CD**
**வீடியோ பிரதி மாற்றம் PAL to NTSC to PAL**
**அனைத்தையும் மலிவான விலையில் தரமான பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பென்ஹாரு'க்குப் பின் 11 ஒஸ்கார்கள் பெறும் 'டைட்டானிக்'

1912ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 14ம் திகதி விரைவில் தனது கன்னிப் பயணத்தை முடித்துவிடப்போகும் ஆனந்தத்தில் வந்த அந்தக் கப்பல் மிதந்து கொண்டிருந்த பிரமாண்டமான பனிக்கட்டிப் பாறையுடன் திடீரென்று மோதியது. அந்தத் தாக்கத்தினால் ஏற்பட்ட விரிசலினால் 15ம் திகதி அதிகாலை 2.20 மணிக்கு சமுத்திரத்துடன் சங்கமமாகியது. எத்தனையோ கப்பல்கள் சமுத்திரத்துடன் சங்கமமாகியிருக்கின்றன. சங்கமமான கையோடு அவற்றுள் பல மக்களால் மறக்கப்பட்டும் போய்விட்டன. ஆனால் 1912ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 2.20க்கு சமுத்திரத்தில் கலந்துபோன கப்பல் அப்படியான ஒன்றல்ல.

அந்தக் காலம்வரை கட்டப்பட்ட கப்பல்களில் மிகப்பெரியது அது. அதன் பெயர் டைட்டானிக். தானாகவும் மூழ்காது, எதனாலும் அதை மூழ்கடிக்க முடியாது என்று எதிர்பார்க்கப்பட்ட கப்பல் அது. பிரித்தானியாவுக்கு சொந்தமான அந்த உல்லாசப் பிரயாணக் கப்பல் இங்கிலாந்தில் உள்ள சௌதம்படன் துறைமுகத்தில் இருந்து தனது பிரயாணத்தை ஆரம்பித்தபோது உலகத்திலுள்ள பெரும் பணக்காரர்கள், பெரும் எழுத்தாளர்கள், தொழில் அதிபர்கள் என்று ஆயிரக்கணக்கானோர் அதில் பிரயாணம் செய்தனர். நியூயோர்க் துறைமுகத்திற்கு பிரயாணம் செய்து வந்த அந்தக் கப்பல் கனடா நாட்டின் நியூபவுண்ட்லான்டிற்கு 640 கிலோமீற்றர் தொலைவில் வந்து கொண்டிருந்த போது மிதந்து கொண்டிருந்த பனிப்பாறை ஒன்றுடன் மோதியது. அந்தத் தாக்கத்தினால் சேதமடைந்த கப்பல் 1500க்கும் அதிகமானோருடன் நீரில் மூழ்கிவிட்டது. கப்பலில் இருந்தவர்களில் பலர் உயிர் தப்பினார்கள். அவர்கள் உயிர் தப்பினார்கள் என்பதை விட தப்பவைக்கப்பட்டார்கள் என்பதுதான் சரியானதாகும். ஏனெனில் உயிர்காப்பு படகுகள் ஒருசிலதான் அங்கிருந்தன. சாவு நிச்சயம் என்று தெரிந்த பின்னும் தாங்கள் உயிர்தப்பி வேண்டுமென்று படகுகளில் முண்டியடித்துக் கொண்டு ஏறாது; பெண்கள் குழந்தைகள் போன்றோர் தப்பவைக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் அவர்களைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்த தீரர்களின் கதை இந்த டைட்டானிக்குடன் கலந்து இருப்பதால்தான் அந்தக் கப்பலின் கதை ஒரு நீண்ட கதையாகச் செல்கிறது.



டைட்டானிக் கப்பலின் கதை பல நாவல்கள், சினிமா படங்களுக்கு கருவூலமாக அமைந்துள்ளது. கடைசியாக வந்த டைட்டானிக் என்ற திரைப்படம் பல சாதனைகளைப் புரிந்து வருகின்றது. இதுவரை எந்த ஆங்கிலப் படத்துக்கும் செலவு செய்யப்படாத 200 மில்லியன் டாலரில் தயாரிக்கப்பட்ட படம். திரையிடப்பட்டதும் ஒரு நிமிடத்திற்கு ஒரு மில்லியன் டாலரை சம்பாதிக்கிறது. பென்ஹர் என்ற திரைக்காவியம் 11 ஆஸ்கார் விருதுகளைப் பெற்ற பின் டைட்டானிக்தான் அந்தளவு விருதுகளைப் பெற்றுள்ளது. சினிமாத் துறைக்கு மொத்தம் 14 ஆஸ்கார்கள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. அதில் 11ஐ டைட்டானிக் தட்டிக் கொண்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் இடம்பெற்ற விழாவின்போது இந்த விருதுகள் வழங்கப்பட்டன. இந்தப் படத்தின் மாபெரும் வெற்றிக்கு அயராது உழைத்த ஜேம்ஸ் கேமரூனுக்கு சிறந்த இயக்குனருக்கான ஆஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது. அதைப் பெற்றபோது தாங்கமுடியாத மகிழ்ச்சியில் ஆழ்ந்துபோன ஜேம்ஸ் கேமரூன் இந்த உலகின் அரசன் நான் என்று கூறிக் குதித்தார். அவர் கூறிய இந்த வாசகம் டைட்டானிக் படத்திலும் வருகிறது. படத்தின் கதாநாயகன் லியர்னாடோ டிகாப்பிரியோ இதனைக் கூறுகின்றார்.

சிறந்த இயக்கம், படம் பாடல், படத் தொகுப்பு, கதை தொடர்பான இயக்கம், உடைகள், காட்சிகள் தொடர்பான செயல் நுட்பம், மூல இசையமைப்பு, ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு, சிறந்த ஒலித்தன்மை ஆகியவற்றிற்கு மொத்தம் 11 ஆஸ்கார் விருதுகள் கிடைத்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோரஞ்சிதம்

## செல்வகுமாருடன் ஒரு சந்திப்பு

வணக்கம் செல்வகுமார் உங்கள் வீடியோ நாடாவில் அன்னபூரனாஸ் வெளியீடு என்று பெயரிட்டிருந்தீர்கள். அத்தோடு அதன் சின்னமாக கப்பலையும் பதித்துள்ளீர்கள். அதற்குக் காரணம் என்ன?





1930ம் ஆண்டு இலங்கையிலிருந்து அமெரிக்காவிற்கு 7 தமிழர்களால் அன்னபூரனி என்ற பாய்க்கப்பல் ஓட்டிவந்து ஒப்படைக்கப்பட்டது. அதனையே எனது ஒளிப்பதிவு நாடாவின் வெளியீட்டு நிறுவனத்தின் பெயராகவும் சின்னமாகவும் வைத்தேன். அந்த சாதனையின் நினைவாக.

* நீங்கள் உள்ளூர் கலைஞர்களின் தயாரிப்பு என்று மனோரஞ்சிதத்தை செய்கிறீர்கள். ஆனால் இசையமைப்பு ஏன் தென்னிந்திய கலைஞர் ஒருவரினால் இசையமைக்கப்பட்டது?

ஒளிப்பதிவு செய்ய போதிய இடவசதிகள் இல்லாத காரணத்தினாலும் மற்றும் எமது பொருளாதாரம் தடையாக இருந்ததினாலும் இதை இந்திய இசையமைப்பாளர் மூலமாக இந்தியாவில் இசையமைத்து ஒளிப்பதிவு செய்யப்பட்டது.

* உங்கள் மனோரஞ்சிதம் வீடியோ வெளியீட்டு விழாவிற்கு ஏன் மிகவும் குறைவானவர்களே வந்திருந்தார்கள்?

விளம்பரதாரர் சிலரின் வற்புறுத்தலினால் மிகக் குறுகிய காலத்தில் வெளியீடு செய்யவேண்டியிருந்தது. அத்தோடு அன்றைய தினம் இன்னும் பல நிகழ்ச்சிகள் இருந்ததினாலும் பலருக்கு தனிப்பட்ட முறையில் அழைப்பு கொடுக்க முடியாமையினாலுமே குறைவானவர்கள் வந்திருந்தார்கள்.

* உங்கள் மனோரஞ்சிதம் வீடியோ நாடாவில் நடிகர்களை நீங்கள் எவ்வாறு தெரிவு செய்துள்ளீர்கள்? ஏனென்றால் ஒவ்வொருவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பாத்திரங்களை ஏற்று மிகவும் சிறப்பாகவே செய்துள்ளார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதனாலேயே இதைக் கேட்கிறேன்.

நடிக நடிகர்களை பத்திரிகை மூலமாகவும் வானொலி மூலமாகவும் விளம்பரங்களைக் கொடுத்து அவர்களுடைய திறமைகளைப் பார்த்தே தேர்ந்தெடுத்தேன்.

* உங்களுடைய பாடல்களில் வெண்ணிலா என்ற பாடலில் இளம் கலைஞர்களின் நடனம் எங்களுடைய கலாசாரத்திற்கு ஏற்றதாக அமையவில்லை என்று எண்ணுகிறேன். அதற்கு உங்களுடைய கருத்து என்ன?

இந்த நாட்டு கலாசாரத்திற்கு ஏற்றதாக அவர்களை நடிக்க வைத்திருந்தாலும் ஒருவரை ஒருவர் சேர்ந்து நடிக்க நான் விடவில்லை. அத்தோடு அந்தப் பாடல் வரிகளில் தலைக்கேறி பித்தம் சென்றாலும் பண்பாடு எம்மை கட்டுப்படுத்துகின்றது என்று சொல்லியுள்ளேன். அத்தோடு இப்பாடல் இளைஞர்கள் மத்தியில் மிகவும் வரவேற்பு பெற்றுள்ளது.

* உங்கள் வீடியோ நாடாக்கள், கனடாவில் வெளிவந்தவற்றில் அதிக பிரதிகள் விற்பனையானது என்ற பெயரையும் தட்டிக் கொண்டது. இது உண்மை தானா? இதற்கு காரணம் என்ன?

நீங்கள் கூறுவது உண்மைதான். நாங்கள் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்ததினாலும், சகல தமிழ் வர்த்தக நிலையங்களுக்கும் விநியோகம் செய்ததினாலும் அத்தோடு விநியோகத்தை செய்த விநியோக நிறுவனமும் ஆர்வத்துடன் செய்ததினாலும் அந்தப் பெயரை தட்டிக் கொண்டது.

* உங்களுடைய அடுத்த முயற்சி என்ன?

விடுதலைப் பாடல் அடங்கிய வீடியோ நாடாவை வெளியிடுவதும் அத்தோடு வீடியோ குறுந் திரைப்படம் ஒன்று வெளியிடுவதும் எனது நோக்கம்.

* உங்கள் குறுந் திரைப்படத்தைப் பற்றி தமிழ் ரைம்ஸ் வாசகர்களுக்கு ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

குறுந் திரைப்படத்தின் பெயர் 'புகழிடம்'. படத்தின் கமராவை R.K. குமார் இயக்குகின்றார். படப்பிடிப்பு ஆகஸ்ட் மட்டில் கனடாவின் பிரபல்யமான இடங்களில் எடுக்கப்பட இருக்கின்றது. பாடல் பதிவுகள் சித்திரை புதுவருடத்தில் ஆரம்பமாகின்றது. இந்த குறுந்திரைப்படத்தில் 4 பாடல்கள் அடங்குகின்றன. படத்தின் கதாநாயகன், நாயகி புதுமுகங்கள் அறிமுகமாகின்றனர். கதை, திரைக்கதை, வசனம், டைரக்ஷன் உங்களில் ஒருவனாகிய நானே செய்கிறேன்.

பல புதுமைகளை புகுத்தி இயக்கிய மனோரஞ்சித இயக்குனர் செல்வகுமாருக்கு நன்றியும், பாராட்டுக்களும். தொடர்ந்தும் உங்கள் முயற்சிக்கு என்றென்றும் எங்கள் வாழ்த்துக்கள்.

● சோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் கிரியேட்டஸ்இன்
# குறுக்கெழுத்துப் போட்டி
## இல.:2

தயாரிப்பு
**குயின்ரஸ் துரைசிங்கம்**

உங்கள் பதில்களை மே மாதம் 10ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.

முகவரி:
Thamil Times Canada
F.P.P.O., P.O.Box 45593, 747 DonMills Road
ON. Canada. M3C 3S4
தொலைநகல்: 416 425 1202

சரியான பதிலை எழுதும் அதிட்டசாலி ஒருவருக்கு $20 பெறுமதியான பரிசுக் கூப்பன் வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.: 1 - முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 து | 2 ரி | 3 யோ | 4 த | 5 ன | 6 ன் | ■ |
| 8 ப் | ■ | 10 க | 11 த் | 12 தி | ■ | 14 ச |
| 15 பா | 16 த | 17 ம் | 18 ச | 19 ர | ■ | 21 ந் |
| 22 க் | 23 ட | ■ | 25 ம் | 26 த் | 27 த | 28 நி |
| 29 கி | 30 ட் | 31 டு | ■ | 33 ம் | 34 ன | 35 தா |
| ■ | 37 சு | 38 பா | 39 ம் | 40 இ | 41 வ | 42 ன |
| 43 ச | 44 ச் | 45 ய் | 46 பா | ■ | 48 ம் | 49 ம் |

பரிசு பெறும் அதிட்டசாலி
**வி. கண்ணன்** - *ஸ்காபுரோ*

### இடமிருந்து வலமாக:

1. பிந்திய காலத்தில் சிவாஜிக்கு மரியாதை பெற்றுக் கொடுத்த திரைப்படம்
10. இந்த ............... பிடாரி ஓர் புகழ்பெற்ற நாடகம் - நாட்டுக்கூத்து
22. நம் நாட்டிலே இது நாளுக்கு நாள் நடக்கிறது
25. பிலிப்பைன்ஸ் நாட்டிலே உள்ள ஓர் தீவு
29. உடையிலே இது பட்டுவிட்டால் அகற்றுவது கடினம் (குழம்பி வருகிறது)
44. வியாபாரம் - அரசியல் இரண்டிற்கும் இது மிக மிக அவசியம்
43. தத்துவங்களைத் தமிழில் முத்துக்களாகத் தெளித்த பெருந்தகை இவர்

### வலமிருந்து இடமாக:

21. பொருளியல் வரலாறு என்பதை இப்படிச் சுருக்கிக் கூறுவர்
35. திரிக்கவும் முடியும், கட்டவும் உதவும்
39. கர்ணன் இறுதிவரை இக்குணத்தை இழக்கவில்லை

### மேலிருந்து கீழாக:

1. சகோதரர்களிடையே இது அதிகம் காணப்படும். ஒரே முகம் என்பர்
3. நகலுக்கு எதிர்ப்பதம், .................... நகலும் என்பார்கள்
4. சொல்லால் ......................., இல்லையேல் உன்னை மடக்கிவிடுவார்
5. தொலைபேசியிலிருந்து இப்படிச் சத்தம் வரும்
6. வள்ளுவர் கூறுகிறார், .................. நாகாக்க!
7. தமிழினத்தின் விசேட பண்டிகை
26. மச்சத்தை இப்படி அழைப்பர், .........பிரதி என்பார்கள்
39. உறைவிடத்தை ............. விடம் என்பார்கள்

### கீழிருந்து மேலாக:

44. உமையம்மை வணக்கத்தில் அபிராமபட்டர் இப்படிக் கூறுகிறார்.....

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் .......... அறியா
மனம்தரும் தெய்வ வடிவும்தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம்தரும்
அன்பர் என்பவர்க்கே கனம்தரும்
பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | ■ | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | ■ | 17 | 18 | ■ | 20 | 21 |
| 22 | 23 | ■ | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | ■ | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | ■ | 41 | 42 |
| ■ | 44 | 45 | 46 | 47 | 48 | ■ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘களங்கம்’


எனது பார்வையில்

• ஆசிரியர் பெனடிக்ற்

உலகின் கண்ணாடி உள்ளம்; உலகின் அளவுகோல் உள்ளம், உலகின் உயிர்துடிப்பு உள்ளம்; உலகின் மருந்தும் உள்ளம்.

உலகில் நடைபெறும் சில தீய நிகழ்வுகளையும் தவறுகளையும் ஒழித்துக் கட்ட, அவை உதயமாகும் உள்ளங்களை முதலில் அணுக வேண்டும். அவைகளைத் தொட்டுக் குணமாக்க வேண்டும். அறிவினால், அன்பினால் இறையருளினால் மக்கள் உள்ளங்களைத் தொட்டு நலமாக்கலாம். இதேபோல் கலையினாலும் தீமையை வெல்லமுடியும்.

இதை பிரதிபலிக்கும் முகமாக ரொறன்ரோ திருமறை கலாமன்றம் இவ்வருடம் தவக்கால இறுதி நாட்களில் ‘களங்கம்’ ஊடாக எங்கள் உள்ளங்களைச் சந்திக்க வைத்துள்ளது. கிறிஸ்துவின் பாடுகள் மரணத்தை நினைவூட்டும் முகமாக வேறுபட்ட நோக்கில் இறைமகன் யேசுவின் மரணத்திற்குக் காரணம் யார் என்பதை ஓர் இசை, உரை, நாடக வடிவில் ‘களங்கம்’ என்ற தலைப்பில் மேடையேற்றி எங்கள் ஒவ்வொருவரையும் சிந்திக்கச் செய்தது. இறைமகன் யேசுவின் மரணத்திற்கு ஆதி மனிதன் மட்டுமல்ல நாமும் தான் என்பதை ‘களங்கம்’ நியாயப்படுத்தியது.



இவ் வருடம் இக் கழகத்தின் இயக்குனர் கலாநிதி அருட்திரு நீ. சேவியர் அடிகளார் இங்கு இல்லாத போதும், கலாநிதி அருட்திரு போல்ராஜ் அவர்களின் நெறியாள்கையினாலும், மன்றத்தின் கூட்டு முயற்சியாலும், ஒவ்வொருவரின் தன்நம்பிக்கையினாலும் சித்திரை 4ம் திகதி ஸ்காபரோவில் இரண்டு காட்சிகளும், சித்திரை 5ம் திகதி மிசிசாகாவில் இரண்டு காட்சிகளும் சிறந்த முறையில் மேடையேற்றப்பட்டு பல ரசிகர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது. நாலு காட்சிகளிலும் மக்கள் நிறைந்து, கலைஞர்களின் திறமைகளை அவதானித்து ரசித்த வண்ணமாகக் காணப்பட்டனர். மண்டபம் அமைதியாக இருந்தது. நிகழ்ச்சி குறிக்கப்பட்ட நேரத்திற்கு சற்று தாமதித்து தலைவர் திரு. விக்டரின் வரவேற்புடன் ஆரம்பமாகியது. தமிழ்த் தாய் வணக்கம் திருமதி சித்திரா பீலிக்ஸ், திரு. ஜீவரட்ணம் அவர்களால் பாடப்பட்டது. எமது பங்குத் தந்தை அருட்திரு ராஜரட்ணம் அடிகளார் தனது ஆசியுரையில் கலைஞர்களைப் பாராட்டியதோடு, மேலும் மேலும் இம் மன்றம் வளர்ச்சியடைய வாழ்த்தி உரையாற்றினார். களங்கத்தின் ஒவ்வொரு கலைஞர்களும் தத்தம் பாத்திரங்களுக்கு ஏற்ப நடித்து எல்லோரினதும் உள்ளங்களைக் கவரச் செய்தனர். மேடை அமைப்பு, மேடை நிர்வாகம், ஒலி, ஒளி அமைப்பு பிரமாதம். ஒப்பனை மிகவும் சிறப்பு. பாடல்கள் இசையமைப்பு எல்லோர் உள்ளங்களையும் கொள்ளை கொண்டது. பாவங்களுக்குக் காரணமான வழிகளை இன்றைய நடையில் மாற்றியிருந்தால் ‘களங்கம்’ மேலும் சிறப்பாக இருந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LUXMY GROCERIES

1214 A King St. West
Toronto, ON.

**Tel: (416) 538 8974**



East Indian, West Indian, Sri Lankan & Canadian Foods
Fresh Vegetable, Frozen Fish, CD's & Audio

உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட்களான மரக்கறி கடல் உணவு வகைகள், மாமிச வகைகள், பால், முட்டை, பலசரக்கு வகைகள் அனைத்துக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்

**லஷ்மி குறோசறி**

புதிய, பழைய Audio, Video, CD பிரதிகள் வாடகைக்கும் விற்பனைக்கும், வீடியோ பிரதி மாற்றத்திற்கும் எம்மை நாடுங்கள்.

**துரித பணமாற்றுச் சேவை**

**உலகின் பல நாடுகளுக்கும் பணமாற்றம் செய்து தரப்படும்.**

# A.R.A. RESTAURANT


**1212 King St. West, Toronto, ON**

**Tel: (416) 531 7918 Fax: (416) 538 1160**

இலங்கை, இந்திய, கனடிய உணவு வகைகளை கைதேர்ந்த உணவுத் தயாரிப்பவர்களால் செய்யப்பட்டு சுடச் சுட பரிமாறுகிறார்கள்.

மதுபான அங்கீகாரமுண்டு.

திருமணம், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் அனைத்திற்கும் இட வசதியும், உணவுச்சேவையும் செய்து தரப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மொத்தம் 14 விருதுகளில் டைட்டானிக் படத்துக்கு 11 ஒஸ்கார் விருதுகளே கிடைத்தன. சிறந்த, நடிகர், நடிகை, சிறந்த துணை நடிகைக்கான விருதுகள் கிடைக்கவில்லை.

சிறந்த நடிகர் ஜாக் நிக்கல்சன் (Best Actor - Jack Nicholson)
சிறந்த நடிகை ஹெலன்ட் ஹன்ட் (Best Actress - Helen Hunt)
படம்: ஆஸ் குட் ஆஸ் இட் கெட்ஸ் (Film as Good as it Gets)

சிறந்த துணை நடிகை கிம் பேசிங்கர் (Best Supporting Actress - Kim Basinger)
படம்: எல் ஏ. கான்பிடென்ஷியஸ் (Film - L.A. Confidential)


**உங்களிடமிருந்து
சிறுகதை, கவிதை, கட்டுரை, தொடர்கதை,
துணுக்குகள், சிறு நகைச்சுவை
போன்ற ஆக்கங்கள் எதிர்பாக்கப்படுகின்றன.**

கனடா

*Thamil Times* Canada
F.P.P.O., P.O.Box 45593, 747 DonMills Road, ON., M3C 3S4.
Fax: 416 425 1202.

**விநியோக சேவை**
சோதி
**(416) 724 4254**




'ஜீன்ஸ்' படத்தில் ஐஸ்வர்யாராய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாண்டு நினைவில்...



ஈழமண்ணில்
05.05.1970

இறைநிழலில்
10.05.1989

மண்ணின் மைந்தன்

## அகிலன் திருச்செல்வம்

*பாரதத்தில் இவன் அபிமன்யு; இராமாயணத்தில் இவன் இந்திரஜித்*
*சகுந்தலை வயிற்றில் இவன் பரதன்; ஈழமண்ணில் இவன் பெயர் 'அகிலன்'*

*புராணங்களிலும் காவியங்களிலும் இவனைப் படித்தோம்!*
*தாயகமண்ணில் இவனைப் பார்த்தோம் பழகினோம்.....*

*பல்கலை கற்ற பண்டிதன் போலும்; வில்லினை வளைக்கும் விஜயனைப் போலும்*
*சொல்லிடும் தமிழில் பாரதி போலும்; துள்ளித் திரிந்த மண்ணின் மைந்தன்*
*நல்லைக் குமரன் அழைத்த வேளை; பறந்து சென்றான் பழமுதிர் சோலைக்கு!*

*இருபத்து எட்டு ஆண்டுகளாயினும்; இன்னும் எத்தனை யுகங்களாயினும்*
*கண்ணின் மணியே கரும்பே தேனே! எம் மண்ணில் தினமும் தோன்றிடும்*
*'சூரியன்' நீயே என்றே வாழ்த்தி வணங்கிடுவோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகிதத்தில் காதல் செய்து...

• வீணைமைந்தன்

கவிதை

அது ஒரு மளிகைக் கடை,
கல்லாப் பெட்டிக்குக் கீழே
பலான பத்திரிகைகளும் பரப்பிக் கிடந்தன,
புலம் பெயர்ந்த எழுத்துக்கள்
ஒரு ஓரத்தில் புலம்பிக் கொண்டிருந்தன,

மல்லாந்து படுத்துக் கொண்டு
எச்சிலைத் துப்பினால் அது எங்கே விழும்!
அவர்களது முகத்தில் அது வழிந்து கொண்டிருந்தது!
ஆனாலும் ஆனந்தமாகக் கடைக் கதவில்
அன்று காலை முதலெழுத்துத் தெரியாதவர்களினால்
எழுதி ஒட்டப்பெற்ற கிசு கிசு சமாச்சாரத்தைக்,
கடைவாயில் உமிழ்நீர் வடிவது தெரியாமல்
எழுத்துக் கூட்டிக் கொண்டிருந்தார்கள்!

இந்த மண்ணில் இது ஒரு நல்ல பொழுதுபோக்கு,
நாய் விற்ற காசு குரைக்கவா செய்யும்,
தம்பி 'அந்தப்' புத்தகம் வந்திருக்கு,
அதிகம் ஸ்ரொக் இல்லை,

ஆவலுடன் அகலத் திறந்தன அவனது விழிகள்,
இப்போது அவனது பார்வை,
அவளது பிறந்த மேனியை
அங்குலம் அங்குலமாய் சேதப்படுத்தியது,

அந்தப் பலான புத்தகத்தின் அட்டைப் படம்
அவ்வளவு கவர்ச்சியாக இருந்தது,
உடனே அவளைக் காந்தர்வ மணம்புரியக்
காசுகளை வீசியெறிந்தான் கல்லாப்பெட்டி ஆசாமிக்கு,

கீழே விழுந்த சில்லறைகளைக்
கனடிய வியாபாரி பொறுக்கிக் கொண்டிருக்க,
காளையவன் காகிதப் பொம்பிளையை
அணைத்துக் கொண்டு,
அடுக்கு மாடித் தொடர் அறைக்குள்
வேகமாக நுழைந்தான்,
அந்த அறையின் சுவர்களில் எல்லாம்
மேலும் பல நிர்வாண அழகிகள்
ஆணி அடித்துச் சிறைவைக்கப்பட்டிருந்தார்கள்,

புதிதாக வந்தவளைப் பார்த்துக்
கழிவிரக்கம் கொண்டார்கள்,
நாளையோ நாளை மறுநாளோ அவள் எங்களில்
ஒருத்தி,

இனிக் காகிதக் காதலி புலம்புவதைக் கேளுங்கள்;

இவன் ஆணா ஆணுடையணிந்த பேயா
இல்லை அலியா!
காகிதப் பெண்ணான என்னை எவ்வளவு கேவலமாக,
மோசம் செய்து கொண்டிருக்கிறான்,
நல்ல வேளை நான் உயிருடன்
இவனிடம் சிக்கவில்லை,

கசாப்புக் கடைக்காரனிடம் கூட ஒரு நளினம் இருக்கும்!
இந்த வெறிபிடித்த நாயிடம்
கற்பனையோ கலாரசனையோ
துளிகூடக் கிடையாது!

எனது வறுமைக்காகத் தான்
ஆடை களைந்து போஸ் கொடுத்தேன்,
அரை நிர்வாணமோ முழு நிர்வாணமோ
எனக்குத் தெரிந்தது துறவு நிலை,

யாழ்ப்பாணத்தில் ஆமிக்காரன் துகிலுரிவதற்கும்,
இவன் என்னைச் சீரழிப்பதற்கும்
எனக்கு அதிக வித்தியாசம் தெரியவில்லை,
நீ யார் என்று கேட்டால்
"நான் ஒரு அகதி' என்கிறான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



வரணி வடக்கைச் சேர்ந்த

**கற்பகம் சின்னத்தம்பி**

*05.04.98 அன்று வரணியில் காலமானார்.*

*இவர் காலஞ் சென்ற பொன்னர் தம்பதிகளின் அன்பு மகளும் சினிமாஸ் லிமிரெட் சின்னையாவின் அன்புச் சகோதரியும், மீனாட்சி, சின்னையா, கணேசன், வேலாயுதம், சிவா-சின்னத்தம்பி, கந்தையா, செல்வி இலக்ஷ்மி, சிவானி, ரத்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், நடேசன், கந்தசாமி, கணபதிப்பிள்ளை, தர்மராஜா, காலஞ்சென்ற நாதன், விசாலாட்சி, அற்புதமலர், விமலேஸ்வரி, ஈஸ்வரி, ஜகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், விக்னேஸ்வரன், ஜகதீஸ்வரன், ரதிதேவி, சீதாதேவி, கவிதாதேவி, சிவசுதன், சிவதேவி, சிவசோதி, சிவசாம்பவி, கலாநிதி, கௌரிநிதி, சுகந்தநிதி, தமிழினி, செந்தூர் செல்வி, விபீஷன், தர்மியா, துர்க்கா, துவாரகா, நேதாஜி, கஜானி, கஜான், பிரசாத், சசிகுமார், கணன், நிரஞ்சனா, தர்சி, மாதுசி, கோபி, சுஜீவ், சுகந்தி, கணேஸ்வரன், சபாநாயகம், புஸ்பபாலன், ஜகநாதன், பாஸ்கரன், ஆனந்தன், சத்தியகுமார் ஆகியோரின் பேத்தியாரும், அஜிஷானி, தனுஷா, மிது, மது, விபீ, தாரணி, கஸ்தூரி, சோபனா, ஜனனி, காயத்திரி, மிதுஷன் ஆகியோரின் பூட்டியுமாவார்.*

அன்னாரின் ஈமைக்கிரியைகள் வரணியில் ஏப்ரல் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

**எமது துக்கத்தில் பக்கு கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்**

**சின்னத்தம்பி வேலாயுதம்**
(416) 243 7066
**சிவா சின்னத்தம்பி**
ஸ்ரீசிவா ஜுவலறி, (905) 949 0824

# நன்றி நவிலல்



திருநெல்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி, பேர்லின் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட தேவதாஸ் - சாவித்திரி தம்பதிகளின்

**செல்வப் புதல்வி சாரண்யா**

06.04.98 பேர்லினில் மீளாத்துயில் கொண்டார்.

இவர் திருநெல்வேலி காலஞ்சென்றவர்களான நாகமணி - செல்லம்மா தம்பதிகளினதும், சுப்பிரமணியம் - சிவக்கொழுந்து தம்பதிகளினதும் அருமைப் பேத்தியும்,

தனுஜா, சாரங்கன் ஆகியோரின் ஆருயிர்ச் சகோதரியும், மகேந்திரன், தங்கமலர் (றக்குவானை), லோகேந்திரலிங்கம், பத்மலோசனி (கனடா), சிவராமன், செந்தில்மணி (வவுனியா), நடராஜா, சந்தானலட்சுமி (கனடா), சுந்தரமூர்த்தி, ஜெகதாம்பிகை (மலேஷியா) ஆகியோரின் அன்புப் பெறாமகளும்,

காலஞ்சென்ற இலட்சுமணசாமி, மகாலட்சுமி தம்பதிகளின் ஆசை மருமகளும் ஆவார்.

இறைவன் அடியைச் சேர்ந்த எமது செல்வியின் இறுதி நிகழ்வுகள் 15.04.98 புதன் கிழமை பேர்லினில் நடைபெற்றது.

**எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்**

49 3046 26145 (பேர்லின்)

லோகேந்திரலிங்கம் (416) 412 3092
(416) 724 5044




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NTK FURNITURE



உங்கள் வீட்டு,
அலுவலக தளபாட
வேலைகள்
அனைத்தையும்
உறுதிமிக்கதாகவும்
அழகாகவும்,
குறைந்த செலவிலும்
பெற்றுக்கொள்ள
தரமான தளபாட
விற்பனை நிலையம்




# என்.ரி.கே பேனிச்சர்

3255 Lawrence Ave. E, Unit #4
Scarborough Ontario M1H 3A3

**Tel: (416) 289 6596**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



FOR FAST, PROFESSIONAL & FRIENDLY SERVICE

RE/MAX
Goldenway Realty Inc., REALTOR®
Independently Owned and Operated

**Harinder Singh Lamba**
Sales Representative

3390 Midland Avenue, Unit 8
Scarborough, Ontario M1V 5K3
Fax: (416) 299-0482
Res: (905) 477-4102

MEMBER OF RE/MAX EXECUTIVE CLUB



(416) 299-8199

Serving:
Markham, Scarborough, Ajax,
Pickering & The West End.

**Specializing in**
**Residential, Commercial & Industrial Real Estate**

Call **HARINDER SINGH LAMBA**

**Tel: (416) 299 8199**
**Fax: (416) 299 0482**
**Res: (905) 477 4102**
**Cell: (416) 948 7931**

வீடு வாங்க அல்லது விற்க
பல வருட அனுபவமும்
பல்லின மக்களின் நன்மதிப்பையும்
பெற்ற என்னை நாடுங்கள்

**Our Sales Are Guranteed**

GOLDENWAY REALITY INC., Realtor
3390 Midland Avenue, Unit 8
Scarborough, ON. M1 5K3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Graphic Design, Typesetting & Layout: TCC THAIML CREATORS OF CANADA (416) 202 6362 FAX: 425 1202